OFFICE OF ... REGISTRAR ... 7- APR 1910 ... MADRAS.

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி II } ஸௌம்ய௵ மாசி௴ 1910-௵ பிப்ரவரி௴ { பகுதி 8

## ஆராதனை :
## பொதுக் குறிப்புகள்
### WORSHIP. GENERAL REMARKS

ஆராதனைகள் பொதுவாக வெளிப்படை, அந்தரங்கம், காம்யம், நிஷ்காம்யம், என்ற நான்கு வகை என்றும், சிறப்பாக நோக்கின் பிதிர்க்கள், ஆசாரியன், இஷ்டதேவதை, பரம்பொருள் ஆகிய இவர்களை ஆராதிப்பது என்று நான்குவிதம் என்றும், தெரியவருகிறது.

வெளிப்படை அந்தரங்கம் இவ்வித ஆராதனைகளின் முக்கிய நோக்கம் யாதெனில், நமது உலகத் தொழில்களிலிருந்து நம்மைப் பிரித்து உலகவிஷய லாபம் ஒன்றும் இல்லாத செயல்களில் கொஞ்சமாகிலும் பிரவர்த்திக்கும்படி செய்து, நமது மனதைத் தகுந்தபடி விசாலப்படுத்தி ஏகாக்ரப்படுத்த வேண்டும் என்பதே. இவ்விதமாகச் சுத்தப்பட்ட மனதில் ஆத்மாவின் நிஜரூபம், அசைவற்ற தண்ணீரில் ஆகாயம் பிரதிபலிப்பதுபோல், நன்றாக வெளியாகும். இவ்வாறு வெளியாவதனால் உண்டாகும் ஆனந்தமே எந்நாளும் அழியாது நிலைத்திருப்பது. இந்த ஆனந்தமாகிய ஆத்மானந்தம் மனிதனிடம் இருக்கிறது. இதை அடையும் சக்தியும் இவனிடம் உண்டு. ஆனால் இக்காலத்திய நாகரீகத்தால் மனிதனுக்கு ஏற்படும் தொழில்களில் அவன் மனம் அழுந்தி அசுத்தப்பட, அவன் காலத்தைப் பெரும்பாலும் அவைகளிலேயே ஓயாது கழிப்பதால், இவ்வித ஆராதனைகளுள் ஒன்றையும் செய்யக் காலமில்லாமற்போக, வரவர உலக விஷயங்களில் அவன் பற்றுடையவனாகி அசுத்தனாகிறான். இதிலிருந்து மனிதர்களைக் காக்கவே இவ்விருவித ஆராதனைகளும் ஏற்பட்டுள்ளன.

காம்ய நிஷ்காம்ய ஆராதனைகளும் இதையே நோக்கமாக உடையன. மேலும் உலகத்தில் ஸாதாரணமாக ஸுகதுக்கங்கள் மாறிமாறி வரும். இதில் ஸுகத்தைத் தக்கவைக்கவேண்டும், துக்கத்தை நீக்கவேண்டும் என்று மனிதனுக்கு வீண் ஆசை. ஆகவே துக்கக்காலத்தில் அது நிலையற்றது, மிகுந்த வெறுப்பை உண்டாக்குவது என்று உணர ஒருவனுக்குச் சித்தசுத்தி உண்டாகின்றது. ஸுக காலத்திலோ அவ்வாறின்றி மனிதனுக்குப் புத்திமழுங்கிப் போகின்றது. ஸுகத்தின் நிலையாமை அப்பொழுது விளங்காமல் போக அதில் மனம் அழுந்தி மனிதன் மனம் கலங்குகிறது. காம்ய ஆராதனை மூலமாக வேதம் மனிதன் மனதில் ஆராதனத்தைப் புகட்டி விடுகின்றது. வரவர உலக விஷய நிலையாமை விளங்க மனிதனிடம் ஆராதனை மாத்திரம் தங்கிவிடுவதால் அது நிஷ்காம்யமாகிறது. ஆகவே இவ்விருவித ஆராதனைக்கும் பரம்பொருளை உலகப் பற்றின்றி மனிதனை வழிபடச் செய்யவேண்டும் என்பதே நோக்கம். ஆனால் காமிகள் இதை உணரார்கள். அவர்கள் தமது ஆராதனையால் ஸுகம் நிலைத்துவிடும் என்று நிஷ்காமிகளாகும் வரையில் வீணாக எண்ணிக்கொண்டிருப்பார்கள்; பழக்கத்தால் இந்த எண்ணம் மாறும்.

சிறப்பாகக்கூறிய ஆராதனக் கிரமங்களின் நோக்கம் யாதெனில் நாம் ஆராதிக்கும் வஸ்து, தோற்றங்களுக்கு அப்பாற்பட்டது, நம்மைவிட மேலான நிலையில் இருப்பது என்று காட்டுவதே. இந்த வஸ்து தோற்றங்களைப்போல மாறுதலடைவதன்று, இது நித்யவஸ்து என்று இந்நான்கு சிறப்புவித ஆராதனைகளும் குறிப்பிக்கின்றன. இத்தகைய வஸ்துவின் நிஜரூபம், ஆனந்தம் முதலியன உள்ளபடி பரம்பொருள் ஆராதனத்தில் தான் நன்றாக வெளியாகும்.

ஆதலால் இக்காலத்திய நாகரிக அவஸரத்துள் அகப்பட்டு வீணாகக் கெட்டுப்போகாது, நம்முள் ஒவ்வொருவருக்கும் சிறப்பாக ஏற்பட்டுள்ள ஆராதனைகளை விடாது, அவைகளின் நோக்கத்தை மறவாது, அவைகளில் தகுந்தபடி தினம் கொஞ்சகாலமாகிலும் பழகி, மேலான நமது நித்யானந்த நிலையை நாம் அடைய முயலவேண்டும்.

7 - APR 1910



# விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்ய௵ மாசிமீ [பகுதி 8

## யாகங்கள் - பொதுக் குறிப்புகள்

## YAGAS–GENERAL REMARKS

இக்காலத்தில் மாம்ஸ பக்ஷணமே கனவிலும் அறியாத பிராம்மணர் முதலிய சில ஜாதியார்களுக்கு முன்னர் எடுத்துக் காட்டியுள்ள ஸோமயாகம் முதலியவைகளைச் செய்ய மனம் வராது. இவர்கள் ஜீவ ஜந்துக்களைத் தமக்கு ஸ்வர்காதி போகம் வேண்டும் என்றோ அல்லது பகவானை ஆராதிக்கவேண்டும் என்றோ எவ்வாறு கொல்லத் துணிவர்? இது "அஹிம்ஸாபரமோதர்மஃ' என்ற ஜீவகாருண்யக் கோட்பாடுக்கு விரோதம் அல்லவா?' என்று அவர்களுக்கு அடிக்கடித் தோற்றிக்கொண்டிருக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம்? ஆதலால் இங்கு முதலில் யாக விஷயமாக ஏற்படும் இந்தச் சங்கைக்கும், இதிலிருந்து மேல் உண்டாகக்கூடிய மற்றைய சங்கைகளுக்கும் தகுந்த ஸமாதானம் கூறப்புகுவோம்.

இந்தச் சங்கையை எடுத்து விஸ்தரிக்கும் முன்னர், நாம் அவசியம் தர்ம விஷயமாக ஒன்றை ஞாபகத்தில் வைக்கவேண்டும். 'எது தர்மம், எது அதர்மம்?' என்ற விஷயத்தைத் தீர்மானிக்க நாம் நமது புத்தியை மாத்திரம் ஆதாரமாகக் கொள்ளக்கூடாது. இந்தப்பொருள் ஔவையார் உலக நீதியில் 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்ற வாக்கியத்தில் அமைந்து கிடப்பதையும் காணலாம். பொதுவாக ஜாதியார்கள் செய்யும் தீர்மானத்தால் அறியலாமோ எனின், அதுவும் அவ்வளவு நல்ல வழியல்ல. ஜாதியார்களுக்குப் பொதுவாக வரும் தீர்மானம், அவர்களுள் பெரியவனுல் ஏற்படக்கூடியதே ஒழிய வேறல்ல. அவனும் குறைவுகள் நிறைந்த மனிதனுதலின் அவனுடைய மனோபலத்திற்கேற்பவே அவனிடம் இருந்து தீர்மானங்கள் பிறக்கும். இதை இவ்வழிகளில் ஒன்றும் தீர்மானம்செய்ய முடியாதாகையால் இதற்கு ஒரே வழிதான் உண்டு. அதாவது வேதம் முதலியவைகள் உணர்ந்த நமது குருவோ அல்லது மூதாதைகளோ செய்யும் தீர்மானத்தின்படியே நாம் நமது நடவடிக்கைகளைத் திருத்திக்கொள்ளவேண்டும். இதிலும் வேதமே முக்கியமாக நாம் எடுத்துக்கொண்டு யோசிக்க வேண்டிய விஷயம். அதிலுள்ள விஷயங்களைப் பரிசீலனம்செய்து பார்த்துவிட்டுப் பின்பு நமது பெரியோர்கள் நடத்தை (அதாவது சிஷ்டாசாரம்) இவ்வாறிருக்கிறது என்பதை நன்குணர்ந்து அதன்படி ஒழுகவேண்டும். இதையே தருமபுத்திரர் கொக்கு ரூபமான யக்ஷன் கேட்ட கேள்விகளில் ஒன்றிற்குப் பதிலாகக் கூறுகிறார். 'எது மோக்ஷ பந்தா?' என்ற கேள்வி பிறக்க, தருமபுத்திரர், 'வேதங்கள் பலவாறாக இருக்கின்றன. தர்க்கத்தால் பயனில்லை. ரிஷிகளது அபிப்பிராயங்கள் பேதப்பட்டிருக்கின்றன. மத விஷய உண்மைகளோ ரஹஸ்யமாக இருக்கின்றன. ஆகையால் சிஷ்டாசாரமே மோக்ஷ பந்தா.' என்று மறுமொழி கூறினுர். ஆதலால் பரமகுருவாகிய ஈசனிடம் இருந்து வந்திருக்கும் வேதங்களை இவ்வாறு சிஷ்டர்கள் அநுஷ்டித்திருக்கிறுர்கள் என்பதை உணர்ந்து நாம் இன்னது தர்மம் இன்னது அதர்மம் என்று கண்டு நடத்தல்வேண்டும்.

யாகங்கள் பண்ணுவது நியாயமன்று என்று கூறுவதற்கு முக்கிய காரணம், அவைகளில் பிராணிஹிம்ஸை இருத்தலே. பிராணிஹிம்ஸையை நோக்கி இவ்வாறு வீரிட்டெழுவது நமக்கு அழகன்று. உலகில் பிராணிஹிம்ஸையே செய்யாமல் ஒருவனுல் இருக்கக்கூடுமா?

வீரஸ்வர்க்கம் என்ற பதவிக்கு மனிதனைத் தகுந்தவனாக்கி அவன் புகழை உலகுள்ள அளவும் நிலைநிறுத்திவைப்பது தர்மயுத்தம் அல்லவா? அதன் முக்கியமான ஸ்வரூபம் பிராணி ஹிம்ஸை அல்லவா? போர்முனையில் உள்ள ஓர் வீரன் மற்றொருவனைக் கொல்லுகிறான். அவ்விருவர்களுக்கும் முன்பின் விரோதம் ஏதாவது உண்டா? அல்லது, ஏதாவது சண்டைதான் நேரிட்டதா? அப்படி இருந்தும் ஒருவரை ஒருவர் அடிக்கும்படி யுத்தத்தில் நேர்ந்து விடுகிறதில்லையா? இந்த ஸமயத்தில் போர்வீரன் கொலைத்தொழிலை ஜீவகாருண்யத்தால் நிறுத்தி விட்டால் அவன் குற்றவாளியாகி விடுகிறான். இவ்வாறே அநேக ஸமயங்களில் பிராணி ஹிம்ஸை நாம் அவசியம் செய்யவேண்டி வந்துவிடும். இம்மாதிரி விஷயங்களில் யாகம் ஒன்று. ஜீவஹிம்ஸை இருக்கிறதே என்ற பயத்தால் மாத்திரம் யாகத்தில் நம்பிக்கை உடையவர்கள் அதை நிறுத்திவிடக்கூடாது. போர்வீரன் போரை நிறுத்திய குற்றம் அவனுக்கு வந்துவிடும். அவசியம் வரக்கூடிய மரணத்திற்குத் தர்மத்தை நடத்துங்கால் இவ்வளவுபயம் மனிதனுக்குஇருக்கவே கூடாது. இந்த ஸமயத்தில்தான் ஆத்மா அழியாதது, அது வேறு சரீரம் ஏற்றுமரணத்திற்குப்பின் மறுபடியும் கர்மானுஸாரம் பிறக்கும் என்ற ஞானம் ஸஹாயமாக வந்து நமக்குத் தர்மத்தை நடத்துவதில் ஏற்படும் தடைகளை நீக்கவேண்டும். இல்லாவிடில் நாம் தொடை நடுங்கிகளே யாகிவிடுவோம். ஸ்வதர்மம் நடத்துங்கால் தீரனாக இருத்தல்வேண்டும் என்ற ரஹஸ்யத்தைத்தான் கிருஷ்ண பரமாத்மா யுத்த ஸமயத்தில் பகவத்கீதையில் அர்ச்சுனனுக்கு உபதேசித்தது.

ஹிம்ஸை செய்வது கொடியபாபம்தான். ஆனால் நம்முள் ஜீவகாருண்யம் நிறைந்தவர்களுக்குக்கூட கொஞ்சமேனும் எதற்காவது கஷ்டங்கொடுக்காது ஜீவிக்கவே முடியாது. மாம்ஸபக்ஷணிகளை விட்டுவிட்டு மற்றையவர்கள் நிலையை உற்றுநோக்குவோம். அவர்கள் மூச்சுவிடும் காலத்தும், நடக்கும் காலத்தும், கஷ்டம் அனுபவிக்கும் காலத்தும், நாக்குப்பூச்சி, மூட்டைப்பூச்சி, தேள், பாம்பு, முதலியவற்றைக் கொல்லுங்காலத்தும் அவர்கள் செய்வது பிராணிஹிம்ஸை அல்லவா? மரத்தை வெட்டுவது, பிஞ்சுகளைத்திருகுவது இவைகளைச் செய்யலாகாது என்று பெரியோர்கள் சொல்வார்கள் அல்லவா? இதைப்போன்றது தானே, புஷ்பம், இலை, காய், பழம் முதலியவைகளைச் செடி, கொடிமரங்களிலிருந்து பறித்து உண்பதும். இதனால் தானே சில மஹான்கள் மரம் முதலியவைகளிலிருந்து உதிரும் சருகு பழங்களை உண்டு காலம் தள்ளியிருக்கின்றனர். ஆதலால் இம்மண்ணுலகில் வாழுவதற்கு ஏதாவது ஓர்விதத்தில் பிராணிஹிம்ஸை இல்லாது முடியாது. ஆகவே 'கொல்லுவது தர்மமா அதர்மமா' என்ற சங்கை நிலைக்க இடமே இல்லை. நமக்கு நியாயமாக யோசிக்குங்கால் எதைக்கொல்வது தர்மம்? எதைக்கொல்வது அதர்மம் என்ற சங்கையே உண்டாகவேண்டியது. இதுதான் கர்மகாண்டத்தில் தீர்மானம் ஆகின்றது. *

* இது வரையில் வாசிக்கும் மிகுந்த ஜீவகாருண்யமுடைய நமது நண்பர்களுக்கு முற்கூறிய ஒழுங்குப்படி இக்காலத்து கோடானுகோடியாகக் கணக்கின்றி ஊனுக்கு வீங்கும் மாம்ஸபக்ஷிணிகளது செய்கையை நியாயம் என்று கூறிவிடும்படி வந்துவிட்டதே என்ற பரிதாபம் உண்டாகும். இதை நீக்க இரண்டு விஷயம் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. முதலாவது அதிகமாக 'ஊனைத்தின்று ஊனைப்பெருக்கவேண்டும்' என்ற ஆசையில்லாது ஏதோ வழக்கத்தின்கீழ் ஊன்தின்று வந்த பிராம்மணஜாதியார் பிராம்மணத்வம் நிலைக்க அக்காலத்தில் செய்துவந்த சில யாகங்கள் விஷயமாகவே இந்த ஆராய்ச்சி பொருந்துமே ஒழிய, இதை விபரீத அர்த்தம்செய்து குதர்க்கம் செய்யவேண்டும் என்ற கருத்துடன் எழுதியதல்ல. இரண்டாவது, இதை எழுதுபவர்களுக்கு ஜீவகாருண்யம் உண்டு, இருந்தும் இவ்வாறு எழுதிவரக் காரணம் ஏதாவது இருக்கும். ஆதலால் எழுதுபவர்கள் எண்ணங்களுக்கு விரோதமாகக் குதர்க்கம் பண்ணுவது அழகன்று. எழுதுவோரது நோக்கம் இவ்வியாஸம் முடிவில்தான் வெளிப்படுத்த முடியும். அதுவரையில நண்பர்களே! தயவுசெய்து பொறுத்துக்கொள்ளவேண்டும்.

கர்மகாண்டமும் ஸ்மிருதிகளும் கொல்லு தல் பாபம் என்று முற்றிலும் கூறிவிடவில்லை. யாகவிஷயமாகக் கொல்லுவது பாபம் அல்ல என்பதே அவைகள் துணிபு. மேலும் இவைகள் பிராம்மணன் தவிர மற்றையவர்களுக்குக் கொல்லாமையை விதிக்கவில்லை. இந்த விஷயத்தைப்பற்றிச் சற்று ஆராய்வோம். யாகத்தின் பொது நோக்கம் ஸ்வர்க்க ஸுகத்தைஅடைய வேண்டியது என்பதே. ஸ்வர்க்கத்தில் வெளி விஷயங்களில் இருந்து யாதொரு துக்கமும் வாராது. அப்படி இருப்பினும் இந்த ஸுகம் நீடித்து நிற்பதல்லவே; புண்யம் க்ஷீணித்தால் மறுபடியும் பூலோகம் போகவேண்டுமே;என்ற எண்ணங்களால் உண்டாகும் துக்கம் மாத்திரந்தான் அங்கு உண்டு.ஸ்வர்க்கத்தில் யாதொரு வித வெளிக்குறைவும் இல்லாததால், நன்மை செய்தல் முதலிய நற்குணங்களில் பழக இடமேஇல்லை. உலகில் செய்த நல்வினைகளின் பலத்தை மாத்திரந்தான் அங்கு அனுபவிக்கலாம். ஆதலால் ஸ்வர்க்கவாஸிகளான தேவதைகள் தமது நற்குணங்களில் பழகுவதற்கு உலகம் நோக்கி வரவேண்டியதுதான். தேவதைகளுக்கும் தத்தமக்கு உரிய ராகத்வேஷாதிகள் (விருப்பு வெறுப்புகள்)உண்டு. இதை அறிந்து அவர்களைத்திருப்திசெய்பவர்களுக்கு அவர்கள் நன்மை புரிகின்றனர். அவர்களை அச்சிரத்தையாக விட்டுவிடுபவர்களுக்கு அவர்கள் நன்மை புரிவதும் இல்லை. தேவதைகளிடம் ஸத்ஸங்கம், கெடுதியின்மை ஆகிய இவைகள் அமைந்திருக்கின்றன. இத்தகைய தேவதைகளையே பெரும்பாலும் யாகத்தில் பிராணி ஹிம்ஸை மூலமாக இஹலோக ஸ்வர்க்கலோக ஸுகம் வேண்டும் என்று பிராம்மணர்கள் ஆராதிப்பது.

'இத்தகைய தேவதைகளையா அநித்யமான ஸ்வர்க்க போகத்திற்காக ஆராதிக்க வேண்டும் என்று வேதங்கள் விதிக்கின்றன?' என்ற சங்கை பிறக்கும்.இவ்வாறு விதிப்பது வேதத்தின் ஸ்வபாவமே.எல்லோருக்கும் பொதுவாக விதிக்கும் வேதம் அவரவர்கள் நிலைக்குத் தக்கவாறு தாழ்ந்தவர்களுக்குத் தாழ்ந்ததையும், மேலானவர்களுக்கு மேலானதையும்,விதிப்பதில் என்ன தவறு. உலகப்பற்றுகள் உள்ள ஒருவனுக்கும், உலகம் ஸுகிக்கவேண்டும் என்ற ஆவலுடையவனுக்கும் வேதம் யாகத்தை விதித்தது. யாகத்தில் ஆராதிக்கும் தேவதைகள் நம்மைப் போலத்தாழ்ந்தவர்கள் என்று எண்ணிவிட வேண்டாம். இவர்கள் பரம்பொருளை உத்தேசிக்க மிகத் தாழ்ந்தவர்களாயினும், உலகில் வாழ்ந்து வரும் அவதாரங்களைத் தவிர, மற்றைய நம்முள் சிறந்தவர்களைவிட அநேக ஆயிரம் மடங்கு மேற்பட்டவர்களே. அவர்களிடம் பகவான் அதிகமாக விளங்குகிறார். ஆதலால் அவர்கள் மூலமாக இந்த யாகங்களில் பரம்பொருளையும் ஆங்காங்குத் துதிக்கும் மந்திரங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. இவைகளே யாகங்களின் அந்தரங்க நோக்கத்தைக் குறிப்பாகக் காட்டுகின்றன. ஆதலால் பொதுவாக யாகங்களில் ஆராதிக்கப்படும் தேவதைகளாலே நமக்கு சிறந்த மேன்மைகள் வர இடம் உண்டு. அவர்கள் மிகத்தாழ்ந்தவர்கள் என்று இழிவாகப் பேசவேண்டியதில்லை.

இவ்வளவு நற்குணம் வாய்ந்த தேவதைகளைப்பிராணிஹிம்ஸை செய்து ஆராதிக்கவேண்டுமா?இந்தக் குற்றமற்ற பிராணிகளைக் கொன்றதால் ஸ்வர்க்கம் வரும் என்று மனிதன் எண்ணுவது நியாயமா? என்ற சங்கை உண்டாகலாம். வேதத்தின் அந்தரங்கநோக்கம் எவ்வாறிருப்பினும், உலக விஷயங்களில் காணப்படும், மாம்ஸ பக்ஷணம் முதலியவைகளைக் கண்டு அவைகளுக்கு ஆளாக இருந்தவர்களுள் மேலான ஜாதியாரை நோக்கி 'நீங்கள் பகவத் அர்ப்பிதம் செய்யாது மாம்ஸம் உண்ணவேகூடாது' என்று விதித்தது. அவரவர்கள் வழக்கப்படி பொதுவாக எதை எவர்கள் உண்டபோதிலும்,அதைப் பகவத் அர்ப்பிதம் செய்துவிட்டு உண்ணவேண்டும் என்பதே வேதத்தின் கொள்கை. இதை விதித்த வேதம் ஆஹுதியைச் செய்தபின்னர் வரும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 7- APR 1910 MADRAS.

புகையை முகர்ந்தால்மாத்திரம் போதும் என்றது. ஆதலால் மாம்ஸம் முதலியவைகளை விட்டொழிவது வேதத்தின் உட்கருத்தாயினும், அதை உண்ணுபவர் அதை நிவேதனம்செய்து பகவானை ஆராதிப்பதைத் தடுக்காமல் விட்டது. இப்படி இருப்பினும் வேதத்தின் அந்தரங்க நோக்கம் கர்மகாண்டத்தில் ஆங்காங்கு வெளியாகின்றது. ஸ்வர்க்ககாமிகளாக இந்த யாகங்களைச் செய்பவர்கள் இந்த ரகஸ்யத்தை அறிவது மிகக் கஷ்டம். ஆதலால் தேவதைகள் பிராணி ஹிம்ஸையில் பிரியமுடையவர்கள், அவர்களுக்கு ஆடுகளைப் பலிகொடுக்கவேண்டும் என்பது கர்மகாண்டத்தின் நோக்கமே அல்ல. மேலும் யாகங்களில், பசுக்கள் இறக்குங்கால் கத்துவது முதலிய கஷ்டங்களுக்குப் பரிஹாரமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆஹூதிகளே இந்த நோக்கத்தை வற்புறுத்துகின்றன. தேவதைகளை ஆராதிக்க வேண்டும். அவனவன் தனக்குப் பிரியமான வஸ்துக்களை அவர்களுக்கு அர்ப்பிதம்செய்து திருப்தி செய்யவேண்டும். முன்காலத்தில் மேலான ஜாதியாரும் மாம்ஸம் புஜித்திருந்தனர். ஆதலால் அவர்களுக்குப் பிராணி ஹிம்ஸை மூலமாக ஆராதனத்தை வேதம் கர்மகாண்டத்தில் விதித்தது. இதை நன்கு உணர்ந்து வேதத்தில் காட்டப்பட்டிருக்கும் கருணையைத் தெரிந்தவர்களாய் மாம்ஸ பக்ஷணத்தில் பழகியவரது யாகத்தை, கசாப்புக் கடையிலிருந்து வயிறு வீங்கமாம்ஸம் உண்ணும் ஸாதாரண ஜனங்கள் பிராணிவதநிமித்தம் பழிப்பது, குடியன், மருந்துக்காகத் தீராதென்று கொஞ்சம் மதுவைச் சேர்த்து மருந்துண்ணும் தர்மசீலனைப்பழிப்பதற்கு ஸமமே ஒழிய வேறில்லை.

இதுவரையில் கூறியதிலிருந்து மாம்ஸபக்ஷணத்திலிருந்த பழக்கம் விட்டு, பிராணிகளைக்கொல்லுவதில் ஓர்வித வெறுப்புடையவன் ஒருவன் யாகம் செய்யவேண்டியது அனுவசியம் என்பது நன்கு விளங்கும். ஆனால் வேதத்தில் வியக்தமாகக் கூறப்பட்டுள்ளதாயும், பிராம்மண்யம் நிலைப்பதற்குஅவசியமாயும் உள்ளயாகத்தை எவ்வாறு செய்யாது விடுவது என்ற சங்கை பிறக்கும். இதை இரண்டு விதமாக எடுத்து ஆண்டு ஸமாதானம் கூறலாம். (1) வேதங்கள் அதிகாரி பேதத்திற்கு ஏற்ப கர்மங்களை விதிக்கின்றன. மேலும் ஓர் கூட்டத்தார்களது ஸதாசாரமும் அவர்களது நிலைக்கேற்பமாறுதலும் அடைகின்றது. முன்காலத்தில் சிராத்தத்தில் மாம்ஸம் உபயோகப்படுத்தி வந்ததும் அதற்குப் பதிலாக பின்னர் உளுந்து உபயோகப்பட்டுவருவதும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ஆதலால் பிராணி ஹிம்ஸை இல்லாத வைதிககர்மங்களைச்செய்துகொண்டு மற்றைவைகளை விட்டுவிடுவதால் நாம் வேதவிரோதிகளாகமாட்டோம். ஏனெனில் மேல்நோக்கி விருத்தியடைபவன் தாழ்ந்தவைகளை விட்டுவிடவேண்டியது நியாயம்தான். (2) யாகங்களில் ஆராதனமே முக்கியம், பிராணிஹிம்ஸை முக்கியமல்ல. ஆனால் முன்னர் எடுத்துக்காட்டியபடி பிராணியைக் கொல்லவேண்டும் என்பதன் உட்கருத்து நமது கோபத்தைக் கொல்லவேண்டும் என்பதே. ஆகவே நாம் செய்யும் யாகத்தில் கொடியபிராணிவதம் இல்லாவிடினும் அந்த ஸ்தானத்தில் உட்கருத்தைக்காட்டும் அறிகுறிபான கர்மம் வேண்டும். இதற்கு ஓர் பிராணிபோன்ற உருவம்செய்து அதைப் பலிகொடுக்கவேண்டும். ஆகவே யாகத்தைப் பிராணிஹிம்ஸையின்றி நடத்தலாம்.

இங்கு எடுத்துக் கூறப்பட்ட ஸமாதானங்கள் நாமாகக் கூறியவைகள் அல்ல. இதற்கு ஆதாரமாகச் சிஷ்டாசாரமும் இருக்கின்றது. வைஷ்ணவர்கள் நாராயணனைப் பரதெய்வமாகக்கொண்டு 'ஸர்வம் வாஸுதேவமயம் ஜகத்' என்று மதித்து ஜீவகாருண்ய மிகுதியால் யாகத்தையே செய்யாது விட்டனர். இதுபோல் சைவ ஸித்தாந்திகளும் கொல்லாமையைக் கைக்கொண்டு பிராணி ஹிம்ஸையை

உடைய யாகத்தைவிட்டனர். மாத்வர்களோ வேதத்தில் உள்ள கர்மத்தையும் விடாது, பிராணிஹிம்ஸையும் செய்யாது பிஷ்டபசுவை (மாவால் செய்தபசுவை) பலிகொடுத்து யாகத்தை நடத்துகின்றனர். * இதனால் ஆராதனமும் வைதிகதர்மப்படி நடக்கின்றது, பசுவதத்தால் ஏற்படவேண்டிய உட்கருத்தும் மாறுதிருக்கின்றது. அத்வைத ஆசார்யராகிய ஸ்ரீமத் சங்கராசாரியாளோ 'கர்மஸங்கிகளாக இருப்பவர்கள் நம்பிக்கைகளை அநாவசியமாகச் சிர்குலேயும்படி செய்யக்கூடாது; வேதத்திலுள்ளவைகளைக் குற்றங் கூறலாகாது' † என்றகொள்கைகளைப் பின்பற்றி யாகத்தைப் பழிக்காதும் 'இதை அதிகாரி பேதப்படி நடத்துபவர்கள், நடத்தட்டும்,' என்ற உட்கருத்துடன் யாகத்தை அவசியம் செய்பவேண்டும் என்று கூறினர்போலும். இதனால் தான் ஸ்மார்த்தர்களில் சிலர் மாத்திரம் இன்னும் ஆட்டைக்கொன்று யாகம் செய்து வருகின்றனர்.

இந்தப் பொதுக்குறிப்புக்களிலிருந்து நாம் உணரவேண்டிய விஷயம் பின்வருவன. வேதவிஷயங்கள் அந்தரங்க நோக்கங்களை உள்ளடக்கியுள்ளன, ஆதலால் வேதத்தில் காணப்படும் விஷயங்கள் எதையும் குற்றங்கூறுவது பாபஹேது. வேதங்களில் அநேக மார்க்கங்கள் காணப்படுகின்றன, அவைகளுள் நமது நிலை சிஷ்டாசாரம் முதலியவைகளை உத்தேசித்து நமக்குத் தகுந்த மார்க்கங்களைப் பின்பற்றி ஒழுகலாம். இதை உத்தேசித்து பிராணிவதத்துடன் யாகமசெய்வது நமக்கு வெறுப்பாகவிருந்தால் நாம் செய்யாதும் விடலாம், யாகம்செய்ய வேண்டும் என்று வருபவருக்கு த்ரவ்ய ஸஹாயம் செய்யாதிருந்தாலும் இருக்கலாம். ஆனால் வீணுக வேதத்தையும், யாகங்கள் செய்பவரையும், அவைகளுக்கு ஸஹாயம் செய்பவரையும் பழித்துப் பாபத்திற்கு ஆளாகக்கூடாது. பிராணிவத சாலைகள் ஏற்படுத்தப்பட்டு மாம்ஸங்கள் தயார்செய்யப்பெற்று, ஜனங்களில் பெரும்பாலார்கள் மனம்போனபடி 'ஊனைத்தின்று ஊனைப் பெருக்கும்' இக்கொடிய காலத்தில், அவர்களையும், அந்தச்சாலைகளையும் குற்றங் கூறுதிருக்கும் தன்மை வாய்ந்தவர்கள், வேதங்களில் மாம்ஸ பக்ஷணங்களை நிறுத்த ஏற்பட்டிருக்கும் யாகங்களைக் குற்றங்கூறி பகிழுவாராயின் நரகில் வீழ்ந்து பரிதவிப்பார் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

* இவ்வாறு செய்வதற்குப் பாகவதம் நான்காம் ஸ்கந்தத்தில் வரும் பிராசீனபாஹிஸ் உபாக்யானமும் (சிறுவர்க்கான பக்கத்தைப் பார்க்க;) மஹா பாரதம் சாந்தி பர்வத்திலுள்ள ஓர் உபாக்யானமும் மாத்வர்களுக்கு முக்கிய ஆதாரங்கள்.

† விவேக போதினி தொகுதி 2, முதல் ஸஞ்சிகையில் சிறுவர்க்கான பக்கத்தில் உள்ள மௌனம் என்பது ஞான வரம்பு என்ற கதையை வாசித்தால் அவஸரப்பட்டு பழிப்பதால் வரும் கேடு வெளியாகும்.

---

இனிமேல் வரவேண்டியதைப்பற்றி நாம் அதிக கவலை கொண்டிருக்கலாகாது.—நியாயமாகக் கவலையென்பது எப்பொழுதுமே கூடாது. எல்லாவித பாரத்தையும் ஈசுவரன் தலையில் சுமத்தி, நாம் செய்யவேண்டியவைகளை மட்டும் சரிவர நடத்தி ஈசுவரன் விட்டவழி விட்டும் என்று கவலையென்பதே யில்லாமலிருப்பது மிகவும் உத்தமகுணம். ஏற்கனவே நடந்துபோன விஷயத்தைப்பற்றியும் இனிமேல் வரப்போகிற விஷயத்தைப் பற்றியும் யோசித்து யோசித்துக் கவலைப்படும் மனிதன் கால்மனிதன். இவ்விருவித கவலைகளும் அவனிடமிருக்குமாயின் அவன் தற்காலத்தில் செய்ய வேண்டியதை யுமிழப்பான். நாம் தற்காலத்தில் எதைச் சரிவர நடத்தவேண்டுமோ அதை நடத்தி வீண் துக்கங்களிலேயும் வீண் விசாரங்களிலேயும் வீண்காலம் கழிக்காமலிருக்க வேண்டும். தற்காலத்தைப்பற்றி நாம் விசாரப்பட்டால் போதாதா, வீணுகக் கடன்வாங்கி, சென்ற சங்கதிகளைப் பற்றியும் இனிவரப்போகிற விஷயங்களைப்பற்றியும் விசாரப்படவேண்டுமோ? தற்காலம் ஒன்றையேபற்றி நாம் விசாரப்படுகின்ற குணத்தை அப்பியசித்து வந்தால் மற்ற காலங்களைச்சேர்ந்த விஷயங்கள் தங்களுக்குத் தானுகவே ஏற்பட்டுவிடும்.— பண்டித நடேச சாஸ்திரி.

## அவஸரம்

**HASTINESS**

அவஸரம் என்பது எப்பொழுதாவது ஒரு ஸமயத்தில் எல்லோருக்கும் உண்டாகலாம் என்றிருந்தபோதிலும், நாம் எப்பொழுதும் அவஸரத்துடனேயே ஒரு காரியம் செய்யும் வழக்கத்தைக் கைப்பற்றக்கூடாது. நாம் இவ்வித அப்பியாஸத்தில் விழுந்து விடுவோமேயானால் இதைவிட்டுத் தப்பிப்பது வெகு கஷ்டம். ஒரு பட்டணத்தில் நடக்கும் வேலைகளை நாம் உற்றுநோக்கினால் அவஸரமே எப்பொழுதும் மேலிட்டிருக்கும். ஒருவனாவது வீண்காலம் போக்கமாட்டான். ஒவ்வொருவனும் அவனவன் தொழிலை வெகு வேகமாய்ச் செய்துகொண்டேயிருப்பான். நகரங்களில் போட்டி அதிகமாகையா லிவ்விதமாய் உழைத்தால் ஒழிய முடியாது. நியாயஸ்தலங்களில் வக்கீல்களும், ஒளஷதம் கொடுப்பதில் வைத்தியர்களும், விசேஷமாய்ப் போட்டி போட்டுக்கொண்டு பட்டணங்களில் உழைப்பார்கள். அவ்வாறேதான் பட்டணத்திலிருக்கும் வியாபாரிகளுக்கும், ஸாவகாசம் என்பதே கிடையாது. ஸாவகாசத்தின் சுகமனுபவிக்கவேண்டி உட்காருவார்களேயானால் அவர்களுடைய வியாபாரமெல்லாம் கெட்டுப்போய்விடும். பட்டணத்தில் ஜட்காக்குதிரைகளைப்போல் எவர்களும் உழைத்துத் தீரவேண்டும்.

எல்லா விஷயங்களையும் சீக்கிரத்தில் முடித்துக்கொடுக்கப் பட்டணத்துக்கு என்று சில அவசர சாதனங்கள் எங்கும் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. பம்பாயில் கால் மணிக்கொரு தடவை புறப்பட்டுப்போகும் ரெயில் வண்டிகள், ஐந்து நிமிஷங்களுக்கொருதடவை புறப்பட்டுப்போகும் டிராம் வண்டிகள் முதலிய சாதனங்கள் இருக்கின்றன. லண்டன் முதலான ஐரோப்பிய தேசத்துப் பிரதான நகரங்களில் ரெயில், டிராம், இவைகளுடைய அவஸர ஏற்பாடுகளை நாம் சொல்லிமுடியாது. இவ்வித சாதனங்கள் சற்று ஏறத்தாழ நமது சென்னையிலும் உண்டு. இவைகளல்லாமல், 'டெலிபோன்' என்று சொல்லப்படும் சேர்ந்து பேசிக்கொள்ளும் மின்சாரக் கம்பிகள், 'டெலிகிராப்' என்ற மின்சாரக் கம்பிகளுமுள. இவைகளுடைய அனுகூலம் நமக்குத் தெரிந்த விஷயமே. அவசரம் அவசரம் என்று காலை முதல் மாலை வரையில் அவஸரப்பட்டுக்கொண்டே வேலை செய்யும் பலவேலைக்காரர்களை நாம் நகரங்களிற் காணலாம். அவர்களுக்கு எல்லாம் அவஸரம்; ஸ்நானம் அவஸரம்; ஜபதபம் அவஸரம்; சாப்பாடு அவஸரம்; எல்லாம் அவஸரம். ஏன் இவ்வளவு அவஸரம்? எல்லாம் பணத்தாசையால்; 'பணம் என்ற பேராசை பற்றிக் கொண்டதும் எல்லாம் அவஸர அவஸரமாய்ச் செய்யாவிட்டால் லாபம் கிட்டுவது துர்லபம். இவ்வித அவஸரத்தில் கடைசியாய் நமக்குக் கிடைக்கும் லாபம் நமது தேக சௌக்கியம் முற்றிலும் குன்றிச் சப்பை அற்ற மாடுகள் பொத்தென்று விழுவதுபோல் நாம் சக்தியற்று விழவேண்டியதுதான். சிறு பிராயத்தின் பலத்தின் நம்பிக்கையால் 'என் உடம்புக்கு ஒன்றும் பண்ணுகிறதில்லை' என்று டம்பமாகச் சொல்லிக்கொண்டு எல்லா விஷயத்திலும் அவஸரப்பட்டுக்கொண்டு காலைமுதல் மாலைவரையில் நாயாக உழைத்து ஜட்காக்குதிரைகள் போல் ஓடி ஆடி அலைந்து திரிந்து பிராணனை விட்டுப் பணம் தேடுகின்றோம். தேகத்தில் பலமிருக்கிற வரையில் எல்லாம் ஸரிவர நடந்துவருகின்றதென்பதில் ஆக்ஷேபணையில்லை. கொஞ்சம் அயர்ந்து கீழே படுத்தோமோனால் அத்துடன் நமது தேக சௌக்கியமே தொலைந்தது. அப்புறம் எழுந்திருக்கும் வழியேயில்லை. படுத்ததுமுதல் திருநாடு செல்லும்வரையில் மருந்து சாப்பிடாமல் ஒரு நாளாவது நாம் கழிக்க முடியாது. எப்பொழுதும் கையும் மருந்துமாக வேயிருந்து பிராணனை விடவேண்டும். இவ்வளவும் முதல் அவசரம் அவசரம் என்று

எல்லாவற்றிலும் அவசரமாயிருந்ததால் விளைந்த நோய்! அப்புறம் விடாமருந்து! தேகத்தைச் சீர்திருத்திக்கொள்ளக்குற்றாலம் நீலகிரி முதலிய தேச சஞ்சாரமும் அவசரத்திலேயே இவ்வளவும் எவ்வாறு விளைந்தன ?

அவசரத்தால் முதன்முதல் விளையும் ரோகம் அஜீர்ணம். வெகு நாட்கள் அவசர அவசரமாய் உழைத்தவனுக்கு அஜீர்ணம் வந்துவிட்டால் அதிலிருந்து அவன் தன்னைத்தான் விடுவித்துக்கொள்ள முடியாமல் அதற்கே இரையாவான். முதலில் அஜீர்ணம். அதனால் ஆகாரம் செல்லாமல் முற்றிலும் கைகால்களின் ஓய்ச்சல், சக்தியின்மை, தீராத பலவித நோய்கள், கடைசியாய்த் தூக்கமற்றுப்போகுதல்.

எனது நண்பரொருவர் இவ்வித அவஸ்தைக் குள்ளானர். அவர் வெகு புத்திமான். தமது தேக சக்திக்கு மேல் அவஸர அவஸரமாய் இடைவிடாமல் 10, 15 வருஷகாலம் படித்துப் பிரவித்த பரீக்ஷைகளில் தேறி உயர்ந்த பதவிக்கு வந்தார். வந்ததுதான் லாபம். அஜீர்ணநோய் அவரைப்பற்றிற்று. அவர் வெகு சீமான். ராஜ வைத்தியம் செய்து எவ்வளவோ பொருள் செலவிட்டுப் பார்த்தும் அவ்வஜீர்ணம் நீங்காமல் அதிகரித்து அவருடைய தூக்கம் நீங்கி அவஸ்தைப்படும் நிலைமைக்கு அவரைக்கொண்டுவந்து விட்டது. பல தடவைகளில் அவர் பட்ட அவஸ்தைகளைப் பற்றி நாம் அவரிடமிருந்தே கேட்டிருக்கின்றோம். இரவு 10-நாழிகைக்கு மேல் அவர் தமது படுக்கையில் படுத்துக்கொள்வாராம். சூரியோதயம் வரையில் கண்மூடா நோன்பு நோற்பாராம். என்ன சிரமப்பட்டுப் பார்த்த போதிலும் ஒரு நிமிஷமாவது தூக்கம் பிடிக்காதாம். எலிகள் ஓடுவது, அவைகள் ஸங்கியை, மற்றவர்கள் எழுந்திருப்பது, ஏதாவது பேசிக்கொண்டிருப்பது, இவைகள் அவ்வளவும் அவருக்கு இரவில் ஒன்று விடாமல் தெரியும். இவ்வாறு அவஸ்தைப்பட்டு ஒரு பெரிய வைத்தியர் உபதேசப்படி அவர் இரண்டொரு வருஷகாலம் ஸிங்களத்தில் சஞ்சாரம் பண்ணி ஒருவாறு தன் தேகத்தைத் தேற்றிக்கொண்டார் என்றாலும் சரியான நிலைமைக்கு இன்னும் வரவேயில்லை. இவ்வளவு தூரம் நாம் இங்குச் சொல்ல வேண்டிய காரணம் என்னவென்றால், நாம் ஒரு சமயத்தில் இவ்வாறு அவசரத்தா விழந்த தேக சௌக்கியம் ஒருபொழுதும் நமக்குத் திரும்பி வரவேமாட்டாதென்பதாம். எந்த வேலையாக விருந்தபோதிலும் தனது பலத்துக்குமேல் உழைத்தவன் ஒருபொழுதும் பிற்காலத்தில் அவஸ்தைப் படாமலிருக்கமாட்டான். அவஸரமாய்ப் பணக்காரனாக நாம்கொள்ளும் எண்ணத்தால் இவ்வளவு ஸங்கடங்களும் நமக்கு விளைகின்றன. ஒருதடவை யிழந்த தேக சௌக்கியம் மறுபடி திரும்பிவருவதுமில்லையாகையால் இவ்வளவு அவஸரம் ஒருவருக்கும் கூடாது. மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் நாமே இக்குற்றங்களுக்கு உள்ளாயிருக்கலாம். இவ்வித அவஸ்தைகள் எல்லாம் பட்டு நம்மைப்போல் மற்றவர்களும் அவஸ்தைப்பட வேண்டா மென்று மற்றவர்களை எச்சரிக்கும் பொருட்டே நாம் இதை யிப்பொழுது இவ்வளவுதூரம் விவரிக்கின்றோம். பின்னாலுண்டாகும் துக்கங்களை நமது சிறுவர்கள் நன்றாக அறிந்துகொண்டு நம்மைப்போல் 40-வயதிலேயே 80-வயதுள்ள கிழவர்களைப் போலாகாமல் சௌக்கியப்படவேண்டுமென்று இவ்வளவுதூரம் எச்சரிக்கலானோம்.

பண்டித நடேச சாஸ்திரி.

தர்க்கிப்பதை ஒழித்தல்.—பலபேர்கள் சேர்ந்திருக்கும் சங்கத்தில் தர்க்கித்தல் என்பதே கூடாது. ஏனெனில் அது எவ்வளவுதான் கொஞ்சமாயிருந்தாலும் சிறிது மன வருத்தத்தையே விளைவிக்கும். ஒருகால் நம்மை யறியாமலே நாம் தர்க்கித்துத் தர்க்கமும் முற்றி விட்டால் சிரிப்பான தொரு சந்தர்ப்பத்தை அந்தச் சமயம் பார்த்தெடுத்து ஜனங்கள் மனதைச் சந்தோஷப்படுத்தித் தர்க்கத்தை விட்டுவிட வேண்டும்.—

## ஸ்ரீ ரமேச சந்த்ர தத்தர்

**R. C. DUTT B.A., LL.B., C. I. E.**

*(A Life—Sketch)*

### பரீக்ஷைக்குப்பின்

ஸிவில் ஸெர்விஸில் தேறிய பிறகு ரமேச சந்த்ரர் தம் இளமைத்தோழர்களாகிய விஹாரிலாலோடும், ஸுரேந்த்ர நாதரோடும் ஐரோப்பாக் கண்டத்தைச்சுற்றி ப்ரயாணம் செய்யப் புறப்பட்டார். 1871-ம் ௵ ஆகஸ்ட் மாதத்தில் அவர்கள் ப்ரான்ஸ் தேசத்தின் ராஜதானி பட்டணமாகிய பாரி (பாரிஸ்—Paris—என்று எழுதியிருப்பதற்கு ப்ரெஞ்ச் பாஷை யுச்சரிப்பு இதுவே) நகரத்துக்கு வந்துசேர்ந்தார்கள். 1870-71-ம் ௵த்திய யுத்தம் அப்போது முடிந்துவிட்டது. ப்ரான்ஸில் அமைதியும் அமரிக்கையும் இன்னும் ஏற்படவில்லை. 'கம்யூனியனிஸ்ட்'கக்ஷியார் நகரங்களுக்குள் ராணியாய், உப்பரிகைகளாகிய கிரீடமணிந்து விளங்கும் பாரிநகரத்தின் மநோஹரமான மாளிகைக் கூட்டத்தைச் சூர்ணமாக்கி த்வம்ஸம்செய்தனர். அதன்மேல் ப்ரென்ச் போர்வீரர் கம்யூனியனிஸ்ட் கக்ஷியாரைக் குண்டுபோட்டுச் சுடுவோராயினர். இந்தச் சமயத்தில் ரமேசர், விஹாரி, ஸுரேந்த்ரர் ஆகிய இம்மூன்று நண்பர்களும் பாரி நகரத்துக்குவந்திருந்தனர். அவர்கள்மார்ஸேல்ஸ் என்னுமிடத்தைப் பார்க்கப்போயிருந்தனர். அந்த இடத்தில்தான் ப்ரென்சுக்காரர் இவர்களை விதேசிய கம்யூனியனிஸ்ட் கக்ஷிக்காரர் என்று சந்தேகித்து அரெஸ்ட் செய்தார்கள். அம்மூவரும் ப்ரென்ச் கவர்ன்மெண்டின் காவற்சாலையில் ஒரு இரவு கழித்தனர். அடுத்தநாள் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பாஸ்போர்ட்டைக்காட்டி அவர்கள் மரண தண்டனையடையாமல் விடுதலைபெற்று மீண்டனர். இன்னும் சில தினங்களுக்குமுன் அவர்கள் பாரியில் பிடிக்கப்பட்டிருப்பார்களாயின், பாரி நகரியின் பஞ்சபூதங்களிலேயே அவர்களின் பாஞ்சபௌதிக சரீரம் கலந்துபோயிருக்கும்.

### ஸிவில் ஸேர்விஸ்

1871-ம் ௵த்தில் ரமேச சந்த்ரர் வங்காளத்தில் ஸிவில் ஸெர்விஸில் நியமிக்கப்பட்டார். 1871-ம் ௵முதல் 1872-ம் ௵வரையில் அவர் வங்காளத்தின் வெவ்வேறு ஜில்லாக்களில் வேலைபார்த்தார். 1874-ம் ௵த்தில் நதீயா என்னும் நவத்வீப ஜில்லாவின் பஞ்ச நிவர்த்தி அலுவலில் நியமிக்கப்பட்டார். 1876-ம் ௵த்தில் நிகழ்ந்த பெரும் புயற்காற்றால் கீழ்வங்காளத்துக்குப் பெருத்த நாசம் உண்டாயிற்று. பாகர்கஞ்ஜுக்குத் தென்பாலுள்ள ஷாஹுராஜபூர் சின்னபின்னமாகிச் சுடுகாடாய் மாறிவிட்டது. ஸமஸ்த தீவுகளும் பிணவுடம்புகளால் மூடப்பட்டுப் போயின; வழிகளிலும் கடைத்தெருவுகளிலும் வயல்களிலும் மரித்த நரநாரியரின் சவங்களே; மரக்கிளைகளிலே ஒதுங்கி நழுவிய நரநாரியரின் பிணங்கள் தொங்கலாடிக் கொண்டிருந்தன; தடாகத்திலும், குட்டையிலும், வாவியிலும், ஆற்று நீரிலும் செத்த பிணங்களே காணப்பட்டன. நாடெங்கணும் ம்ருத்யு பயமும், உயிரற்ற தேகங்களினின்றெழும் பிண நாற்றமும் நிறைந்திருந்தது. ம்ருத்யுவின் தாண்டவத்தினால் த்வம்ஸம் செய்யப்பட்ட ஷாஹுராஜபுரத்தில் ரமேசர் அமைதியையும் அமரிக்கையையும் நிலைநிறுத்தி தேசவாஸிகளின் வாழ்த்துகளையும் துரைத்தனத்தாரின் புகழ்ச்சியையும் பெற்றார்.

### உத்தியோக நிலைமை

ஸிவில் ஸெர்விஸில் ரமேச சந்த்ரருக்குப் பதினொரு வருஷங்கள் கழிந்தன. இந்தப் பதினொரு வருஷங்களில் ரமேச சந்த்ரர் இரண்டு தடவை சிறிது காலமட்டும் சாயமாயில்லாத மாஜிஸ்ட்ரேட் உத்யோகத்துக்கு நியமிக்கப்பட்டார். அப்போதும் ஒரு வெங்காளி ஸிவிலியனாவது ஜில்லாவின் பக்கா மாஜிஸ்ட்ரேட்டாக ஆனது கிடையாது. பிறகு 1883-ம் ௵த்தில் அவர் பாரிஸால் மாஜிஸ்ட்ரேட்டாக

நியமனம் பெற்ருர். 1875-ம் ஞு வரைக்கும் அதே வேலையிலிருந்தார். வங்காளத்து ஸர்க்கார் சரித்திரத்திலே பாரிஸாலுக்குக் கெட்ட பெயர் உண்டாயிருக்கிறது. எப்போதும் கொந்தளிப்புடன் கூடிய பாரிஸாலில் அமைதியின்மையும் உபத்ரவமும் கலசமும் கலவரையும் குறைவில்லாமல் இருந்துகொண்டே யிருக்கும். வெங்காளி விவிலியனுகிய ரமேசசந்த்ரர் துரைத்தன நிர்வாகத்தில் நிபுணரென்று பெயர் பெற்றிருந்ததனுலும், ஜனங்களின் குறையையறிந்து ஒழுகும் தன்மையினுலும், இந்திய கவர்ன்மெண்டார் அவரை விஹாரதேசத் தலைவராக நியமனம் செய்தனர். துரைத்தன நிர்வாகப்பகுதியின் உயர்ந்த பதவியில் வெங்காளிகள்ப்ரவேசிப்பதற்கு வழியைப் பரிஷ்கரித்து வைத்தார். தம்முடைய விசாரணைக்குட்பட்ட உயர்ந்த அந்தஸ்துள்ள ஆங்கல உத்யோகஸ்தர்களையும் ஜாயின்டும் அஸிஸ்டென்டுமான மாஜிஸ்ரேட்டுகளையும், ஸிவில் ஸர்ஜன், போலிஸ் ஸுபரின்டென்டெண்ட் முதலியவர்களையும் நல்ல மாதிரியாகவே தட்டிக்கொடுத்து வேலை வாங்கி ரமேச சந்த்ரர் தம் திறமையை வெளிப்படுத்தினுர். கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கெஜெட்டிலே இதைப்பற்றி அவரைப் புகழ்ந்து பேசியிருந்தார்கள். ரிப்பன் ப்ரபு ஒருதடவை அவரைக் கூப்பிட்டனுப்பினுர். ரமேசசந்த்ரர் அந்த அழைப்பை ஏற்று பேட்டி செய்துகொள்ள வந்தபோது, ரிப்பன் ப்ரபு அவரை நோக்கி "நான் பாரதநாட்டை விட்டுப் போவதற்கு முன் உம்மை ஒரு தடவை பார்க்கவேண்டுமென்று உம்மை வரவழைத்தேன். நீர் 'உம் அலுவலைச் செய்யும் விதம் சீமையிலுள்ளவர்களுக்குத் தெரியும் பட்சத்தில், அப்போது துரைத்தன நிர்வாகத்தில் பாரதவாஸிகளுக்கு ஸாமர்த்தியம் இருக்கிறதா என்னும் விஷயத்தில் சீமையில் இனி ஸந்தேஹமே உண்டாகாது," என்ருர்.

கர்ம வாழ்க்கையைத் தொடங்கும்போதே ரமேச சந்த்ரர் வங்காளிப் பயிரிடுவோரின் நிலைமையின் சம்பந்தமாய் நூல் எழுதலானுர். அது மாத்திரமன்று. குடி முறைமையைப் பற்றிய சட்டத்திற்காக உழைத்து வந்தார். இவர் விஹாரதேசத் தலைவராகவிருந்தபோது ராஜாங்கமெவ்வாறு நடத்தவேண்டும் என்று காட்டிய ஓர் குணவிசேஷத்தால் தேசப் பிரதிநிதியாரின் சட்டசபையின் அங்கத்தினரில் ஒருவராக ஏற்படுத்தப்பட்டனர். இவர் எவரும் மதிக்கும்படி இந்த நிலைமையை வஹித்து வந்தனர். இதற்குள் இடை இடை இவர் இங்கிலண்டிற்குச் சென்று வந்துக்கொண்டிருந்தனர். 1892-ஞு இவருக்கு இந்திய ஸம்ராடநேசன் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. 1897 ஞு அவர் இந்திய கவரன்மெண்ட் வேலையிலிருந்து "பின்சின்" வாங்கிக்கொண்டார். இடையில் இநதிய ஜாதிய மஹாநாட்டிற் கொருமுறை அக்கிராசனு நிபத்யம்வஹித்துப் பின் பரோடாராஜ்யத்து மந்திரியாக விருந்து, இடையில் ராஜத்வ பிரிவினை சூழ்ச்சிக்கூட்டத் (Decentralisation Committee) திற்கூடி உழைக்கும் பொருட்டு அந்த நிலைமையிலிருந்து வெளிவந்து, அது முடிந்ததும் மறுபடியும் பரோடா நகரத்து மந்திரித்வத்தை வஹித்து, இறக்கும் வரை நன்ருக ஒழிகி வந்தனர்.

அவரதுமேன்மை

ரமேசசந்திரர் வடமொழியில் தேர்ந்த அறிவினர்; அதிலுழைத்து பாடுபட்டவர். வங்கபாஷையிலும் தேர்ந்து நுண்ணுணர்வுடையார். ஆங்கிலத்திலும் மிக உழைத்த ஞானி. சரித்திரம், சாஸ்திரம், இலக்கியம், பாஷா விவரணம், மத ஒழுங்கு இவை முதலிய எல்லாவற்றிலும் ஆழ்ந்த உணர்ச்சி யுடையவர். வங்கஸாஹித்திய பரிஷாதத்தை 1893-ஞுத்தில் ஏற்படுத்தி வங்கபாஷையைச் சீர்திருத்த முயன்ருர். அப்பாஷையில் "ஆக்ரா நகரத்து ஊழியக்காரி" என்னும் ஓர் நவீன

மெழுதினர். பின் ஆங்கிலத்தில் "தேன்னைத் தடாகம்" என்னும் ஓர் நவீனமும் உண்டாக்கி, பிமலா வென்னும் கதையும் இயற்றினர். ரிக் வேதத்தை வங்கத்தில் மொழிபெயர்த்து வங்க நாட்டாரது மனதை விஸ்தரித்தனர். இவருடைய நூல்களெல்லாம் ஆங்கிலத்தில் மிகப் பெயர் பெற்றன. சாரித்ரத்தைச் சீர்திருத்தித் தனது வடமொழி அறிவால் அதன் நிஸ்சயத்தை அறிந்து, புன்மையைக் கழித்து, ஸத்தியத்தைக் காட்டினர். புராதன இந்தியரின் நாகரீமென்னும் நூல் இன்னமும் சாரித்திரம் படிப்பவரின் முதநூலாகி நிற்கிறது. 'கர்ஸன் ப்ரபுவிற்கு எழுதிய பஹிரங்கக் கடிதங்கள்,' 'விக்டோரியாவின்காலம்,' புராதன இந்தியசரித்திரத்தின் காலநிலை முதலிய புத்தகங்கள் மனத்தின் நிலைமையையும் ஆராய்ச்சியின் ஆழ்ந்ததன்மையையும்; இந்தியகுடி நிர்வாஹ சரிதை அவர் குடிகளிடத்துக்கொண்ட அன்பும், ஆர்வமும்; ஆங்கில நகரத்தில் சென்றிருந்தபோது அங்கு லண்டன் நகரத்து சர்வகலாசங்கத்து இந்திய சரித்திர பண்டிதராக ஏற்படுத்தப்பட்டபொழுது இடையில் ஆங்கிலகவியில் இராமயணத்தையும், மஹாபாரதத்தையும் இயற்றியது அவரது வடமொழி இடத்திருந்த பேரவாவையும் காட்டுகின்றன: பரோடா நகரத்து மந்திரியாக வாழ்ந்தகாலத்து இயற்றிய ராஜாங்க விமரிசைகள் அவரது அன்பின் உயர்வையும், எளியோரைக் காப்பாற்றும் குணத்தையும் விளக்குகின்றன.

இத்தகைய மஹான் நம்மிடையிருந்தூட்டிய அமுதமெல்லாம் மனத்திலூறி பெருமைவாய்ந்திருக்கும்படிச் செய்யா தொழியாதென்பது திண்ணமாசக் கூறலாம். அவருடைய காலடிமேல் நாம் பாதை கொள்ள முயற்சித்து உயர்ந்து, இந்திய நாட்டிற்கும், உலக விருத்திக்கும் உபயோகமாகும்படி முயலவேண்டுமென்பதே அவர் சரிதையைப் படிப்பதின் படிப்பினை எனக்கூறலாம்.

# சில உயர்ந்த கற்கள்

## 1: மாணிக்கக்கல் அல்லது கெம்பு

## SOME PRECIOUS STONES
## 1: THE RUBY

சாதாரணமாகக் கெம்பு என்று வழங்கப்படுகிற மாணிக்கக்கல் குருவிந்த (Corundum) ஜாதியின் சிறந்த ரத்நம். மநோரம்யத்தை உண்டாக்கும் விஷயத்திலும், பார்வைக்கு அழகைக் காட்டும் விஷயத்திலும் மாணிக்கக் கற்கள் சிறந்தன. இந்தக் குருவிந்த ஜாதியின் கற்களுக்குப் பிரகாசம் மிகவும் மேன்மையானதாகவிருக்கின்றது, அதன் மழமழப்பான முகம் பிராகாசத்தை அதிகப்படுத்துகிறது. ஒளியில் வைரம் பாய்ந்திருப்பதன்றிக் குணத்தில் அதை ஒவ்வாது. வலிவு நிறைவின்மையாலும் ஸ்வபாவத்தில் கண்ணாடியைப்போல் வெடிக்கக்கூடியதாலும் வைரத்தை அது ஒவ்வாது. இதைப்போன்ற பிரகாசமும், நெருப்புப்போல் பிரகாசிக்கும் தன்மையும் வைரம் தவிர மற்ற எந்த ரத்தினத்திற்கும் கிடையாது. அதுபோலன்றிப் பொய்ம் மாணிக்கமும் தரப்புக்கல்களும், மாணிக்கத்துக்கு ஈடாகா. குற்ற முள்ள மாணிக்கமும்கூட, தன்னொளியின் ஸ்வபாவத்தினால், செதுக்கப்பட்டால் பிரகாசம் உயர்ந்து மதிப்படைகிறது. மேலும் அஜாக்ரதையாக உபயோகப்படுத்தினுங்கூட, அதன் ஒளி மாறுது. அதன் சுத்தமான தன்மையும், உயர்ந்த பிரகாசமும், அழகிய வர்ணத்தோடு கலந்து மயங்கி மனதை ரம்யப்படுத்துகின்றது.

ரத்தின பரீக்ஷை செய்பவர்களும், நகை செய்வோரும், கெம்பு (மாணிக்கம்) என்னும் பதத்தைப் பேதமின்றி உபயோகப்படுத்துகிருர்கள். அது இரண்டுவிதம். பொய்ம்மாணிக்கம், மெய்ம்மாணிக்கம் (கெம்பு), என இரண்டு வகைப்படும். பொய்ம்மாணிக்கம் சிறந்ததாக மதிக்கப்படாது. தரப்புக் கல்களும் இந்த

ஜாதியின் ஓர் வகை. இதன் பிரகாசம் மந்தமாயிருக்கும் நீரோட்டமென்பதின்றி விளங்கும்.

மெய்ம்மாணிக்கம் வலுவிற் சிறந்தது. பிரகாசத்தில் உயர்ந்தது. பால் ரோஜா வர்ணத்திலிருந்து ரத்த வர்ணம் வரை கெம்புக்கல்லில் பிரகாசம் வீசும். இதன் இடை இடையில் ஊதா நீலம் பாய்ந்தாற்போல் பக்கவாட்டில் பார்க்கத்தென்படும். இந்தக்குணத்திற்கேநீரோட்டமென்று ஜனங்களால் சொல்லப்படுகிறது. பொய்ம்மாணிக்கத்தில் இது காணப்படாது. சிறந்த மாணிக்கத்தின் வர்ணம் கருஞ்சிவப்பில் பால் நீலம் பாய்ந்தாற்போல் பிரகாசிக்கும். மாதுளைப்பழத்தின் விதைபோல் ஒளிவீசும். இந்த வர்ணம் இயற்கையாய் அமைந்தது. குரோமியம் எனும் லோஹத்தில் பிராணவாயு கலப்பினுல் உண்டாகும்உப்பின் (Oxide of chromium) இருப்பினுல் இவ்வாறு பிரகாசிக்கிறது. ஓர் பக்கம் விட்டு மற்ருேர் பக்கத்தில் பார்த்தால் மாணிக்கக் கற்கள் பருமன் அதிகமாவதாகத் தோற்றும். இதற்கே த்விவர்ண ஸ்வபாவம் (Dichroism) என்று சொல்லப்படும். இந்தக்குணவிசேஷத்தால்தான் தரப்புக்கற்கள், பொய்ம்மாணிக்கங்கள், இவற்றிலிருந்து மெய்ம்மாணிக்கத்தை ரத்ன பரீக்ஷகர்கள் அறிகிருர்கள். அவற்றிற்கு இக்குணம் இல்லை. மற்ருேர் விதமாகவும் அறியலாம். ஒரே (முகத்தலளவு) அளவான தரப்பு கல்லையும், பொய்ம்மாணிக்கத்தையும் நீரில்வைத்து நிரைசெய்வோமானுல் மெய்ம்மாணிக்கம் கனம் அதிகமாக இருப்பதாகத் தெரியவரும். மெய்ம்மாணிக்கம் தன் அளவான ஜலத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு கனமானது. பொய்ம்மாணிக்கமும் தரப்புக்கற்களும் கெம்பைக்காட்டிலும் கனம் மிகக்குறைவு. இதுமாத்திரமன்று: மற்ருேர் விதத்திலும் அறியலாம். மாணிக்கக்கல்லை எடுத்து அதன் கூறிய முனையால் பொய்ம்மாணிக்கம் தரப்புக்கல்கள் இவைமேல் கீறினுல் கோடுகள் விழும். அவைகளால் மாணிக்கத்தின் மேல் கீற முடியாது. இம்மூன்று குணங்களாலும் கெம்புக்கல்லானது மற்றைய பொய்க் கற்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. பக்கம் பக்கத்திற்கு ஒளி வேறு படுவதால் ஒளிக்குத் தக்கவாறு மாணிக்கத்தைச் செதுக்கவேண்டும். அவ்வாறு செதுக்கினுல்தான் உயர்ந்த ஒளி உண்டாகும். இல்லாவிடில் மிகத்தாழ்ந்த ஒளிதான் கிடைக்கும்.

மெய்ம்மாணிக்கங்கள் நமது தேசத்திலும் பூமியின் பூர்வபாகங்களிலும் கிடைக்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் கிடைக்கும் கற்களெல்லாம் தரப்புக்கற்கள். இந்திய நாட்டில் கிடைக்கும் கற்கள்மிகவும் உயர்ந்தவை. குற்றமற்ற மாணிக்கம் கிடைப்பது மிகவும் அருமை. மூன்று கேரட் (Carat) கனமுள்ள கல் கிடைப்பதே அருமை. மூன்றுகேரட்டுள்ள வைரக்கல்லின் விலை 2000 ரூபாய். மூன்றுகேரட்டு கனமுள்ள கெம்புக்கல்லின் விலை 20,000 ரூபாய். அதாவது வைரத்தைக்காட்டிலும் பதின்மடங்கு உயர்வானது. மாணிக்கத்தின் விலையை மதிப்பவர் கிடையாது. கன்ஸ் என்னும் (Mr. G. F. Kunz) அமெரிக்கா தேசத்து ரத்ன பரீக்ஷகர், ஒன்பது கேரட் கனமுள்ள கெம்பின் விலை 105,000 ரூபாய் என்று ஓர் தரம் மதித்திருக்கிருர். ஸ்டிரீடேர் (Mr. E. W. Streeter) என்பவர் 32, 38 கேரட் கனமுள்ளவை 150,000 ரூபாய் முதல் 300,000 ரூபாய் வரை என்று விலை மதித்ததாகச் சொல்லுகிருர்.

இவ்விதமாகிய உயர்ந்தவிலை குற்றமற்ற கெம்புக்கற்களுக்குத்தான் கிடைக்கும். கெம்புக்களில் பலவித குற்றங்கள் உண்டு. ஒளிமங்கியிருக்கும் தன்மை, வெள்ளைவெள்ளையாகி முகில் பாய்ந்திருக்கும் நசனைகள், இவைகள் பால் வர்ண பதும ராகங்களில் சந்திக்கக்கூடியவை. இவைமாத்திரமன்றி, வெடிப்பு, கோடுகள், சரியாக ஒளிபரவாதிருத்தல் இவைமுதலானவை கெம்புக்கற்களில் காணக்கூடிய குற்றங்கள்.

கீழ்நாடுகளில் யாத்திரைசெய்து பெயர்பெற்ற

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 7 - APR 1910 MADRAS.

டேர்ரர்நியர் (Terrernier) என்பவர் பீஜாபுர (Bijapur) மன்னனிடத்து 600000 ரூ மதிக்கப்பட்ட 50 கேரட் பருமனுள்ள கல்லையும், ஆவாநகரத்து அரசன் காதணியில் பொருந்திய 74,550 ரூக்கு மதிக்கப்பட்ட 15 கேரட் பருமனுள்ள மாணிக்கக் கற்களைக் கண்டதாகவும் கூறியிருக்கின்றனர். ஜெர்மானிய தேசத்தரசனாகிய இரண்டாவது ரோடால்ப் (Rodolph II) என்னுமரசன் 420,000 ரூக்கு மதிக்கப்பட்ட மாணிக்க மடைந்திருந்தான் என்றும் கூறுகிறார். டேர்ரர்நியர் மொகலாய ராஜ்யத்தின் ஸிம்ஹாஸனத்தில் 108 மாணிக்கக் கற்கள் இழைத்திருந்ததாகவும், ஒவ்வொன்றும் 100 அல்லது 200 கேரட் பருமனுள்ள தென்றும் கூறியிருக்கின்றனர். இவர் மாத்திரமன்றி வேறு யாத்ரிகர்களும் இத்தகைய விருத்தாந்தங்களெல்லாம் கூறுகின்றனர். ஆயினும் இவர்கள் தரப்புக் கற்களை மாணிக்கக் கற்களென்று மயங்கிவிட்டனரென்று தோன்றுகிறது. ஆங்கிலேய நாட்டரசாது மகுடத்திலிழைக்கப்பட்டிருக்கிற கீர்த்திபெற்ற ரத்நமும் தரப்புக்கல் என்றுதான் ஊஹிக்கப்படுகிறது. இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் மிகப் பெரிய மாணிக்கமாக விளங்கியது, இலங்கை நகரத்தரசனிடத்திருந்த தென்று மார்க்கோ போலோ (Marco Polo) என்னும் கீர்த்திபெற்ற யாத்ரிகர் கூறுகின்றனர். அது ஒரு சாண் நீளமும், கைப்பிரமாணம் பருமனும் உடைத்தாயிருந்ததாம். அதுமாத்திரமன்றிக் குற்றமென்பது லவலேமுசமின்றி யிருந்ததாம். இதைக் குப்லாய்கான் என்னுமரசன் தன் பிரதிநிதி மூலமாக விலைக்குக்கேட்டு அதற்குப் பதிலாக ஓர் பெரும் நகரம் கொடுப்பதாகவும் சொல்ல, இலங்கைநாட்டு மன்னன் அதற்கிணங்கவில்லை. பின் அந்த மாணிக்கத்தின் வரலாறு என்னவாயதோ இன்னமும் தெரிந்ததில்லை.

1903ஆ காட்டிய இந்திய கைத்தொழிற் காட்சியில் ராயபஹதூர் தாஸ்பஹதூர் அண்ட் ஸன்ஸ் என்னும் கும்பெனியாரால் காட்டப்பட்ட "சத்ரபதி மாணிக்கம்" என்னும் மாணிக்கம் 2-அங்குலம் நீளமும், $1\frac{1}{2}$-அங்குலம் அகலமுமுள்ளது. இது க்ரமமாக இந்திய, மஹமதிய அரசர்களால் அவரவர் காலங்களில் உரிமை பாராட்டப்பட்டு வந்தது. இக்கல் சிறந்த இந்திய பட்டை வைரக் கற்களோடு கூடிய ஆபரணம் ஒன்றில் நடுநாயமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இனிவரும் பகுதியில் மாணிக்க கற்களைக் கடைசல் செய்யும்விதம் முதலியவற்றைப் பற்றி விரித்தெழுதுவோம்.

பி. வி. ஸ்வாமிராவ், எம். ஏ.

---

பிரகிருதி சாஸ்திரசாலை.—லண்டன் நகரத்தில் ஒரு பெரிய சாஸ்திரசாலையிருக்கின்றது. வயது சென்ற சாஸ்திரிகள் அங்கே போகிறதுவழக்கம். பெரும்பாலும் வெள்ளிக்கிழமை சாயந்திரம் அங்கே அநேகம்பேரைக் காணலாம். தெருவில் வண்டிகள் நிறைந்திருக்கும். துரைகளும் துரைசானிகளும் பற்பல இடங்களிலிருந்து வந்து சேருவார்கள். அந்தச் சாலைக்குள் பிரவேசித்தபோது எதிரில் ஒரு கூடம் இருக்கும். அதின் மத்தியில் ஒரு பெரிய படி இருக்கும். அது கருங்கல்லால் கட்டியது. கூடத்தின் இருபுறத்திலும் அறைகள் உண்டு. அந்த அறைகளில் சுவர் தெரியாமல் கணக்கில்லாத புத்தகங்கள் அடுக்கியிருக்கும். மேஜையின்மேல் அக்காலத்துச் சாஸ்திரபத்திரிகைகள் பரப்பியிருக்கும். நானாவிதமான இயந்திரங்களைக் காணலாம். சாஸ்திரபரீக்ஷைக்கு வேண்டிய அரும்பொருள்களும் அங்கே வைக்கப்பட்டிருக்கும். படியின்மேலேறி வலதுகைப்பக்கமாயத் திரும்பினால் பிரசங்கசாலை காணப்படும். அங்கே பெரிய மேஜை ஒன்றிருக்கின்றது. அது லாடத்தைப் போலிருக்கும். பரீக்ஷைக்கு ஏற்றதாயச் செயயப்பட்டு இருக்கிற அந்த மேஜைக்குப் பின்புறத்தில் உலைக்களமும் கறுப்பு நிறமான பலகையும் இருக்கும். மேஜையைச் சுற்றி உட்காருவதற்கு வரிசை வரிசையாக நாற்காலி போட்டிருக்கும். ஏறக்குறைய எழுநூறுபேர் இருப்பதற்குப் போதுமான இடமிருக்கின்றது. மெத்தையின் கீழே ரசாயனசாத்திர பரீக்ஷாசாலை ஒன்றுண்டு. அதில் இப்போது தேவையாயுள்ள சகல கருவிகளையும் காணலாம். அந்தக் கட்டடத்திலேயே ஒரு இடத்தில் அததற்கு அதிகாரிகள் குடியிருக்கிறார்கள். தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ளவும், புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகமுடையதாகிய சகலத்தையும் ஜனங்கள் எளிதில் அறிந்துகொள்ளவும், நெடுங்கிலும் செயதுவரும் பிரசங்கத்தினாலும் செயது காட்டுகிற பரீக்ஷையினாலும் சாஸ்திரத்தில் சொல்லிய உண்மைகளை அநுபவத்தில் கண்டறியும்பொருட்டும் மேற்படி சாலை கட்டப்பட்டது.

## தூங்காதிருங்கள்

### BE INDUSTRIOUS

சில நூற்றாண்டுகளுக்குமுன் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், விவசாயத்திலும் சமானமில்லாமலிருந்த நாம் இப்பொழுது என்ன ஸ்திதியிலிருக்கிறோம், நமது கைத்தொழில்கள் என்னவாயின, நமது வியாபாரம் எங்கே போயிற்று, நமது விவசாயம் எப்படியிருக்கிறது, என்னும் விஷயங்களைச் சற்றுக் கவனிப்போம்.

அயல் நாட்டார் எல்லாரும் யந்திரசகாயத்தினால் கைத்தொழில்களை விருத்திசெய்து குறைந்த விலைக்கு விற்றுக்கொண்டிருப்பதாலும் நாம் நமது புராதன வழக்கத்தைவிடக் கூடாதென்னும் ஒரே வைராக்கியத்தைக்கொண்டு சுலபமாய் வேலை செய்யும் யந்திரங்களை, நமக்கு முன்னால் எவராவது கொண்டுவந்து காட்டினாலுங்கூட அதைக் கண்ணெடுத்துக்கூட பார்க்காமலும், அது எப்படி வேலை செய்கிறதென்று பார்ப்பதற்குக்கூட பொறுமையில்லாமலும் அதுகளெல்லாம் நமக்குத் தகாதென்று சொல்லிவிட்டும் மாமூல் பிரகாரம் நமது முன்னோர்கள் செய்தபடியே நாமும் செய்துவருவதாலும் நாம் செய்யும் சாமான்களின்விலை அதிகமாவதாலும் நமது சரக்குகள் சரியான விலையாகாமல் நமது கைத்தொழில்கள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றன. மற்ற தேசத்தார் எப்படிக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள் என்று கவனித்து அவர்கள் உபயோகப்படுத்தும் கருவிகளையும் யந்திரங்களையும் உபயோகித்து நமது கைத்தொழில்களை விருத்தி செய்ய பிரயாசைப்படாமல் இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தால் நமது கைத்தொழில் இருந்த இடம் தெரியாமல் போகுமென்பதில் கொஞ்சமாவது சந்தேகமில்லை.

நமது நாட்டின் முக்கியமான வியாபாரங்களுக்கெல்லாம் சொந்தக்காரர் யார்? நிச்சயமாய் நாமல்ல. ஏன்? வியாபாரங்களுக்கு வேண்டிய வீடு முதல் நம்மிடம் இல்லையென்னும் காரணம் ஒப்பத்தக்கதல்ல. ஏனென்றால் சிலவருஷங்களுக்கு முன்னால் இன்சால்வன்ட் ஆன அர்பத்நட் கம்பெனியே அதற்கு போதுமான சாக்ஷி. இப்போது சரிவர நடத்தப்படும் வியாபாரஸ்தலங்களிலெல்லாம் வியாபாரம் அன்னியர்களுடையதாயிருந்தாலும் வியாபாரத்தைச் சரிவர நடத்திக்கொண்டு போவதெல்லாம் நாம் ஆகையால், நமக்கு வியாபாரம் நடத்தக்கூடிய சக்தியுமில்லை யென்பதும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. ஆனால் நம்மிடத்தில் ஒற்றுமையில்லாததும் நம்பிக்கையில்லாததும்தான் முக்கிய காரணங்கள். இப்போது முன்னாலிருந்ததைப் போலிராமல் நமது ஜாதியார் கொஞ்சம் ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் வியாபாரங்களைக் கூட்டுப் பிராமாணத்தால் செய்துவருகிறார்களென்பதைப் பார்க்க அதிகச் சந்தோஷப்படுகிறோம். இன்னும் இந்த விஷயம் பூராவாய் விருத்தியாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம். இவ்விஷயங்கள் இப்படியிருக்க, நமக்கு ஜீவாதாரமாயிருக்கும் விவசாயம் என்ன ஸ்திதியிலிருக்கிறதென்பதையும் கைத்தொழில்களை விட்டுவிட்டதுபோல் விவசாயத்தையும் சற்றுக் கவனிப்போம். நமது தேசத்திலிருக்கும் ஜனங்களில் முக்கால் பங்குக்குமேல் விவசாயத்தையே ஜீவனோபாயமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். அயல் தேசங்களிலிருந்து அனேகமாய் உணவு தானியங்கள் இறக்குமதியாவதில்லை. ஜனத்தொகையானது நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அனேகமாய்ச் சாகுபடிக்கு லாயக்கில்லாத கல்லாங்குத்துகளும் ஓடைப்போக்குகளும் களர் நிலங்களுந்தான் இப்போது விவசாயம் செய்யப்படாமலிருக்கின்றன. மாசூல் குறைந்தும் தரத்தில் தாழ்ந்தும் இருக்கிறது. மழைப்பதம் சீதோஷ்ணம் முதலிய காலவியல்புகள் மாறியிருக்கின்றன.

தற்காலத்தில் விவசாயமானது கேவலமான தொழில் யென்று மதிக்கப்படுவதால் கற்றவர்களாலும் புத்தி விசாலமுடையவர்களாலும் நேரில் செய்யப்படாமல் புத்திவிசாலமில்லாதவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அவர்கள் தங்கள் முறைகளே சிலாக்கியமானவைகளென்றும் விவசாய விருத்தியே அனுவசியமென்றும் அபிப்பிராயப்படுவதால் நாளுக்கு நாள் விவசாயம் க்ஷீணித்து வருகிறது. சாஸ்திர விதிப்படி விவசாயம் செய்பவர்களுக்கு அகப்படும் மாசூலில் நமக்கு நாலில் ஒரு பங்குதான் அகப்படுகிறது. உயர்தரக்கல்வியில் தேர்ந்தவர்களுக்கு இப்போதே சரியானவேலை அகப்படாமல் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் சில வருஷங்களில் இவர்களுக்கு வேலை அகப்படுவது அதிக கஷ்டமாகும். ஆகையால் இப்போதே இவர்கள் கைத்தொழில் வியாபாரம் விவசாயம் முதலியவைகளில் தேர்ச்சியடைவது சிலாக்கியமாகும். ஆகையால் இன்னமும் தூங்கிக்கொண்டிராமல் தூக்கத்தை உதறிவிட்டு நன்றாய்க் கண்களைத் துடைத்துக்கொண்டு ஜாக்கிரதைப் படுவார்களென்று நம்புகிறோம்.

ஜே. ஆர். ரங்கராஜு.

ஒருவரையும் அதிகமாய் நம்பாதே.—என்னதான் மனிதர்கள் எல்லாரும் ஒன்றென நாம் சொன்னபோதிலும், ஒவ்வொருவர்க்குள்ளும் சில வித்தியாசங்கள் இருக்க நாம் பரிசோதித்தால் காணலாம். யோக்கியமுள்ளவர்களும் அயோக்கியமான காரியத்தை ஒரு சமயத்தில் செய்து விடுகிறார்கள்; அந்தஸ்துள்ள மனிதன் அற்ப விஷயங்களையும் செய்து விடுகிறான்; நல்லவன் கெடுதியையும், கெட்டவன் நல்லதையும் ஒரு சமயத்தில் செய்வதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? ஆகையால் ஒவ்வொருவரையும் நாம் பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா? ஒரு மனிதன் தான், மிகவும் கௌரவ முள்ளவனென்று சொல்லிக் கொள்வான்; ஐயோ அப்படியே அவன் சொல்லிக் கொள்ளட்டும்; அதைப் பற்றி நமக்கு ஒன்றும் பொறாமை வேண்டாம். ஆனால் அவன் சொல்வதை நம்பி நமது கைப்பொருளை அவனிடம் ஒப்புவித்துவைப்போமேயானால் நம்மைவிடப் பெரும் மூடர்கள் இல்லை. "தன்னுயுதமும் தன் கையிற் பொருளும் பிறர்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே."

# தன்பொறுப்பு

## RESPONSIBILITY

"கட்டிக்கொடுத்த அமுதும் சொல்லிக்கொடுத்த புத்தியும் எத்தனை நாள் வரும்" என்றும், "தென்னைமரத்தில் ஏறுகிறவனை எவ்வளவு தூரம் தாங்கலாம்" என்றும் உலகத்தார் சொல்லுவதை நாம் கேட்டிருக்கிறோம். இச்சொற்கள் வெகு உண்மையான சொற்கள். தாய் தந்தையர்கள் புத்தி புகட்டி நடத்துங் காலம் சொற்பகாலம். நாம் நமது சொந்த விஷயங்களைச் செய்யத் தெரியாது வகையற்று வெகு சிறுவர்களாயிருக்கிறவரையில் நமக்கு உடை உடுத்துவதும் புசிப்பு ஊட்டுவதும் நம்மைத் தூக்கி எடுப்பதும் நமது தாய் தந்தையர்கள் உதவியாலாகின்றன. அதேமாதிரி நமது குருவும் நண்பர்களும் நமக்குப் புத்தி சொல்லி அறிவு புகட்டி நம்மை நடத்துங் காலம் சொற்பகாலம். இக்காலம் கழிந்த பின்பு ஒவ்வொருவரும் தம்மைத் தாமே இவ்வுலகத்தில் நடத்திக்கொள்ளும் காலம் வருகின்றதல்லவா? இக்காலம் 14-ஆவது வயது முதல் 20-வயதுக்குள் என்று சொல்லலாம். அதுவரையில் நாம் பொறுப்பற்ற சிறு குழந்தைகளாக விருந்தோம். சட்டங்களிற்கூட 12-வயதுக்குள் ஒரு குழந்தை ஒரு குற்றஞ் செய்துவிட்டால் அது சிற்சில சமயங்களில் குற்றமாகாதென்று விதித்திருக்கின்றது. குழந்தைகளாயிருந்த வரையிற்றான் மற்றவர்கள் பொறுப்பில் நாமிருந்துவிட்டோம். தன் பொறுப்பு தனக்கு வந்தபிறகு ஒருவன் மற்றொருவனுக்கு அடங்குகிறவனுகமாட்டான். தன் செயலுக்குத் தானே உத்தரவாதியாகின்றான். அவனிஷ்டப்பட்டால் ஈசுவரனுக்குக் கூட அவன் அடங்கி நடக்கவேண்டியதில்லை. ஆகையால் இவ்விதமாகத் தன்பொறுப்பு வரும் பருவம் அதாவது, 14-ஆவது வயது முதல் 20

வயதுக்குள்ளாகிய காலம் ஒவ்வொருவன் ஆயுளிலும் வெகு சிலாக்கியமான காலம். ஒருவனை நற்பதவிக்குக் கொண்டுவருகிற காலமும் அதுதான்; ஒருவனைக்கெடுக்கிற காலமும் அதேதான். இதன் நுட்பமான அர்த்தமாவதென்ன? என்னை மேன்மையாக எண்ணிக் கொள்ளவோ, அல்லது என்னையே நான் கெடுத்துக்கொள்ளவோ, இப்பருவத்தில் நான் சர்வாதிகாரம் பெற்றிருக்கிறேன் என்றபடி. இப்பருவம் நமக்கு வந்ததும் நம்முள் ஒவ்வொருவரும் வெகு நாகரிகமான நிலைமையில் தத்தளிப்பவர்களாகின்றோம். ஒவ்வொரு நிமிஷமும் நாம் செய்யப்புகும் வேலைகளில் இவ்வாறு செய்வது நியாயமா அநியாயமா என்பதை நாமே நிச்சயித்துக்கொள்ளும் பதவியில் வந்துவிடுகின்றோம். நமது தேகப்பயிற்சி, படிப்பு, உழைப்பு, வேடிக்கை, விநோதம், வ்யவகாரம் எல்லா விஷயங்களிலும் நாமே நமக்குள் இவ்வாறு செய்வது உத்தமம், அவ்வாறு செய்வது குற்றம், என்று நிச்சயித்துக்கொள்ளுகின்றோம்.

இவ்வண்ணம் நமது பொறுப்பால் நாம் நியாயத்தை நியாயமாகவே பார்த்து இறங்கி விடுவோமேயானால் அதுதான் நாம் மேன்மேலும் அபிவிருத்திக்கு வருவதற்கு ஓர் பெரும் அத்தாக்ஷி; அதற்குப் பதிலாக அக்கிரமத்தைக் கிரமமாகவும் அநியாயத்தை நியாயமாகவும் நமது பொறுப்பால் கருதி, குற்றமான நிச்சயங்களைக் கைக்கொண்டு ஒரு விஷயத்தில் இறங்கிவிடுவோமேயானால் அத்துடன் நமது க்ஷேமம் அப்பொழுது தொலைவதுமல்லாமல் நாளுக்குநாள் நாம் சங்கடங்களில் சிக்கிக்கொண்டு வெகு கஷ்டதசையில் வீழ்ந்து பரிதவிப்போம். "ஒரு நொடியில் அழிந்த கற்பு ஒரு யுகமானாலும் திரும்பி வாராது" என்றபடி, தன் பொறுப்பு வந்த காலத்தில் நாம் ஒரு விஷயத்தில் தப்பி நடந்து அக்கிரமத்தில் இறங்கிவிட்டால் அக்குற்றத்தை நாம் மறுபடியும் சீர்திருத்திக்கொள்ளவே முடியாதாகையால் இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் வெகு கவனமாகவிருக்கவேண்டும்.

இன்னும் சிலர் தன்பொறுப்பு வந்தபிறகும் பிறர் உதவியையும் செயலையும் கொண்டு தன் காரியங்களைச் செய்ய ஆரம்பிப்பார்கள்; அம்மாடித்தன்; அப்பாடிமித்தன்; மித்திரன் டித்தன்; மந்திரி டிமித்தன் என்ற சிலர், (இவ்விதமான புருஷர்களுடைய பட்டத்தின் அருத்தம் என்னவெனில்) அம்மா சொல்லுகிறபடி நடக்கிறவன்; அப்பா சொல்லுகிறபடி நடக்கிறவன்; ஒரு சிநேகிதன் புத்திப்படி நடக்கிறவன்; ஒரு மந்திரி புத்திப்படி நடக்கிறவன் என்பதாம். இவ்வாறான அம்மா, அப்பா, மித்திரன், மந்திரி இவர்கள் நல்லவர்களாகவிருந்து நல்வழியிலேயே ஒருவனை நடத்தினபோதிலும் அவனுக்கும், கடியாரத்தில் நாம் நமதிஷ்டப்படி திருப்பி வைத்து ஓட்டும் நிமிஷமுள்ளுக்கும், வினாடிமுள்ளுக்கும் வித்தியாசமே இல்லை. தன் ஸ்வய புத்தியைக் கொண்டு ஒரு காரியம் செய்யச் சக்தியற்று மற்றவர்கள் உதவியை நாடுகிறவன் மனிதனல்ல; மனிதவடிவங்கொண்ட ஒரு கருவியாவான்.

நீ முன்னுக்கு வர உனக்கு மனமிருந்தால் நீ ஒரு தீரனாகவிருக்கவேண்டும். உன் பொறுப்பும் உன்னறிவும் உன் உள்ளத்திலிருந்தே உதிக்கவேண்டும். வெளியார்கள் பூசும் மேல்பூச்சு ஒரு பிரயோஜனமும் ஈயாது. பெரிய வம்சத்தில் பிரபுக்களின் குழந்தைகள் சிற்சில சமயங்களில் மற்றவர்கள் சொற்கேட்டு நடப்பவர்களாய் ஆகிவிடலாம். கஷ்டதசையிலிருந்து அவஸ்தைப்பட்டு முன்னுக்கு வருகிறவர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் சொற்கேட்டு நடக்காமல் தங்கள் பொறுப்பைக்கொண்டு நடப்பவர்கள் என்பது சாஸ்திரம்.

இதுவுமன்றித் தன் பொறுப்பால் ஒரு காரியத்தை நடத்தாமல் மற்றவர்கள் உபதேசத்தால் நடத்தப்பட்டவர்கள் தங்கள் வேலையைத்

தாங்களே செய்ய சோம்பேறிகளாய் மற்றவர்களிடம் ஒப்புவைத்துச் சுகப்படும் நுட்ப அறிவுள்ளவர்களாய் அபவாதம் பெறுவார்கள். இவர்கள் ஒருபொழுதும் சுகப்படப்பட்டவர்களல்லர். சுகப்படுவதாக இவர்கள் எண்ணுவது தப்பிதமான கொள்கை. ஏனெனில் இருவர்கள் எப்பொழுதும் எவ்விஷயத்திலும் ஒரேவித நிச்சயித்துக்கு வரவேமாட்டார்கள். சொற்பகாலம் ஒரேவழியில் நடந்து அப்புறம் எப்பொழுதாவது பிரிந்தே தீரவேண்டும். முதல் முதல் அவ்வாறு பிரிவதால் உண்டாகும் வித்தியாசம் வெகு நுட்பமாயிருக்கும். நாளாக நாளாக இவ்விருவர்களும் முற்றிலும் வித்தியாசப்பட்டுச் சொற்பமேனும் ஒவ்வாமல் நடப்பவர்களாவார்கள்.

கப்பலை நடத்துவோன் தலைமைப்பூண்டு நடத்தினாலன்றிப் பெரும் புசலடிக்கும் பொழுது தலைவன், இப்பாயை இறக்கென்றால் அவன் நண்பன் "வேண்டாம், இப்பாய் இப்படியே இருக்கட்டும்" என்றால், அப்புறம் அம்மரக்கலம் எவ்வண்ணம் மூழ்காமலிருக்கும்? அதுபோலவேதான் தன் பொறுப்பு வந்தபின்னர், தன் புத்தியால் சரியான வழியில் நடப்பவன் முன்னுக்கு வருவான்; மற்றவர்கள் புத்தியைக்கொண்டு நடப்பவன் மேற்கூறிய மரக்கலம்போல நாசமடைவான்.

## ஸ்ரீ காலடி : கும்பாபிஷேகம்

ஆர்யதேசமான இந்தப் பாரதநாட்டில் கலியின் மகிமையால் தர்மங்கள் யாவும் தவறிப்போய் அதர்மமே மேலோங்கி வரும்போது கருணாநிதியான ஸர்வேச்வரன் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யர்களாக அவதரித்துத், துர்மதங்களைக் கண்டித்து, அத்வைதம் முதலிய ஆறு வைதிகமதங்களை மாத்திரம் நிலைநிறுத்தி, இவைகள் எப்போதும் குறைவு அடையா வண்ணம் ஆங்காங்கு மடங்களையும் அவைகளில் தன் சிஷ்யர்களான மகாத்மாக்களையும் ஏற்படுத்தி, நம்மவருக்கு மிகவும் உதவி புரிந்திருக்கிறாரென்பது நம்மவர்களெல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே. இந்தப் பரமாசார்யாள் அவதாரமடையும்படியான பாக்யத்தையடைந்தது காலடி என்னும் ஒரு திவ்ய க்ஷேத்ரம். இதற்கு ஸமீபத்தில் சூர்ணீ என்ற ஒரு நதியுண்டு. இந்த க்ஷேத்ரம் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் அங்கமலி என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு 5-மைல் தூரத்திலுள்ளது. இப்போது கொஞ்சகாலத்திற்கு முந்தி சில ஆஸ்திக கனவான்கள் இந்த க்ஷேத்ரத்தில் நமது பரமாசார்யாளின் ஆலயத்தை நன்றாய்க் கட்டி முடித்தார்கள். இதற்கு இப்போது சிருங்கேரியில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஆசார்யாளவர்கள் வந்து கும்பாபிஷேகம் செய்து பிரதிஷ்டை செய்யப்போகிறார்கள் என்று கேள்விப்பட்டு நமது தேசத்தின் எல்லாபாகத்திலிருந்தும் ஜனங்கள் வந்து கூடினார்கள். அந்த மகா பரிசுத்தமான கும்பாபிஷேகம் சென்ற மாசிமீ 10௨ திங்கட்கிழமை பகல் மணி 12-30-க்கு வெகு மங்களகரமாய் நடந்தேறியது. அப்போது கணக்கற்ற பிராம்மணர்களும் யதீச்வரர்களும் ராஜாக்களும் இன்னும் மற்றுமுள்ள கனதனவான்கள் யாவரும் வந்திருந்தார்கள். இந்த அத்புதகாக்ஷியைத் தரிசித்தவர்களின் பாக்யமே பாக்யம். குறிப்பிட்ட ஸமயத்தில் பஞ்சலோஹங்களால் சாஸ்திரப்படி செய்யப்பட்ட ஸ்ரீ சாரதாம்பாள் விக்ரஹத்தையும் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள் விக்ரஹத்தையும் ஸ்ரீமத் சிருங்கேரி ஆசார்யாளவர்கள் பிராம்மணர்களின் உபநிஷத் முதலிய வேதகோஷங்களை முன்னிட்டுக்கொண்டு நன்றாய் அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் பிரதிஷ்டை செய்தார்கள். இந்தப் புண்ய கார்யம் சரியாய் நிறைவேறியதும் அன்று மாலை ஸ்வாமிகளவர்களின் ஸந்நிதானத்தில் கூடின வித்வ மகாஸபையில் சில பண்டிதர்களால் ஸ்ரீ சாரதாம்பாள், ஆசார்யாள் இவர்களைப்பற்றி ஸம்ஸ்கிருதத்திலும் மற்றைய பாஷைகளிலும் வந்தனப் பத்திரிகைகள் படிக்கப்பட்டவுடன், ஸ்ரீமத் சிருங்கேரி ஆசார்யாள் சுமார் ஒரு மணி நேரம், தமிழில், சிஷ்யன் குருவினிடமிருக்க வேண்டிய முறை, நித்யகர்மாநுஷ்டானம், மனதை அடக்க வேண்டிய வழி, கர்மம், ஜன்மாந்தரம், யோகம், அத்வைதம் இந்த விஷயங்களைப் பற்றியும் அந்தந்த மதவிஷயத்தில் நமது காருண்ய கவர்ன்மெண்டார் நமக்குக் கொடுத்திருக்கும் ஸ்வதந்திரத்தைப்பற்றியும் தெளிவாயும் ஜனங்கள் மனதில் படும்படியாயும் பேசினார்கள். இவ்விதம் சிரேயஸ்ஸாக்கிடமான இந்த மகாகும்பாபிஷேக மகோத்ஸவம் நன்றாய் நிறைவேறியது.

# இயற்கை அற்புதங்கள்
## WONDERS IN NATURE

### XIV. காற்றினங்கள்
### KINDS OF WINDS

வாயுவில் உண்டாகும் அசைவுகளுக்கே காற்று என்று பெயர். இவைகள் உண்டாக பொதுவான காரணத்தை முன்னமே கூறியாய் விட்டது. இவைகள் சிற்சில சிறப்பான காரணங்களால் அநேக விதமாகக் காணப்படுகின்றன. ஸமுத்திரக்கரை ஓரமாக உள்ள பட்டணங்களில் கடல்காற்று, நிலக்காற்று; வருஷங்களில் சிற்சில மாதங்களில் ஒழுங்காக அடிப்பனவாகிய பருவக்காற்றுகள்; அத்லாங்டிக் பஸிபிக் மஹா ஸமுத்திரங்களில் அடிக்கும்படியான வர்த்தகக்காற்று, பிரதி வர்த்தகக்காற்று, ஆகிய இவைகளே காற்றின் முக்கியமான மாறுபாடுகள்.

முதலில் கடற்கரைப் பட்டணங்களில் கடற்காற்று, நிலக்காற்று முதலியவைகள் உண்டாகும் விதத்தை ஆராய்வோம். பூமி ஸூர்யனிடம் இருந்து அதிக சீக்கிரமாக உஷ்ணம்எற்று உஷ்ணத்தை வெளிப்படுத்திவிடும். தண்ணீரோ அவ்வாறின்றி மெதுவாக உஷ்ணத்தை வாங்கி மெதுவாகவே வெளிவிடும். காலைப் பத்துமணிக்குக் குளத்தின் கரையிலுள்ள மணலை மிதித்துவிட்டுக் குளத்துள் இறங்குவோமாகில் மணல்உஷ்ணமாயும், தண்ணீர் குளிர்ச்சியாயும் இருக்கும். இதனால் இவைகளின் உஷ்ணம் எற்கும் சக்திவெளியாகிறது. பனிபெய்யாத இரவு 7-அல்லது 8-மணிக்கு இதேமாதிரி செய்வோமாகில் மணல் குளிர்ச்சியாயும் தண்ணீர் ஸுக உஷ்ணமாயும் இருக்கும். இதனால் இவைகளின் உஷ்ணம்வெளிவிடும் சக்தி வெளியாகின்றது. பூமிக்கு ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் நடுப்பகல் 12 மணிக்கு அதிகமாக வந்தபோதிலும் மேல்மேலும் 1-மணி வரையில் அதிக உஷ்ணம் வந்துகொண்டே இருப்பதால், பூமி ஸுமார் பகல் 1-மணிக்குத்தான் தான் வாங்கிய உஷ்ணத்தை வெளிவிடத் தொடங்குகிறது. அப்பொழுது பூமிமேல் உள்ள காற்று உஷ்ணப்படுத்தப்பட்டு மேலேகிளம்புகிறது. உடனே பூமியில் அமுக்கும் சக்தி குறைய ஸமுத்திரத்திலிருந்து குளிர்காற்று கரையை நோக்கி அடிக்கின்றது. பூமியில் மேலே கிளம்பும் காற்று உஷ்ணங்குறைந்த உடன் அடியில்வரும் உஷ்ணக் காற்றால் தள்ளப்பட்டு ஸமுத்திரப் பக்கம்போகிறது. இம்மாதிரி ஸாதாரணமாக ஒவ்வொருநாளும் ஸுமார்பகல் 1-மணிமுதல் இரவு 1-மணி வரையில் கடற்காற்று அடித்துக்கொண்டிருக்கும். இரவு 1 மணி ஸுமாருக்குப் பூமி நன்றாகக் குளிர்ந்துவிடும். அப்பொழுது மெதுவாக ஸூர்யாஸ்தமனம் வரை உஷ்ணம் வாங்கிக்கொண்டிருந்த ஸமுத்திர ஜலம் உஷ்ணத்தை வெளிவிடுகின்றது. அப்பொழுது ஜலத்தில் மேலுள்ள வாயு உஷ்ணமாகி மேலே கிளம்பிவிட அங்கு அமுக்கல் சக்தி குறைந்துவிடும். பூமியிலிருந்து குளிர்காற்று கடல்நோக்கி அடிக்கும். கடலிலிருந்து கிளம்பிய உஷ்ணக்காற்றுமேல்போய்க்குளிர்ந்து விட கீழே வரும் உஷ்ணக்காற்றால் பூமியைநோக்கித் தள்ளப்படும். இம்மாதிரி பூமியிலிருந்து தினம் இரவு 1-மணி முதல் காலை 9-அல்லது 10 மணி வரையில் கடல் நோக்கி அடிக்கும் காற்றிற்கு நிலக்காற்று என்று பெயர். கடற்கரை ஓரங்களில் பூமியில் உஷ்ணம் எறுங்கால் கடலிலிருந்து குளிர்க்காற்று வந்து அதைத் தணித்தும், பூமியில் குளிர்ச்சி அதிகப்பட்டால் காற்று கடலுள் போய் அங்கிருக்கும் காற்று பூமிக்கு வந்து குளிர்ச்சியை ஒருவாறு குறைத்தும் வருவதால், கடற்கரை இடங்களில் எந்தக் காலத்திலும் அதிக உஷ்ணமோ அதிகக்குளிர்ச்சியோ உண்டாகமாட்டாது. நான்கு புறமும் தண்ணீர் சூழ்ந்த நிலமாகிய தீவுகளில் இதே காரணத்தால் சீதோஷ்ண ஸ்திதி ஒழுங்குபடுத்தப்படும். இம்மாதிரி ஒழுங்குபடுத்தப்பட்ட சீதோஷ்ண ஸ்திதிக்கே த்வீப சீதோஷ்ண ஸ்திதி என்று பெயர். இதற்கு மாறாக உள்ளது உள்நாட்டு சீதோஷ்ண ஸ்திதி என்பது. உள்நாடுகளில், அதாவது கடலை விட்டு வெகு தூரத்தில் இருக்கும் நாடுகளில், முற்கூறியபடி சீதோஷ்ணங்களை ஒழுங்குபடுத்துவதான காற்றுக்கள் உண்டாக இடமில்லை. ஆதலால் அங்கு உஷ்ணகாலத்தில் அதிக உஷ்ணமும், குளிர்க்காலத்தில் அதிகக் குளிரும் இருக்கும்.

இனிப்பருவக் காற்றுகளின் விஷயத்தை எடுத்துக் கூறுவோம். நம் பரதகண்டத்தில் இரண்டு விதமான பருவக்காற்றுக்கள் உண்டாகின்றன. அவையாவன, வைகாசிமாஸம் முதல் ஆனிவரையில் அடிக்கும் தென்மேற்குப் பருவக்காற்றும், புரட்டாசி முதல் கார்த்திகைமாதம் வரையில் அடிக்கும் வடகிழக்குப் பருவக்காற்றும் ஆகிய இவைகளே. இதே மாதிரி நேடாலில் முன் ஆறுமாதத்திற்குள் அடிக்கும் தென்கிழக்குக்காற்றும், பின் ஆறுமாதத்திற்

குள் அடிக்கும் வடமேற்றுக்காற்றும் பருவக்காற்றுக்களே. இதில் தென்மேற்குக்காற்று அதிக மழையைக் கொண்டுவந்து மேற்குத்தொடர்ச்சிமலைகளில் கொட்டுகின்றது. வடகிழக்குக் காற்று அதை விட குறைந்ததாகிய மழைகளைக் கொண்டுவந்து துலாமாஸ மழையாக தக்ஷிண தேசத்தில் எங்கும் பெய்யும்படி செய்கின்றது. இப்பருவக்காற்றுக்கள் பொதுவாக மழைகொண்டுவரும் காற்றுக்கள். இவைகளுக்கு முக்கியகாரணம் ஸூர்யனது உத்தராயண தக்ஷிணாயணமே. உத்தராயணகாலத்தில் பூமியின் மத்தியபாகத்திற்கு வடக்கில் ஸூர்ய கிரணம் நேராக 12-மணிக்கு விழும். அந்தப்பாகம் அதிகமாக உஷ்ணப்படுத்தப்பட உஷ்ணவாயு மேலே கிளம்பும். அங்கு அமுக்கும் சக்தி குறையும். அப்பொழுது காற்று தெற்குப் பாகத்திலிருந்து வடக்கே ஓடிவரும். இதுதான் நேடாலில் தென் கிழக்குக் காற்றாகவும், பரதகண்டத்தில் தென்மேற்குக் காற்றாகவும் காணப்படுகிறது. இதுபோல தக்ஷிணாயண காலத்தில் காற்று பூமியின் வடபாகத்திலிருந்து தெற்கே ஓடும். இதுதான் பரதகண்டத்தில் வடகிழக்குக் காற்றாகவும் நேடாலில் வடமேற்குக் காற்றாகவும் காணப்படும். ஆனால் வடக்கே இருந்து தெற்கேயும், தெற்கே இருந்து வடக்கேயும் ஓடும் காற்று நேரே போகாது சாய்ந்துபோவதற்குப் பூமி தினம் ஒருதரம் தன்னைத்தானே மேற்கே இருந்து கிழக்கே சுற்றிவருவதே காரணம்.

இனி வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுகளைப் பற்றி விசாரிக்கப் புகுவோம். பூமியானது தினம் ஒருதரம் தனது துருவரேகை மத்தியமாகக் கொண்டு சுற்றிவருகின்றது. இதனால்தான், இராப்பகல் ஆகாயத்தில் தொங்கும் கோளங்கள் உதயாஸ்தமனமாவது ஆகிய இத்தோற்றங்கள் உண்டாகின்றன. வடக்குத்தெற்கு துருவபாகங்களுக்கு மத்தியில் பூமியைச் சுற்றிப்போகும் ரேகைக்குப் பூமத்யரேகை என்று பெயர். இதற்கு வடக்கிலும் தெற்கிலும்தான் ஸூர்யன் உத்தராயண தக்ஷிணாயணங்களில் போவது. ஸூர்யன் உத்தராயண தக்ஷிணாயணங்களில் ஸஞ்சரிக்குந்தூரம் எவ்வளவோ அவ்வளவே பூமத்ய ரேகையின் இருபுறத்திலும் உஷ்ணம் அதிகமாக இருப்பது. இந்தஅளவுக்குமேற்பட்ட வடக்கு தெற்குபாகங்களில் அதிக உஷ்ணமே இல்லை. வடக்கு தெற்கு துருவபாகங்களில் பனிக்கட்டிகளும் அதிகக் குளிருமே காணப்படும். ஒரு குடையைப் பிரித்து அதன் காம்பைச் சுற்றிவரும்படி அதைச் சுற்றினால் காம்பின் அருகாமையிலுள்ள குடையின் பாகங்கள் எல்லாம் சிறு வட்டத்திலும், குடைக்கம்பியின் நுனி எல்லாம் பெரிய வட்டத்திலும் சுற்றிவரும். காம்பில் உள்ள பாகங்களோ சுற்றவேமாட்டா. எல்லா வட்டங்களும் ஒரே நாழிகையில் பூர்ணமாக்கப்படுவன. ஆகையால் குடைக்கம்பி நுனிகள் அதிக வேகமாகச் சுற்றுகின்றன. காம்பிற்கு அருகாமையிலுள்ள பாகங்களின் வேகம் போகப்போகக் குறைந்துகொண்டு வருகின்றது என்பது தெரியவருகிறது. இதுபோல பூமத்யரேகைக்கு அருகாமையில் உள்ள பிரதேசங்கள் அதிகவேகமாயும் துருவரேகைக்கு அருகாமையில் போகப்போகப் பிரதேசங்கள் குறைந்த வேகமாயும் சுற்றுகின்றன என்பதற்கு என்ன ஸந்தேகம்.

இப்பொழுது பூமத்யரேகைக்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள அருகாமைப் பிரதேசங்கள் ஸூர்யனால் அதிக உஷ்ணப்படுத்தப்பட மேலுள்ள வாயு உஷ்ணம் அடைந்து மேலே கிளம்புகிறது. உடனே இங்கு அமுக்கும் சக்தி குறைந்து விடுகின்றது. இந்தப் பாகத்தை நோக்கி வடக்கு தெற்கு துருவ பாகங்களிலிருந்து குளிர்க்காற்று வீசுகின்றன. இவைகளுக்கே அத்லாந்திக் பஸிபிக் மஹா ஸமுத்திரங்களில் வர்த்தகக்காற்று என்று பெயர். இவைகள் வர்த்தகர்களுக்கு ஸஹாயமாக இருந்திருக்கலாம். இவைகள் நேரே வடகாற்றும், தென்காற்றும் அடிக்காமல் வடகிழக்குக்காற்றாகவும் தென் கிழக்குக் காற்றாகவும் அடிக்கின்றன. மேலேகிளம்பிய உஷ்ணக்காற்று மேல் பாகங்களில் குளிர்ச்சியடைந்து கீழே இறங்க யத்தனிக்கையில் அடியில் கிளம்பிவரும் உஷ்ணக் காற்று அவைகளைப் பூமியில் வடக்கு தெற்கு பாகங்களில் தள்ளிவிட வெகு தூரம் வடக்கிலும் தெற்கிலும் போய் அங்கு இவை முறையே தென் மேற்கு, வடமேற்குக் காற்றுகளாக வீசுகின்றன. இவைகளே பிரதிவர்த்தகக் காற்றுகள்.

வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுக்கள் நேராக அடிக்காது மூலையிலிருந்து அடிப்பானேன்? என்ற சங்கை பிறக்கும். இதற்கு ஸமாதானம் சொன்னால் பருவக்காற்றுகள் மூலையிலிருந்து அடிப்பதற்கு எளிதில் காரணம் கூறிவிடலாம். வடக்கே இருந்து பூமத்யரேகையை நோக்கி வரும் வர்த்தகக் காற்றானது சுற்றும் வேகம் குறைந்த இடத்திலிருந்து அதிகமான வேகம் உடைய இடத்திற்கு வருகின்றது. ஆதலால் அது கொஞ்சம் மேற்கேபின்னடைந்துவிடும். அதாவது அது வடகிழக்கிலிருந்து வருவது போலக் காணப்படும். எவ்வாறு காற்றில்லாது மழை நின்று பெய்யுங்காலத்தில் கூட நாம்

ஓடினுல் நமது முகத்திற்கு எதிரே மழைத்துளிகள் சரிந்து அடிப்பது போலக் காணப்படுகின்றனவோ அவ்வாறே இக்காற்றும் சரிந்து மூலையிலிருந்து வருவதாகக் காணப்படுகின்றது. வடக்கே அடிக்கும் பிரதி பருவக்காற்றே வேகமாகச் சுற்றும் இடங்களில் இருந்து வேகம் குறைந்த இடங்களில் அடிப்பதால் சற்றே அவை முன்னேக்கி கிழக்கே போகின்றன. இதனுல் அவை தென்மேற்கு காற்ருக வீசுகின்றன. (ஓடும் வண்டி திடீரென்று நின்ருல் உள்ளிருப்போர், முன் நோக்கி விழுவது போல), இம்மாதிரியே தான் பூமத்யரேகையின் தென் பாகத்திய வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுகள் சாய்ந்து அடிக்கின்றன.

இனிப் பருவக்காற்றுகள் விஷயத்தைக்கூறி இவ்வியாஸத்தை முடிப்போம். ஸமுத்திரத்தில் வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுக்களே நிலத்தில் பருவக் காற்றுக்களாக மாறுகின்றன. உத்தராயணத்தில் ஸூர்யன் பூமத்யரேகையின் வடபாகங்களுக்கு நேரே மேலே வருங்கால் அங்கு வாயுவில் அமுக்கும் சக்தி குறைய துருவபாகங்களிலிருந்து குளிர்காற்று வருகின்றது. இதில் பூமத்யரேகையின் தெற்கே இருந்து வரும் தென்கிழக்குக் காற்று நேடாலில் தென்கிழக்குப் பருவக்காற்ருக இருக்கின்றது. இது அமுக்கும் சக்தி குறைந்திருக்கும் இடம் வந்து சேருவதற்கு முன் பூமத்யரேகையைத் தாண்டும்படி நேரிட அதிக வேகத்துடன் சுற்றும் இடத்திலிருந்து வேகக் குறைவாய்ச் சுற்றும் இடத்திற்குப் போகவேண்டிவருகிறது. உடனே இதே வர்த்தகக்காற்று தென்மேற்கு பருவக்காற்ருகப் பரதகண்டத்தில் அந்தகாலத்தில் வீசுகின்றது. இந்தப் பருவக்காற்று பெரும்பாலும் ஸமுத்திரத்தின் மேலாகவே வருவதால் ஏராளமான மழையைக்கொண்டு வருகிறது. இதேமாதிரி தக்ஷிணயண காலத்தில் வடகிழக்கு வர்த்தகக்காற்று பரதகண்டத்தில் வடகிழக்கு பருவக்காற்ருகவும், நேடாலில் வடமேற்குப் பருவக்காற்ருகவும் வீசுகின்றது.

மலைகளின் அமைப்பால் காற்றுக்களின் மார்க்கம் மாறுபடும். மலைதொடர்களில் கணவாய்கள் ஏற்பட்டால் அவைகளின் வழியாகக் காற்றுப் புகுந்து புறப்பட்டால், அவைகள் நோக்கும் திக்கை நோக்கியே காற்றும் அடிக்கும். எவ்வாறு சுவற்றில் போய் அடிபடும் பந்தானது போகும் மார்க்கம் மாறி வேறு மார்க்கமாக எழும்பி வருகின்றதோ அதுபோல வேகமாக அடிக்கும் காற்றும் மலைசசாரல்களால் தடுக்கப்பட்டுத் தனது மார்க்கத்தில் மாறுதல் அடைந்து வெவ்வேறு திக்கிலிருந்து அடிப்பது போலத் தோற்றலாம்.

ஆகவே ஸூர்ய உஷ்ணத்தால் பூமி உஷ்ணமாகி வாயுவில் அசைவு ஏற்படுவதாலும், அது பூமி சுற்றுவதாலும், நிலமும் நீரும் உஷ்ணத்தை ஏற்று வெளியிடக்கூடிய சக்தி பேதத்தாலும், மலை முதலியவைகளின் அமைப்பாலும் உலகில் உள்ள காற்றினங்கள் உண்டாகின்றன என்பது தெரியவருகிறது.

# பர்மா தேக்குமரம்

## THE TEAK OF BURMA

மிருகங்களுள் சிங்கம் எப்படியோ, அப்படியே மரங்களுள் தேக்குமரமும். இம்மரம் விசேஷமாய் பர்மாதேசத்து காடுகளிற் காணலாம். இம்மரத்தின் குணங்களை முடிவில் விவரிக்கலாம். பர்மா தேசத்தில் இம்மரம் மாத்திரமல்ல, அனேகவித மரங்களைக் காண்கிறேம். ஆனுல் பர்மா மரமென்ருல் எல்லாரும் தேக்குமரமென்றே எண்ணுவார்கள். ஏனென்ருல் இம்மரம் நானுவித தேசங்களுக்கு ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இம்மரங்களை நன்ருய் முதிர்ந்த பிறகு கவர்ன்மெண்டார் வெட்டுவதற்கு உத்தரவு கொடுக்கிருர்கள். வெட்டினபிறகு மேலுள்ள பட்டையையும் பச்சை நாரையும் கோடரியால் வெட்டியெடுக்கிருர்கள். பிறகு மரத்தின் இலைகள் உதிர்ந்து மரம் உலர்ந்த மரமாகிறது. இம்மாதிரி இரண்டு மூன்று மாதங்கள் உலரப்பட்டு, பிறகு தண்ணீரில் மிதக்கவிடப்படுகிறது. இக்காலங்களில் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பார்கள். ஏனெனில் ஒருவேளை சூரிய வெப்பத்தினுல் மரமகெட்டுப்போகக்கூடும். அல்லது தரையோடு சேர்ந்து மரமாக வளரவுங்கூடும். அம்மாதிரி வளர்ந்தால் வெட்டின மரமென்று கருதாமல் விட்டுவிடவுங்கூடும். நன்ருய் முதிர்ந்தமரங்களை எப்பொழுதும் அடிப்பக்கத்தில் வெட்டித்தள்ளுவார்கள். முண்டும் முடிச்சாயிருக்கும் மரங்களை மேற் பக்கத்தில் இம்முடிச்சு இல்லாத பாகமாய்ப் பார்த்து வெட்டுவார்கள்.

இம்மாதிரி வெட்டினபிறகு, மரங்களை ஸரியான துண்டுகளாக வெட்டுவார்கள். இது எதற்காகவெனில் ஜனங்களுக்கு நதிக்கரையோரங்களுக்கு இழுத்துக்கொண்டுபோவதற்குச் சுலபமாயிருப்பதற்காகத்தான். இழுத்துக்கொண்டு போதல் மிகவும் கடினமான காரியம். ஏனெனில் குறைந்தபட்சம் மரத்தின் தூரிலிருந்து சமீபத்திலுள்ள நதிக்கரைக்கு ஒன்று அல்லது இரண்டு மைல் தூரமிருக்கும். மேலும் வழி கரடு முரடாய் மேடுபள்ளமாய் வலித்துக்கொண்டுபோகும் ஆட்களுக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும். இம்மாதிரி வேலை மானிடர்களால் செய்யக்கூடியதல்ல. இதையறிந்து தான் ஸகல ஜீவராசிகளையும் புற் பூண்டு

களையும் எப்பொழுதும் ஒரே மாதிரியாய்ப் பாதுகாத்துவருகின்ற லோகநாதர் இக்காடுகளில் ஏராளமாய் யானைகளைப் படைத்திருக்கிறார். இந்த ஸாதுவான பிராணிகள்தான் அக்கடினமான வேலையைச் செய்துகொண்டு வருகின்றன. திருவாங்கூர் இராஜ்யத்துக் காடுகளிலும், கொச்சி தேசத்துக் காடுகளிலும், இப்பிராணிகள்தான் கடினமான வேலையைச் செய்கின்றன. இம்மாதிரி இழுத்துக் கொண்டு போவதற்கு ஸாதனமாய் காலமுமுண்டு. அதாவது மழைகாலந்தான். ஏனென்றால் நதிகளும் ஓடைகளும் தண்ணீர் நிறைந்துள்ளதாயிருக்கும். தரையோ ஈரமாயும் சருக்குள்ளதாயுமிருக்கும். சீதோஷ்ண ஸ்திதியோ அதிக உஷ்ணமில்லாமல் இவ்வாயில்லாப் பிராணிகள் உத்ஸாகத்துடன் வேலை செய்யத் தகுந்த குளிர்ச்சியாயிருக்கும். இம்மாதிரி காலங்களில் மரங்களை யிழுத்துக்கொண்டு போவதால் அவ்வழி முழுவதும் ஒரு மாதிரி பள்ளமாய் தண்ணீர் நிறைந்து மங்ரகளை யிழுப்பதற்கு அதிக சுலபமாகிறது. இப்பிராணிகள் மரங்களையிழுப்பதற்காக ஒரு நுனியில் ஒரு துவாரமிட்டுச் சங்கிலி கோர்த்து அவைகளின் வாயில் கொடுத்திருக்கும். மற்றொரு நுனியில் வேறொரு மரத்தைச் சேர்த்திருக்கும்.

வலித்துக்கொண்டு போகும் வழியில் இருக்கின்ற ஓடைகளோ நதிகளோ எல்லாவற்றையும் உபயோகிக்கிறார்கள். ஏனெனில், தண்ணீரில் பளுவான வஸ்துக்களை எளிதில் கொண்டுபோகலாம். இம்மாதிரிப் பிராணிகளைப் பதினெட்டு வயதில் இக்கடினமான வேலையில் அமர்த்தக்கூடாது. இவ்வேலைக்குத் தகுந்த வயது முப்பதுமுதல் அறுபது வரை. அந்த வயதிற்றான் அவைகளுக்குப் பலமும் உத்ஸாகமும் ஏற்படுகிறது.

இம்மரத்துண்டுகளைப் பெரிய நதிகளில் பிரவாகம் வந்தாலொழிய விடுவதில்லை. இவைகளை ஒவ்வொன்றாய் ஆழமான பாகத்திற்குத் தள்ளி அப்புறம் தினுசு தினுசாய்க் கோர்த்து தண்ணீரில் அனுப்புவார்கள். ஐராவதியிலும் ஸிட்டான்ங்கிலும் மரங்களை எந்த இடத்தில் வேணுமென்றாலும் அனுப்பலாம், ஆனால் ஸால்வின் நதியில் முகத்துவாரத்திலிருந்து அறுபது மைல் தூரத்திற்குள்தான் அனுப்பலாம். ஏனெனில் இந்நதி முழுவதும் மலைகளின் ஊடே செல்லுகின்றது. அப்படிச் செல்வதால் தேக்குமரங்கள் நதியின் வேகத்தால் குச்சி குச்சியாய்ப் போய் உபயோகமற்றுப் போகின்றன. இம்மரங்களை ஒன்று சேர்த்துக் கட்டி ஒரு படகுபோலச் செய்து அதன்மீது நாலு ஐந்து ஆள்கள் உட்கார்ந்து செல்லுவார்கள். எந்தெந்த இடங்களில் நிறுத்தவேண்டுமோ அந்தந்த இடங்களில் நிறுத்தி கரையோரஞ்சேர்த்ததும் முன்போலவே யானைகள் வந்து கரையின் மீது இழுத்துச் செல்லும். அந்தந்த இடங்களில் சேர்த்து வைத்து அப்புறம் கப்பலில் ஏற்றி வெளி தேசங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இதன் குணத்தைப்பற்றிக் கூறுவோம். அதிக நீளமாயும் வீரம் பாய்ந்ததாயும் பெரிய உத்தரங்களாய்க் கிடைக்கக்கூடியதுமான மரம் இது ஒன்றே. மிகவும் கனமுள்ளதுமல்ல. ஏனெனில் கோடரி அரிவாள் இழைப்புளி இவைகளைக் கொண்டு சேதமில்லாமல் இம்மரங்களில் வேலை செய்யலாம். மேலும் இம்மரங்களினூடே கட்டைகளுக்குச் சேதமில்லாமல், ஆணிகளைச் செலுத்தலாம். சில மரங்களோ ஆணியை அடித்தால் கீறல் ஏற்படும். எல்லாவற்றிலும் சிலாக்கியமான குணம் எது என்றாலோ இம்மரங்களோடு சேர்த்துள்ள இரும்பு ஆணிகளோ அல்லது இரும்பு உத்தரங்களோ இவைகள் ஒநபொழுதும் துருப்பிடிப்பதேயில்லை. இத்தகைய குணம் வேறே மரங்களுக்கு இல்லாமலிருப்பதினாற்றான் எல்லா தேசத்து ஜனங்களும் கட்டடங்களுக்கு இம்மரத்தையே உபயோகிக்கிறார்கள். இதைத் தவிர இதன் நிறமோ கண்ணுக்குத் திருப்தியாயும் வார்னீஷ் கொடுத்தாற்போல கருஞ் சிவப்பு. இதன் வாஸனையோ மரத்தை யரிக்கின்ற புழுப் பூச்சிகளை யோட்டக் கூடியாதா யிருக்கிறது. இம்மரத்திலிருக்கும் ஒருவித எண்ணைப் பசையாற்றான் இம்மரம் கெட்டுப்போகாமல் வெகுகாலம் நீடித்திருக்கின்றது. இத்தகய மரம் நம் தேசத்திலிருக்கும் போது ஜனங்கள் ஏராளமாய் இரும்புத்தூண்களையும் இரும்பு உத்தரங்களையும் வெளிதேசத்திலிருந்து வரவழைத்து நமது பணத்தை வீணாகச் செலவு செய்கிறார்கள். நமக்கு வேணுமென்ற ஸாமான்கள் நம்தேசத்திலிருக்கும் பொழுது ஏன் வெளியிற் செல்லவேண்டும். இம்மரத்தை எம்மாதிரியானாலும் உபயோகிக்கலாம்.

வி. ஜி சுப்பய்யா ஐயர் பி.ஏ., எல்.டி.

# நமது பாடசாலைகளில் மதக்கல்வி பயிற்றுவிக்க ஒரு வேண்டுகோள்

## A PLEA FOR RELIGIOUS EDUCATION IN OUR SCHOOLS

பர்மாவில் கவர்ன்மெண்டு கலாசாலைகளிலும் முனிசிபல் கலாசாலைகளிலும் மாணாக்கர்களுக்கு மத விஷயங்களைக் கற்பிக்க இங்கிலாந்திலிருக்கும் இந்திய செக்ரெடேரி யிடமிருந்து 1909-ம் வருஷம் அக்டோபர்மீ உத்தரவு வந்தது. மாணவர்களின் பெற்றோர்களெல்லாம் சம்மதித்திடின், இம்மத வித்தையைக் கலாசாலை நேரத்தில் கற்பிக்கலாமென்றும், இல்லாவிடில் நாளின் கல்விநேரம் முடிந்தபின் கலாசாலையிலேயே மதாசாரங்களையும் மதக்கொள்கைகளையும் பற்றி உபாத்திமார் உபன்னியாசஞ் செய்ய வேண்டுமென்றும் கட்டளை பிறந்திருக்கிறது. இந்த ஆஜ்ஞையை யறிந்ததும், மகிழ்ந்து கொண்டாடாத பர்மர்களில்லை. இந்த உதாரச் செய்கைக்காகப் பர்மா லெப்டினண்டு கவர்னரையும் லார்டு மார்லியையும் வாழ்த்தி பர்மாவில் பல விடங்களிலிருந்தும் தந்திகள் பறந்துகொண்டிருக்கின்றன.

நமது ஆரியமதத்தில் ஒரு வாலிபனுக்கு எழாமாண்டில் உபநயனம் நடந்ததும் அவன் பூர்வத்தில் எப்படி குருகுலவாசஞ்செய்து தன் ஆசாரியனிடத்தில் அட்சராப்பியாசந் தொடங்கி சாஸ்திரங்களில் தேர்ச்சி யடையவேண்டுவ தவசியமாயிருந்ததோ, அப்படியே பர்மாவிலும் சிறு பையன்கள் 8-வயது ஆவதற்குள்ளேயே போஞ்சி யென்னும் புத்தயதிகளின் மடஞ்சென்று அங்கேயே தங்கியிருந்து அவர்களிடம் வித்தையைக்கற்று தர்ம சாஸ்திரங்களிலும் பௌத்தமதக் கிரந்தங்களிலும் தேர்ச்சிபெற வேண்டியதவசியமாயிருந்தது. இப்படிப் பொஞ்சிமடங்களில் பெற்ற சிட்சைதான் பர்மர்களிடம் பெரியோரை வழிபடுதல், விருந்தோம்பல், குணந்தழுவல், ஒப்புரவறிதல் முதலிய பல மேலான குணங்களைப் பொருந்தியிருக்கச் செய்தது. ஆங்கிலேய கலாசாலையிற் கற்கும் பிள்ளைகள் பொஞ்சிமடப் பிள்ளைகளைப்போல அடக்கவொடுக்கமும், பயபக்தியும், சீலசிஷ்டமும், கிருதஜ்ஞை விசுவாசங்களும் பெற்றிருப்பதில்லையென்று வெகுநாளாக முறைபாடுகள் இருந்துவந்தன. இவைப் பர்மப்பிள்ளைகளின் பெற்றோர்களால் மாத்திரமன்று. அநேக ஐரோப்பிய பெரிய மனிதர்களே பொஞ்சி மடங்களில் கற்றுவரும் பிள்ளைகளின் குணங்களையும் இங்கிலீஷ் கலாசாலைகளில் படித்துவரும் மாணவர்களின் குணங்களையும் ஒப்பிட்டு மேற்சொன்ன தாரதம்மியத்தைக் கண்டுபிடித்து முறையிட்டிருக்கிறார்கள். பர்மா சர்வகலாசாலை வருஷாந்திர ரிபோர்ட்டுகளைப் படித்துப்பார்த்தால் மேற்சொன்ன முறைபாடுகள் உண்மையேயென்று நன்கு விளங்கும்.

ஆங்கிலேயர் 1852-வது வருஷத்தில் பேகு மாகாணத்தைக் கைப்பற்றியது முதல் கீழ் பர்மாவில் மதாசாரமும், ஒழுக்கமும், சீலமும், துறவோரை வழிபடுதலும் குறைந்துவருகின்றனவென்று ஒரு சாரார் சொல்லிக்கொண்டார்கள். அதிலும் கவர்ன்மெண்டாராலும் கிறிஸ்தவப் பாதிரிகளாலும் ஆங்கிலேய பாஷை கற்பிக்கப் பலவிடங்களிலும் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டதும் இப்பாடசாலைகளில் கற்றுவந்த மாணவர்களின் குணங்களும் ஒழுக்கங்களும் விரும்பக் கூடாமையாயிருந்தமை விசிதமாயிற்று.

பிரிட்டிஷ் பர்மா சிப் கமிஷனராயிருந்த ஸர் ஆர்தர் பேர் என்பவர் பொஞ்சிமடக் கல்வியின் உயர்தரவியல்பை யாராய்ந்தறிந்து பர்ம வாலிபர்களுக்கு அவ்விதக் கல்வியே பயன் படைக்கத்தக்கது, ஆனால் அக்கல்வியுடன் பூகோளசாஸ்திரம், கணிதசாஸ்திரம் இவைகளையும் கற்பித்தால் சிறுவர்கள் சுதேசவித்தையுடன் ஐரோப்பியவிதச் சிட்சையும் பெறுவார்களென்றெண்ணி 1866-வது வருஷம் இந்தியாகவர்ன்மெண்டுக்குப் பொஞ்சிமட சுதேசக் கல்விப் பயிற்சியை யபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் எழுதித் தெரிவித்தார். இந்தியா கவர்ன்மெண்டாரும் இவ்வேண்டுகோளுக்கிணங்கினார்கள். உடனே பர்மாவுக்கு ஒரு டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் என்னும் சர்வ கலாசாலை யதிபதியும், அவருக்குதவி புரிய சில இன்ஸ்பெக்டர்களும் சஞ்சார உபாத்தியாயர்களும் நியமிக்கப்பட்டார்கள். ஐரோப்பிய விதிப்படி இயற்றப்பட்ட சில பூகோள நூல்களையும் கணித நூல்களையும் பர்மா பாஷையில் அச்சிட்டுப் பொஞ்சி மடங்களுக்கு இனமாகப் பங்கிட்டார்கள். இதன நலத்தை அநேக பொஞ்சிமார்கள் அறிந்துகொண்டு ராஜாங்கத்தாரின் அபிப்பிரா

யத்தை நிறைவேற்றத் தங்களால் கூடிய உதவியைச் செய்தார்கள்.

ஆனால் நாளடைவில் பொஞ்சிமடத்தின் செல்வாக்குப்போய் பிள்ளைகளெல்லாம் கவர்ன்மெண்டு, முனிசிபல், பாதிரி கலாசாலைகளில் வித்தை கற்கத் தொடங்கினார்கள். மதக்கல்வி க்ஷீணிக்கவே பர்மப் பிள்ளைகளின் குணங்களும் நடவடிக்கைகளும் பழுது படத்தொடங்கின. ஆங்கிலேயக் கல்வி பரவாத மேல்பர்மா பிள்ளைகளைவிட, ஆங்கிலக் கலாசாலைகள் நிறைந்த கீழ் பர்மாவிலுள்ள பிள்ளைகள் ஜாதி மதாசாரங்களைக் கைவிட்டவர்கள் என்று இன்றும் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இதற்குக்காரணம் கீழ்பர்மாவில் கவர்ன்மெண்டு, முனிஸிபல் கலாசாலைகளில் மதவிஷயங்களைப்பற்றிக் கற்பிக்காமையும் பாதிரிமார் கல்லூரிகளில் அன்னிய மதத்தைப்பற்றிக் கற்பிப்பதுமே. மேல் பர்மாவிலோ இன்னும் பொஞ்சிகளுக்குச் செல்வாக்கு அதிகமாயிருக்கிறது. அவர்களிடம் ஜனங்களுக்குப் பயம் பக்தி, மதிப்பு, விசுவாசம் இவைகள் அதிகமாயுண்டு. ஆதலால் ஆசாரங்களும் கொள்கைகளும் கீழ்பர்மாவைவிட மேல்பர்மாவில் அதிகமாக அனுசரிக்கப் பட்டுவருகின்றன. ஆனால் நாளடைவில் மேல்பர்மாப்பிள்ளைகளும் கீழ்பர்மாவிலுள்ள பிள்ளைகளைப் போல விராத்தியர்களாகி விடுவார்களென்ற ஒரு பயமிருக்கிறது.

வெகுநாளாக விருந்து வந்த ஜனங்களுடையவும் ஐரோப்பியர்களுடையவும் முறைப்பாடுகளை நீக்குவதற்காகவே இந்திய செக்ரெடரியிடமிருந்து முற்சொன்ன உத்திரவு வந்திருக்கிறது.

இனி ஒவ்வொரு கவர்ன்மெண்டு முனிசிபல் ஸ்கூலில் மதவிஷயங்களையும் கற்பிப்பதற்காகப் பொஞ்சிகளாவது அல்லது மிக்க மதிப்புடைய பெரியோர்களாவது நியமிக்கப்படுவார்கள் என்று கருதப்படுகிறது. இவ்வுத்தரவினால் பாதிரிமார்களின் கலாசாலைகளுக்கு மிக்க நஷ்டம் நேரிடுமென்றும் அவர்களுடைய கலாசாலைக்கு பர்மர்கள் தங்கள் பிள்ளைகளை இனி அனுப்ப மாட்டார்களென்றும் ஒருவதந்தி இருக்கிறது.

நமது இந்திய வாலிபர்களும் பள்ளிக்கூடங்களில் ஆசாரம் ஒழுக்கங்களைப்பற்றிக் கற்பிக்கப்படாமையால் சுயமதப் பற்றில்லாமல் நாஸ்திகர்களாகவாவது நம்பிக்கையற்றவர்களாகவாவது வாழ்நாளை வீணாக்குகிறார்கள் என்பது பொய்யல்ல. கிறிஸ்தவ கலாசாலைகளில் அன்னிய மதத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கற்பிக்கப்படுகிறபடியால், அம்மாணவர்கள் சுயமதத்தின் அருமை பெருமைகளை யறியத் திறனற்றவர்களாகிறார்கள். கவர்ன்மெண்டு முனிசிபல் கலாசாலைகளிலோ ஒரு மதத்தைப்பற்றியும் அறிவூட்டுகிறதில்லை. ஆதலால் அவற்றில் கல்வி கற்கும் மாணவர்களும் எம்மதத்தின்மேலும் பற்றில்லாமல் உலகவாழ்க்கையெல்லாம் பொருள் இன்பம் இவற்றை யீட்டுதற்கேயன்றி அறம், வீடு இவற்றைப்பற்றிச் சிந்தனை செய்வதற்கல்லவென்றிருக்கிறார்கள். இந்தியர்களாலேற்படுத்தப்பட்டுச்சம்ரட்சிக்கப்பட்டு வரும் சுதேச கலாசாலைகளிற்கூட பெரும்பாலும் இம்மத வித்தை ஊட்டப்படுகிறதில்லை. சென்ற சிலவருஷங்களாக ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மாளின் முயற்சியால் அநேக இந்து ஸ்கூல்களில் ஸநாதன தர்மங்களைப்பற்றிக் கற்பித்து வருகிறார்கள். இதுவே சரியான நெறி. சுதேசிகளால் கையாளப்பட்டு வரும் பாடசாலைகளிலேயே அவர்கள் தங்கள் சொந்த மதத்தைக் கற்பியாதிருக்கும்போது கவர்ன்மெண்டு பாடசாலைகளில் சமயவறிவூட்டாமலிருப்பதற்காக நாம் கவர்ன்மெண்டாரை நோவதிலென்ன பயன்? சுதேச கலாசாலைகள் கவர்ன்மெண்டு கல்லூரிகளை யொட்டி யமைக்கப்பட்டிருக்கிறபடியால் அவற்றில் மதக்கல்வி யூட்டப்படவில்லை யென்று சிலர் வாதிக்கலாம். ஆனால் ஒரு சிஷ்யன் தன் குருவைக்காட்டிலும் பாண்டித்தியம் அதிகமாகப் பெறக்கூடாதென்று விதியிருக்கிறதோ? நமது கலாசாலைகள் கவர்ன்மெண்டாரின் பாடசாலைகளை யனுசரித்து ஏற்படுத்தப்படவேண்டியவே. அப்படிச் செய்யும்போது கவர்ன்மெண்டு பாடசாலையின் குறையின்னதென்று தெரிந்து அக்குறை நமது பாடசாலைகளிலும் காணப்படாதபடி பூர்த்தி செய்வதன்றோ பேரறிவு.

பர்மாவைப் போன்ற தேசங்களில் ஜனங்களில் ஏதோ சிலபேர்தவிர ஏனையோரெல்லாம் பௌத்த மதம் ஒன்றையே அனுசரிப்பதால் அங்கு மதாசாரங்களைக் கற்பிப்பது எளிது. ஆனால் இந்தியாவில் நூற்றுக்கணக்கான மதங்களும் ஒவ்வொரு மதத்திலும் உட்பிரிவுகளனேகமுமிருத்தலால் அந்நாட்டுப் பிள்ளைகளுக்கு எந்த மதத்தைப்பற்றி உபதேசிப்பது என்று ஒருகேள்வி பிறக்கலாம். இப்பொழுது ஸெண்ட்ரல் ஹிந்துகாலேஜிலும் அதையனுசரித்த அநேக பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஸநாதன தர்மவிஷயங்கள் எவராலும் ஆட்சேபிக்கப்படவில்லை. அவற்றை ஒவ்வொரு கலாசாலையிலும் பயிற்றுவதற்கு யாவரும் அங்கீகரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்து மாணவர்கள் எவ்வகுப்பராயினும் அவர்களுக்கெல்லாம் இவ்விஷயத்தையும் மகமதியர்களுக்கு அவர்களுடைய மதங்களில் சிரேஷ்டமான நூல்களையும் அப்படியே கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய மதத்தைப்பற்றியும் கற்பித்து வந்தால் இந்தியர்களுடைய சீரும் தூய்மையும் புராணகாலங்களில் எப்படி உயர்ந்திருந்ததோ அப்படியே திரும்பவும் உயரும் என்பதும் பொய்யோ?

நமது உதார குணமும், பேரறிவுமுடைய இந்திய செக்ரடெரி பர்மாவுக்குச் செய்ததுபோலவே இந்தியாவிலும் கவர்ன்மெண்டு முனிசிபல் கலாசாலைகளில் மதவறிவூட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தால் இந்தியர்களனைவரும் அவருக்கு மிக்கக் கடமைப்பட்டிருப்பார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

## நீலி வசீகரம்

### TAMING OF THE SHREW

நா.—கேட்டுக் கொள்ளுகிறீரா! இப்படிக் கெஞ்சிக் கேட்டுக் காலில் வீழ்ந்தால், வராமலிருப்பாளா? இதற்காகவாவது வருவாள்.

பிர.—உமது மனைவி, காலில் வீழ்ந்து கும்பிடு? வருந்தி யழைத்தாலும் வரமாட்டாளே.

(கேசவன் திரும்பிவருதல்.)

எங்கே என் மனைவி?

கே.—நீர் ஏதோ வம்புக்குக் கூப்பிடுகிறீராம்; அவள் வரமாட்டாளாம்; வேண்டுமானால், உம்மைத்தான் அவளிருக்குமிடத்துக்கு வரச்சொல்லுகிறாள்.

நா.—பேஷ்! பேஷ்! நல்லபதில்! வரமாட்டாளா அதோடுவிடாமல் அவரையும் அங்கேவரச்சொல்லுகிறாளா? நிரம்பவும் நன்றாகவிருக்கிறது!— பொன்னு! உன் எஜமானியிடம் போய், அவளை உடனே வரும்படி நான் கட்டளையிடுவதாகச் சொல். (பொன்னன் போதல்)

பிர.—அவள் சொல்லக்கூடிய பதில் எனக்கு இன்னதென்று தெரியும்.

நா.—என்ன?

பிர.—வரமாட்டாள்.

நா.—வராதபோனால், இதோடு சனி தொலைந்தது.

ரத.—இதென்ன விந்தை! இதோ வருகிறாளே கௌதமி!

(கௌதமி வருதல்.)

கௌ.—எதற்காகக் கூப்பிட்டனுப்பினீர்கள், நாதா? என்னசெய்யவேண்டும்?

நா.—உனது தங்கையும், பிரதாபருத்திரரின் மனைவியும் எங்கே யிருக்கின்றனர்?

கௌ.—சமையல் அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.

நா.—அவர்களை அழைத்துக்கொண்டுவா; வராமல் போனால் இழுத்துக்கொண்டு வா; சீக்கிரம்போ. (கௌதமி போதல்).

விஜ.—ஏது! பெரிய அதிசயமாக விருக்கிறதே!

பிர.—அப்படித்தானிருக்கிறது; என்ன முடிவு உண்டாகுமோ தெரியவில்லை.

நா.—என்ன முடிவுஉண்டாகுமோவா? என்! மனவொற்றுமை, பணிவு, சந்தோஷம், இன்பம் இவைகள்தாம்!

ரத.—நாராயணதேவரே! நீர் சௌக்கியமாக வாழும்! இந்தப் பணயத்தை நீர் வென்றுவிட்டீர்; இதனோடு நான் இன்னும் ஒரு இருபதினாயிரம் பவுன் கொடுக்கிறேன்; என் மகள் குணவதியாக முற்றிலும் மாறிவிட்டாள்; ஆகவே இன்னொரு பெண்ணுக்கு இந்த இருபதினாயிரம் பவுனையும் சீதனமாகக் கொடுக்கிறேன்.

நா.—அவளுடைய புதுக்குணங்களாகிய, பணிவு, அடக்கம், நற்புத்தி முதலியவற்றை இன்னும் நன்றாக நிரூபிக்கிறேன்; அதோ பாருங்கள். அந்த இரண்டு பெண்களையும் தனது சாமார்த்தியத்தால் அழைத்துக்கொண்டு வருகிறாள்.

(வநிதேசுவரியையும் சுசீலையையும் அழைத்துக் கொண்டு கௌதமி திரும்பிவருதல்.)

கௌ.—நாதா! இதோ அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

நா.—கௌதமி! உன் தலையில் வைத்துச் சடை போட்டுக்கொண்டிருக்கிற சவரி நன்றாகவிருக்கவில்லை; அதை யெடுத்தெறிந்துவிடு. (கௌதமி தன் சடைச் சவரியை எடுத்தெறிகிறாள்.)

சு.—நன்றாகவிருக்கிறது! இப்படித்தான் இல்லாததையெல்லாம் செய்யச்சொல்வார்களோ? நான் அப்படியெல்லாம் செய்யமாட்டேன்.

வநி.—இதெல்லாம் ஒரு காரியமா? பைத்தியக்காரன் செய்கிற வேலையல்லவா?

விஜ.—வநிதை! நிறுத்து; நீ சாமார்த்தியசாலியென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்; உன்னால் எனக்கு இப்போது நூறு பவுன் நஷ்டம்.

வநி.—அப்படி நஷ்டம் வரும்படி நான்தான் செய்யச் சொன்னேனோ?

நா.—கௌதமி! ஸ்திரீகள் தங்கள் தங்கள் நாயகர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி, இந்த அகம்பாவம் படைத்த இருவர்களுக்கும் சொல்லு.

சு.—நல்ல பரிகாசம் பண்ணுகிறாய்: எங்களுக்கு ஒன்றும் சொல்லவேண்டாம்.

நா.—கௌதமி! முதலில் இவளுக்குச் சொல்லு.

சு.—எனக்கு ஒன்றும் வேண்டாம்; அவள் புராணத்தை அவளே வைத்துக்கொண்டிருக்கட்டும்.

நா.—கௌதமி! முதலில் இவளுக்குத் தான் சொல்லவேண்டும், நீ—

கௌ.—சீ! சீ! உனது பதியையும், நாதனையும், ஆள்பவனையும் உள்ளவர்மீது கோபக்குறியோடு பார்ப்பதைத் தவிர்; அதனால் உனது அழகு குன்றும்;

உனது நற்பெயர் அழிந்துவிடும். ஸ்திரீக்கு அவள் புருஷனே தெய்வம் "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்பதை நீ கேட்டதில்லையோ? கோபமுள்ள ஸ்திரீயொருத்தி கலங்கிய நீரையுடைய குளத்துக்குச் சமானம்; அக்குளத்தில் ஒருவரும் தண்ணீர் குடிக்கமாட்டார்; அதுபோல உன்னிடம் ஒருவரும் அணுகமாட்டார்; உனது புருஷனே உனக்கு எஜமானன்; உன் உயிரும் அவனே; உன்னைக் காப்பாற்றுபவன் அவன் தான். உனக்குப் போஷணை செய்பவனும் அவன்தான்; பகலென்றும் இரவென்றும் பாராமல் வெளியில் அலைந்து கடல்மீதும் கரைமீதும் போய்த்தேடி சிரமப்பட்டு உழைக்கிறான்; நீ சௌக்கியமாய் வீட்டிலிருக்கிறாய். இவ்வித கஷ்டஜீவனத்துக்குப் பதிலாய் அவன் உன்னிடம் எதிர்பார்ப்பது என்னவெனில் முகமலர்ச்சியும், பணிவும், நல்லுரையுமேயாம்; அவன் படும் கஷ்டத்தையும் செய்யவேண்டியவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தால் நீ செய்யவேண்டியது வெகு அற்பமானதென்று தெரியவரும். அரசனிடம் குடிகள் அடங்கி நடப்பதைப்போல, புருஷனிடம் ஸ்திரீ அடங்கிநடக்கவேண்டும். அவ்வாறிராமல், எப்போதும் முகத்தைச் சுளித்துக்கொண்டும் வெடுவெடுவென்றும், வாயாடியாயும் இருந்தால், அந்த ஸ்திரீ இராஜதுரோகிக்கெல்லாம் கேடுகெட்டவள் என்னலாம். அன்புடன் பணிந்து, பணிகேட்க வேண்டியிருக்கையில், அவ்வாறிராமல், நாயகர்களுடன் சண்டையிடும் ஸ்திரீகள், கேவலம் கலகக்காரர்கள் போன்றவரேயாவார்கள். நமது சரீரம் கடினவேலைக்குத் தகுந்ததாக இராமல் மிருதுவாகவிருப்பது எதற்காக? தேகத்தைப்போலவே மனமும் இருக்கவேண்டுமென்று காட்டுவதற்காகத்தான்; என் மனமும் வெகு கடினமாகத்தானிருந்தது! நான் ஒருவருக்கும் கீழ்ப்படிந்ததில்லை. எப்போதும் சண்டையிடுவதிலேயே திருப்தியுள்ளவளாகவிருந்தேன். ஆனால் அநுபவசித்தமாகச் சொல்லுகிறேன்! நமது சக்திகளெல்லாம் வெகு கேவலமானவை; ஒப்புவமை சொல்வதற்கேற்காது; ஆதலால், ஒன்றும் பதில்சொல்லாமல், இன்றே உங்கள் கணவர்களது கால்களில் விழுங்கள். அம்மாதிரி நீங்கள் செய்து காட்டுவதற்காக, நான் இதோ எனது நாதர் திருவடிகளில் வணங்குகிறேன்.

(கௌதமி வணங்கி யெழல்)

நா.—கௌதமி! பேஷ்!—ஓடிவந்து, என்னை ஒரு தரம் முத்தமிட்டுக்கொள். துரோபதை சத்தியபாமைக்குச்செய்த உபதேசம்கூடக் கெட்டது!

விஜ.—நான் இவ்வாறு முடியுமென்று எதிர்பார்க்கவேயில்லை. கௌதமி சொன்னது முற்றிலும் உண்மைதான்.

நா.—கோது, வா; நாம் போவோம்.—நாங்கள் மூவரும் கல்யாணம் செய்துகொண்டோம்; நீங்கள் இருவரும் ஓடிவிட்டீர்கள்; பந்தயத்தை வென்றவன் நானே. ஆதலால் ஜயத்தோடு போய்வருகிறேன்.

(கௌதமியும் நாராயணத்தேவரும் போதல்).

பிர.—போ, போ; நீலியை நன்றாய் வசப்படுத்திவிட்டாய்

விஜ.—அடங்காப்பேயாகிய அவள் இந்தமாதிரி அடங்கி விடுவாளென்று நான் கனவில்கூட நினைத்ததில்லை; இஃது, பெரிய அதிசயமாகவிருக்கின்றது.

(அனைவரும்போதல்

நீலிவசீகரம் முற்றிற்று

மரியாதையுடன் மறுத்துரை.—ஜனங்கள் பிரசங்கம் செய்யும்பொழுது அவர்கள் சொல்லுவது ஏதாவது உனக்குத் தெரியாததாயிருந்தால் அப்பொழுது அதை மிகவும் வணக்கத்துடனே கை கால் முதலியவைகளை ஒடுங்கிக்கொண்டு மிருதுவான தொனியில் வெகு நயமாய் நீ மறுதலிக்கவேண்டும். அப்படி மறுதலிப்பதிலும் கண்டிப்பென்பது கொஞ்சமேனும் இல்லாமல் ஒருகால் இப்படி இருக்கலாமோ என்னவோ நிச்சயமாயத் தோன்றவில்லை. ஆனால் சந்தேகமா யிருக்கிறது, ஏதோ இப்படியும் தோன்றுகிறது என்று தாழ்ந்த பேச்சாயச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்வதிலும் நாம் வாதிப்பது பிரசங்கிப்பவனுக்குக் கொஞ்சமேனும் வருத்தமுண்டாகாதபடிக்கு ஏதாவதொரு சிரிப்புண்டாக்கும் சங்கதியாயச் சொல்லி முடிக்கவேண்டும்.

உ

கடவுள் துணை

# சாகுந்தலம்

அல்லது

## “காணாமற்போன கணையாழி”

இஃது

ஸ்ரீ காளிதாஸ மஹாகவியவர்களால்

ஸம்ஸ்கிருத பாஷையி லியற்றப்பட்டதின்

தமிழ் மொழி பெயர்ப்பு

## முகவுரை

இவ்வுலகின்கண் பல்வகை ஸாகஸாதநங்களுக்குள்ளும் காவ்யமே சிறந்த ஸாதநமாம். இக் கவிதையானது, அற்புதமான ப்ரதிபை (கவித்வ சக்தி)யும், அபாரமான வ்யுத்பத்தி (கல்வி)யும், அஸாதாரணமான அப்யாஸமு (பயிற்சியு)ம் பொருந்திய லோகோத்தர வர்ணனா நிபுணனான மஹாகவியினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு, சப்தார்த்தங்களென்னும் சொற்பொருட்களையே ஸ்தூல ஸூக்ஷ்மரூபமான இருவகை யுடலாயும், சொற்சுவை பொருட்சுவையென்னும் ரஸபாவங்களையே ப்ரத்யகாத்ம பரமாத்ம ஸ்வரூபமான இருவகை யுயிராயும், சொல்லணி பொருளணி என்னும் இருவகை யலங்காரங்களையே ஆபரணங்களாயும், ஓஜஸ் (வலி), ப்ரஸாதம் (தெளிவு), மாதுர்யம் (இன்பம்) முதலிய தர்மங்களையே குணங்களாயும், சொற்களியைதற்குக் காரணமான நெறியையே ரீதியாகவும், செய்யுணடையையே சய்யையாகவும் பொருந்தி, ச்ருதிதுஷ்டம் (வன்மொழி தொடுத்தல்), அபுஷ்டார்த்தம் (நின்று பயனின்மை) முதலிய சொற்குற்றங்கள் பொருட்குற்றங்களாகிய இருவகை தோஷங்களுமின்றி, காவ்ய சோபையாகிய ஸமாஸபாஷணம் (சுருங்கச் சொல்லல்) முதலிய முப்பத்திரண்டுவகை அழகும் பொருந்தி, சிற்றறிவினர்களுக்குக்கூட ‘ராமன் முதலானாரைப்போல் நடக்கவேண்டும், ராவணன் முதலானாரைப்போல் நடக்கலாகாது’ என்று க்ருத்யாக்ருத்ய ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி யுபதேசவாயிலாய், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை புருஷார்த்தங்களையும் வெகு ஸுலபத்தில் பயப்பிக்கும் ஓர் உத்தம வநிதைபோல் விளங்கா நிற்கின்றது. இதனை ஆதரவுடன் அடுத்தவர்களுக்கு மநதில் எவ்வகை வ்யஸநங்கள் தோன்றினும் க்ஷணத்தில் இருந்தவிடமே தெரியாமல் மறைந்துபோவதுமன்றி, பிரம்மாநந்தத்திற்கொப்பான ஓர் அதிசயமான ஆநந்தமும் உண்டாம்.

இத்தகைய காவ்யமானது ஸம்ஸ்கிருத பாஷையில் ‘ச்ரவ்யகாவ்யம்’ என்றும் ‘த்ருச்யகாவ்யம்’ என்றும் இருவகையாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ச்ரவணேந்திரியத்திற்கு மாத்திரம் ஆநந்தத்தைக் கொடுப்பனவான ‘ராமாயணம்’ ‘ரகுவம்சம்’ முதலிய காவ்யங்கள் ச்ரவ்ய காவ்யங்கள் என்றும், நடர்களால் அபிநயித்துக் காட்டப்படுதலினால் ச்ரவணேந்திரியத்திற்கு மாத்திரமேயன்றி நயநேந்திரியத்திற்கும் ஒரேஸமயத்தில் ஆநந்தத்தைக் கொடுப்பனவான ‘சாகுந்தலம்,’ ‘உத்தரராம சரிதம்’ முதலிய காவ்யங்கள் த்ருச்ய காவ்யங்கள் என்றும் வழங்கப்படும்.

இத் த்ருச்ய காவ்யமும் பரதமுனிவர் முதலிய முற்காலத்திய ஸாஹித்ய வித்வான்களால் ‘ரூபகம்,’ ‘உபரூபகம்’ என இருவகையாய் பகுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள்ளும் ரூபகமென்பது (1) நாடகம், (2) ப்ரகரணம், (3) பாணம், (4) வ்யாயோகம், (5) ஸமவாகாரம், (6) டிமம், (7) ஈஹாம்ருகம், (8) அங்கம், (9) வீதி, (10) ப்ரஹஸநம் என்று பத்து பேதங்களையுடையது. உபரூபகமோவெனில் (1) நாடிகை, (2) த்ரோடகம், (3) கோஷ்டி, (4) ஸட்டகம், (5) நாட்யராஸகம், (6) ப்ரஸ்தாநம், (7) உல்லாப்யம், (8) காவ்யம், (9) ப்ரேங்கணம், (10) ஸம்லாபகம், (11) ஸ்ரீகதிதம், (12) சில்பகம், (13) விலாஸிகை, (14) ராஸகம், (15) துர்மல்லிகை, (16) ப்ரகரணி, (17) ஹல்லீசம், (18) பாணிகை என பதினெட்டு பேதங்களோடு விளங்கும். இவ்விருபத்தெட்டு பேதங்களோடுகூடிய த்ருச்யகாவ்யத்திற்குள், ஸகல லக்ஷணங்களும் பொருந்தியிருப்பதனால், நாடகமே முக்கியமாம். இந்நாடகங்களுக்குள்ளும் ஸ்ரீ காளிதாஸ மஹாகவி யியற்றிய நாடகங்களே ரமணீயமானவையாம். அவற்றுள்ளும் ச்ருங்கார ரஸபரிதமானதும் சந்திர வம்சத்தரசனாகிய துஷ்யந்த மஹாராஜாவினுடையவும் ஸ்ரீ விச்வாமித்ர மஹர்ஷிகளுக்கு மேநகை என்னும் ஓர் அப்ஸரோத்தமையினிடத்தில் ஜநித்தவளான சகுந்தலையினுடையவும் காதற் பெருமையை எடுத்துக்காட்டும் இச் சாகுந்தல நாடகமே ஸர்வ சிலாக்கியமாம். ஸம்ஸ்கிருத நாடகத்தின் பெருமையும், காம்பீர்யமும் இந்நாடகமொன்றினாலேயே அறிந்துகொள்ளலாம்.

இச் சாகுந்தல நாடகமே ஸம்ஸ்கிருத காவ்யங்க

ளுக்குள் ஸர்வோத்தமமான காவ்யமென்னும் விஷயத்தில் நமது முன்னோர்களான பண்டித சிகாமணிகள் தொன்றுதொட்டு வழங்கிவரும் கீழ் வரையப்பட்ட சுலோகமே போதுமான பிரமாணமாம்.

"பாஷாஸு ரம்யா கைர்வாணீ,
தஸ்யாம் காவ்யம் மனோஹரம்
தஸ்மிந்ஹி நாடகம் ரம்யம்
தத்ராபி ச சகுந்தலா"

'உலகினின் மொழிக ளுக்குள்
உயர்வட மொழியே யாகும்,
பலவித கலைக்கு ளாங்குப்
பாங்குறும் காவ்ய மேயாம்;
நலமுடன் சுவைகள் தோன்று
நாடகமதினு மேலாம்,
பொலிவுசா குந்த லந்தான்
புகழுடைத் ததனின் மீதே.'

இவ்வாறு நம்தேசத்துப் பண்டிதர் இந்நாடகத்தை விசேஷமாய்க் கொண்டாடியிருப்பது மாத்திரத்தினாலேயன்றி, நம்தேசத்திலும் பிறதேசங்களிலும் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து ஆங்காங்கு வழங்கிவரும் ஒவ்வொரு தேசபாஷையிலும் மொழிபெயர்க்கப் பெற்று ஆங்காங்குள்ள பற்பல வரங்கசாலைகளில் அபிநயிக்கப்பட்டு அனைவராலும் அபிநந்திக்கப்படுகிற அநுவாதங்களினாலேயும் இந்நாடகத்தின் சிறப்பு நன்று புலப்படுவதனால், அதனைப் பற்றி ஈண்டு விசேஷமாய் ப்ரசம்ஸித்து எழுதவேண்டியது அநாவச்யமாம். ஆயினும் தற்காலத்திய ஸாஹித்ய நாடக வித்வான்களுக்குள் சக்ரவர்த்தி போல் விளங்கிவந்த ஸ்ரீகீதி என்னும் ஜராமாந்ய 'ஜர்மனி' தேசத்துப் புலவரின் அபிப்பிராயம் ஒன்றை மாத்திரம் ஈண்டு எடுத்துக்காட்டுவோம். இப்பண்டிதசிரோமணி அபத்த புஷ்கலமான இந்நாடகத்தின் ஆங்கலாநுவாதத்தைக் கண்டே இவ்வாறு களித்துக் கூறியிருக்கின்றனர்.

"Wouldst thou the life's young blossoms
and fruits of its decline,
And all by which the soul is pleased
enraptured, feasted, fed,
Wouldst thou, the earth and heaven itself
in one sweet name combine?
I name thee, O Sakuntala
and all at-once is said."

'வாழ்நாளின் வாலிபத்தின் தளிரும் பூவும்
மாண்புடைய மூதறிவின் பழமுஞ் சாறும்
பேழ்நான்கு புருஷார்த்தப் பயனும் பூண்டு
பேரின்பக் கடல் மூழ்கிப் பூரித் தோங்கி
காழ்நாம மொன்றதனுள் விண்ணு மண்ணும்
கவினுடனே கலந்திடுமோ கனவிற் போலும்
தாழ்நாவா லுனதுபெய ரொருத ரந்தான்
சகுந்தலையே! என்றலுமே எல்லா மாமே!'

அந்தோ! இத்தகைய சிறந்த நாடகம் கேவலம் நமது தேசத்தில் மாத்திரமின்றி உலகிலுள்ள மற்ற எல்லா முக்கிய தேசங்களிலும் அந்தந்தத்தேசபாஷைகளில் ஆவலுடன் மொழிபெயர்க்கப் பெற்று விளங்குவதன்றியும், விசேஷ உத்ஸாஹத்துடன் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட பாஷைகளில் பல பெயரால் பற்பலவிதமாய் மொழிபெயர்க்கப்பெற்றுப் பிரஸித்தி பெற்றிருக்க, திராவிட பாஷைகளுக்கெல்லாம் மாத்ரு பாஷைபோன்றதும், கிரந்த பாஹுள்யத்திலும் காலவரையிலும் ஸம்ஸ்கிருத பாஷைக்குச் சமானமெனச் சொல்லக் கூடியதும் நமது தென்னாட்டிற்கே ஓர் சிறந்த ரத்நம்போல் விளங்குவதுமான தமிழ்ப் பாஷையில் மாத்திரம் இந்நாடகம் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளபடி செய்யுளுக்குச் செய்யுளாயும் வசநத்திற்கு வசநமாயும் அந்தந்த நாடக பாத்திரத்திற்குத் தக்க நாடக நடையில் இதுகாறும் மொழிபெயர்க்கப்படாமலிருப்பது இத்தமிழ் நாட்டிற்கே ஒரு பெருங்குறையாம்! இப்பெருங்குறையைச் சற்றேனும் நீக்குவதற்காகவே ஸ்ரீ வித்வன் மனோரஞ்ஜநீ ஸபையோரின் வேண்டுகோளின்படி 1901-ம் வருஷத்திலேயே இந்நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் சுமார் இரண்டு அங்கம் வரையிலும் அச்சிடலுமாயினோம். ஆயினும், ''ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி'' 'நல்ல காரியத்திற்கு நாலாயிரமிடர்' என்பதுபோல இந்நற்காரியத்திற்கு நாநாவிதமான இடையூறுகள் உண்டாய் நினைத்த வண்ணமிந்நாடகத்தை முற்றிலும் அச்சிட்டு வெளியிட அவகாசமில்லாமற்போயிற்று. இப்பொழுது எமது நண்பராகிய ம-ா-ா-ஸ்ரீ, வி. குப்புஸ்வாமி ஐயர் அவர்கள் எம்மை கேட்டுக்கொண்டதின்பேரில் அவர்கள் சென்னை மயிலையிலிருந்து பிரசுரித்துவரும் "விவேக போதினி" என்னும் இம்மாதாந்த்ர தமிழ்ப் பத்திரிகை வாயிலாய், மாதம்மாதம் நான்கு பக்கங்களுக்குக் குறையாத வண்ணம் இந்நாடகத்தை அந்தந்தக் களங்களின் ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி வெகு முயற்சியுடன் அமைக்கப்பட்ட ஆலோக சித்திரபடங்களுடன் வெளியிடலாயினம்.

யாம் இந்நாடகத்தைச் சென்னை விக்டோரியா

ஸபாமண்டபத்திலும் இன்னும் சென்னையில் வந்திருந்த பற்பல பிரசித்திபெற்ற பாரஸீக நாடகசாலைகளிலும் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே ஸ்ரீவித்வன் மனோரஞ்ஜநீ ஸபையோரைக்கொண்டு பன்முறை அபிநயித்துக்காட்டியிருப்பதனால் சில நண்பர்களின் கோரிக்கைக்கிணங்கி, யாவரும் எளிதில் அபிநயிக்கும் வண்ணம் பிராசீந நவீந நாடகசாஸ்திரங்களுக்கொத்தவாறு ஸ்தலவிபாகஞ் செய்து ஒவ்வோரங்கத்தையும் களங்களாகப் பிரித்து இம் மொழிபெயர்ப்பில் காட்டியிருக்கின்றனம்.

இம் மொழிபெயர்ப்பு பலபல தேசங்களில் பற்பல லிபிகளில் அச்சிட்டு வெளியிடப்பட்டதும் இன்னும் அச்சிட்டு வெளிப்படாததுமான சாகுந்தல நாடகத்தின் மூலங்களுடையவும் வியாக்யானங்களுடையவும் பற்பல பாடபேதங்களோடு கூடிய சுமார் முப்பது பிரதிகளைப் பரிசோதித்து எமது புத்திக்குச் சரியானதாகத் தோன்றின ஒரு பாடத்தை மூலாதாரமாகக்கொண்டு எழுதப்பட்டிருக்கின்றது. மற்றைய பாட பேதங்களை அவற்றின் மொழி பெயர்ப்புடன் இந்நாடகத்தின் அநுபந்தங்களொன்றில் குறித்துக் காட்டுவோம். பிரஸித்த மூலபாடத்தை சிற்சிலவிடங்களில் அதிக்கிரமித்து ஆங்காங்கு யுக்திக்குத் தக்கவாறு அவலம்பித்த சிறிய வேறுபாடுகளுக்குக் குணதோஷஜ்ஞர்களான பண்டித சிகாமணிகள் எம்மை மன்னிப்பாராகவும்.

இந்நாடகத்தை யியற்றிய ஸ்ரீ காளிதாஸ மஹாகவியின் காலநிர்ணயமும், அவரது சரித்திரமும், அவர் இயற்றிய கிரந்தங்களின் வரலாறும், அவற்றின் சிறப்பும், விசேஷமாய் இந்நாடகத்தின் விமர்சமும், இன்னும் எல்லா நாடகங்கள் முதலாகிய இருபத்தெட்டுவகை த்ருச்ய காவ்யங்களுக்குப் பொதுவான பற்பல அருமையான விஷயங்களும் இந்நாடகத்தை புஸ்தக ரூபமாய் அச்சிட்டு வெளியிடும்பொழுது பிரமாணோதாஹரணங்களுடன் சேர்த்து வெளியிடப்படும்.

இத்தகைய மொழிபெயர்ப்பு தமிழ்ப்பாஷாபிமானிகளால் நன்று ஆதரிக்கப் படுமாயின், காளிதாஸர், பவபூதி முதலிய மஹாகவிகளால் இயற்றப்பட்ட மற்ற முக்கியமான ஸம்ஸ்கிருத நாடகங்களையும் இவ்வாறே மொழிபெயர்த்து வெளியிடக் கருதியிருக்கின்றோம்.

டி. எஸ். நாராயணசாஸ்திரியார், பி.ஏ., பி.எல்.

# இந்துலேகை

மலையாள நாவல்

(153-ம் பக்கம் தொடர்ச்சி)

"புருஷர்களாகிய நீங்கள் சுத்தமூடர்களாகையால் ஸ்திரீகளின் முன் ஸரஸசிங்கார மோஹனலங்காரமாய் ஸல்லாபஞ் செய்வதிலும் நடந்து கொள்வதிலும் கைதேர்ந்தவர்களென்று உங்களை வெளிப்படுத்திக் கொள்வதில் பெருமையும் சந்தோஷமும் உண்டாகிற தென்று எண்ணுகிறீர்கள். இப்படி நீங்கள் மனம்போனபடி செய்யும் தப்புத் தண்டாக்கள் அநாதைகளாகிய எங்கள் தலைமேல் வந்துவிடுகின்றன. அதனால் நாங்கள் சொல்லிமுடியாத தேகவருத்தத்தையும் மனவருத்தத்தையு மடைகிறோம். நாங்கள் படும்பாடு, எல்லாம் உணர்ந்தவராகிய சர்வேசுவரனுக்கே தெரியும். அதைப்பற்றி உங்களுக்கென்ன? உங்களுக்கு ஆகவேண்டியதெல்லாம் ஸ்திரீகளை உங்களுடைய கொடுங்கோன்மைக்கும் மூடத்தனமான அதிகாரங்களுக்கும் உட்படுத்துவதுதானே. நீங்கள் எந்த மதத்தை, எந்த ஜாதியை, எந்த வம்சத்தை, எந்தக் கூட்டத்தைச் சேர்ந்திருக்கிறீர்களோ அதே மதத்தையும், அதே ஜாதியையும், அதே வம்சத்தையும், அதே கூட்டத்தையுஞ் சேர்ந்தவர்களாகிய ஸ்திரீகள், உங்களுக்கென்னென்ன சுதந்தரங்கள் உண்டோ, அந்தச் சுதந்தரங்களுக்கெல்லாம் பாத்தியதை யுடையவர்களாயிருக்க, உங்களுக்கு மான அவமானம் என்னும் உணர்ச்சி கொஞ்சித்தாவதிருக்குமானால், ஸ்திரீகளை இவ்வளவு கெட்டவர்களெனவும் வியபிசாரிகளெனவுங்கூறி, அவர்களது சிறந்த குணங்களுக்கு இவ்வளவு அவதூறும் இகழ்ச்சியும் உண்டாக்க மாட்டீர்கள். பதிவிரதா தர்மத்தில் மயிரிழையும் தவறாமல், புருஷர்களது சமூகத்தில் ஸ்திரீகள் ஆநந்தமாயும் விநோதமாயும் உல்லாஸமாயும் சேர்ந்து ஸம்பாஷிக்க எத்தனையோ சந்தர்ப்பங்களிருக்கின்றன. இப்பேர்ப்பட்ட பொழுதுபோக்குகளில் சேருகிறவர்கள் கேவலம் தங்கள் காமவேட்கைகளைத்தீர்த்துக் கொள்வதாகிய ஒரே கருத்துடன்தான் சேருகிறார்களென்று அவதூறு செய்துகொண்டு திரியும் அடாவடி ஆசாமிகளின் கட்சியை ஸ்தாபிக்க மாதவனும் முயல்கிறானென்பது உண்மையானால், எனக்குப் பெருத்த ஆச்சரிய முண்டாகும்.

என்னைக்கேட்கும்பட்சத்தில், ஸ்திரீகளின் சுதந்

தர விஷயத்தில் ஏற்படுத்தியிருக்கும் அநாவசியமான கட்டுத்திட்டங்களும், அவர்கள் கேவலம் மிருக ஜாதியைச் சேர்ந்தாற்போல எவ்வித கல்வி பயிற்சியுமின்றி அவர்களை மூடங்களாக வளர்த்துவரும் வழக்கமுமே வியபிசாரத்துக்கு முக்கியமான காரணமென்று சொல்லுவேன். அப்படியிருக்க, மிருக ஜாதியைச் சேர்ந்த பசுவாவது நாயாவது தன் இஷ்டப்படி இந்திரிய சுகமனுபவிக்கும்பட்சத்தில், அதனிடத்தில் வியபிசாரதோஷம் ஆரோபிப்பவருமுண்டோ? ஸ்திரீகளுக்காவது புருஷர்களுக்காவது கல்வி நாகரிகங்கள் ஏற்படுவதனாலேயே அவர்கள் வியபிசாரதோஷத்துக்குட்படாத சுத்தாத்மாக்களாய்விடுகிறார்களென்று நான் சொல்லவில்லை; ஏனெனில் எவ்வளவு படித்தவர்களுக்கும் துர்புத்தியும் துர்வியாபாரமும் சிலசமயம் உண்டாகின்றன. ஆனால் அப்படி உண்டாவதற்குக் காரணம் படிப்பும் அறிவுந்தானென்று சில கற்றறிமோழைகள் சாதிப்பதைக் கேட்கும்போதுதான் எனக்கு எங்குமில்லாத ஆச்சரியமுண்டாகின்றது.

உண்மையை ஆராயுங்கால், கல்வியும் அறிவும் எங்கும் பரவுவதே வியபிசாரத்தையும் துராசாரத்தையும் அழிப்பதற்கு முக்கிய காரணமென்று ஏற்படும். ஆனால் மலையாள நாட்டில் ஒரு ஸ்திரீ தனக்கிஷ்டமானபடி ஒரு புருஷனைத் தள்ளிவிட்டு மற்றொருவனை வைத்துக்கொள்வதும் நியாயமென்று அங்கீகரித்திருக்கும் நம் ஆசாரத்தைப்பற்றி ஒருவேளை மாதவன் ஆக்ஷேபித்திருக்கலாம். இப்படிப்பட்ட சுதந்தரந்தான் நமக்கு இருக்கிறதேயென்று சில மானங்கெட்ட ஸதிரீகள் வியவஸ்தையின்றி நடப்பதுண்டென்றாலும், இந்தச் சுதந்தரம் மாத்திரம் நமக்குள்ள அருமையான பாக்கியங்களில் ஒன்றென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சுதந்தரம் ஐரோப்பாவில்கூட கிடையாதாம். ஆனால் இந்த உரிமையானது சர்வஜன சாமான்யமாயிருக்க வேண்டுமென்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள மகாமேதாவிகளிற் சிலர் கருதுவதாகப் படித்திருக்கிறேன். இப்படிப்பட்ட சுதந்தர அதிகாரமில்லாமையால்தான், ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் எத்தனையோ தம்பதிகள் கரையற்ற துக்கசாகரத்தில் மூழ்கி சங்கடப்படுகிறார்கள். இந்தச் சுதந்தரத்தை மாத்திரம் துர்எண்ணமின்றி நியாயமும் யுக்தமுமாக காரணமிருந்து செலுத்தும்பட்சத்தில், ஸ்திரீகளுக்கு மிகவும் அவசியமான பாதுகாப்பைத் தருவதில் இது சிறந்த சாதனமாய் நின்று உதவும். சென்ற பத்து வருஷங்களாக நியாயமான காரணமின்றி எத்தனை ஸ்திரீகள் தங்கள் புருஷன்மாரைத் தள்ளிவிட்டிருக்கிறார்கள், எத்தனை புருஷர் தங்கள் மனைவிமாரைப் பரித்தியாகம் செய்திருக்கிறார்களென்பதை மாதவன் சரியாய் எண்ணிக் கணக்கெடுக்கும் பட்சத்தில் சராசரி ஆயிரத்தில் ஒன்றுகூடத் தேறாதென்று நான் நிச்சமாய்ச் சொல்லுவேன். இப்படிப்பட்ட பரித்தியாகங்களில் சிலவற்றிற்குச் சரியான காரணங்கள் ஏற்பட்டிருக்கலாம்; சிலவற்றின் விஷயத்திலே அவைகள் ஸ்திரீ புருஷர்களுக்குள்யாருடைய துர்ப்புத்தி காரணமாகவாவது துரதிர்ஷ்டம் காரணமாகவாவது நேரிட்டிருக்கலாம்; அதை வைத்துக்கொண்டு மலையாள ஸ்திரீகள் இந்த வழக்கத்தை ஸர்வ ஸாதாரணமாய் அனுசரிக்கிறார்களென்று அவர்களைத் தூற்றுவதைக் கேட்க கஷ்டமாயிருக்கிறது. ஆகவே இந்தச் சுதந்தரம் உண்டாயிருப்பது அனுகூலமேயாம். ஆனால் அது சரியானபடி உபயோகப்படும் பொருட்டு ஏற்பட்டதேயன்றித் துருபயோகப் படுத்துவதற்கன்று. அப்படித் துருபயோகப்படுத்தினால் அபகீர்த்தியும் அவமானமும் உண்டாவது சகஜமே. ஆயினும் அது அந்தச் சுதந்தரத்தைத் துருபயோகப்படுத்தினதனாலுண்டான தோஷமேயன்றி அந்தச்சுதந்தரத்தையே சேர்ந்ததல்லவாகையால், ஸ்திரீகளாகிய எங்கள் ஜாதிமுழுவதையும் மாதவன் இப்படி அடியோடு தூஷித்துப் பேசினதை நான் கண்டிக்காமல் விடமாட்டேனென்பது நிச்சயம்."

இந்துலேகை கடைசியாகச் சொன்ன அபிப்பிராயத்தை மாதவன் அங்கீகரியாதவனாய், "ஸ்திரீபுருஷர்கள் தங்களுக்கிஷ்டமானபோதெல்லாம் தங்கள் அந்யோந்யமான சம்பந்தத்தை நிவர்த்தி செய்துகொள்ளும்படியான சுதந்தரம் அவர்களுக்குக் கொடுத்திருப்பதை நியாயமென்று நான் ஒப்புக்கொள்ளேன். அப்படிப்பட்ட சுதந்தரத்தினால் ஸ்திரீபுருஷர்களுக்குள்ள விவாகசம்பந்தம் கேவலம் வ்யாபார சம்பந்தமான ஒப்பந்தமாயேற்படுமேயன்றி அதில் பரஸ்பர பிரீதியும் கௌரவமும் முக்கியமாயிருக்க வழியில்லை." என்றான்.

"ஆகவே மலையாள தேசத்தில் உள்ள வழக்கப்படி நடக்கும் கலியாணம் உனக்குச் சம்மதமாயிராதாக்கும்?" என்றாள் இந்துலேகை.

"இராது தான்" என்றான் மாதவன்.

"அப்படியானல், வேறெந்த நாட்டுக்காவது போய்விட உத்தேசித்திருப்பதாகச் சற்றுமுன் சொன்னையல்லவா? ஒருவேளை நீ அப்படிச் செய்தாலும் நல்லதுதான்."

"அதுதான் வாஸ்வத்தில் என் எண்ணம். அதற்கு நீ சம்மதிக்கிறையா, இந்துலேகா?" என்ருன் மாதவன்.

"அதற்கு என்னுடைய சம்மதம் எதற்காக?" என்ருள் இந்துலேகை.

"இந்துலேகா, நீ என் பெண்டாட்டியாகும் பட்சத்தில், மலையாளதேசமே எனக்கு ஸ்வர்க்கமாகும்" என்ருன் மாதவன்.

"மலையாள தேசத்திலுள்ள விவாகசம்பந்த மாதிரிதான் உனக்குப் பிடிக்கவில்லையென்கிறையே?" என்ருள் இந்துலேகை.

"நம்முடைய சம்பந்தம் அந்த மாதிரியாயிராதே, இந்துலேகா." என்ருன் மாதவன்.

"அதுசரி, மிகவும் வாஸ்தவந்தான்" என்ருள் இந்துலேகை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்துலேகையின் தாயார் வரவே அவர்களுடைய சம்பாஷணை தடைப்பட்டது; வந்தவளும் அவர்களைக் கண்டு நகைத்தாள். இதனல் மாதவனுக்கு அன்றையதினம் வேட்டைக்குப்போக உத்தேசித்தது நிறைவேருமற் போனதுடன் இந்துலேகையுடன் பின்னும் அந்தரங்கமாய்ப் பேசுவதற்கான சமயமும் இல்லாமற் போயிற்று.

ஆனல் நான் என் கதையைத் துரிதமாய்க் கொண்டுபோக வேண்டியிருப்பதால் இந்தப் பீடிகை சுருக்கித்தானகவேண்டும்.

மாதவனுக்கு உண்டான மன்மதாவஸ்தை வர வரப் பொறுக்கமுடியாமற் போய்விட்டது. அவனுக்கு அன்னம் அருவருப்பாய்விட்டது. தூக்கம் வரவில்லை; இந்துலேகையின் கன்னிமாடத்துக்கு வந்துகொண்டிருந்ததும் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து வந்தது. ஒருநாள் அவன் தாயாராகிய பார்வதியம்மா இந்துலேகையுடன் பேசிக்கொண்டிருந்தாள்; அப்போது பேச்சின்மேல் பேச்சாய் மாதவன் சங்கதி வரவும், "அவனுக்கு என்ன உடம்போ தெரியவில்லை. ரொம்ப சோர்வடைந்தும் களைகுன்றியும் இருக்கிருன்." என்ருள்.

"அதற்கு ஏதாவது காரணமிருக்கத்தான்வேண்டும்" என்ருள் இந்துலேகை.

"எனக்கு ஒரு காரணமும் தெரியவில்லை." என்ருள் பார்வதி அம்மா, "அவன் சோறு சரியாய் உண்கிறதில்லை. இரண்டு வேளையுஞ் சேர்ந்து நாலு கவளம் அன்னம்கூட உள்ளே போகிறதில்லை. பாலோ டீயோ ஒன்றும் வேண்டாமென்கிருன். ராத்ரியில் அவனுக்குத் தூக்கமுமில்லையென்று கூட இருக்கிறவர்கள் சொல்லுகிருர்கள். இருக்கிறதைப்பார்த்தால் ஏதோ பிரமாதமாய் உடம்புக்கு வரும்போலிருக்கிறது"

"அப்படியானல் நான் அவரை இரண்டொரு கேள்விகேட்க வேண்டியிருக்கிறது. இங்கே வரச் சொல்லுங்கள்." என்ருள் இந்துலேகை.

பார்வதியம்மா அப்படியே போய்ச்சொன்னுள். மாதவனும் அந்த ஆக்ஞையைச் சிரசில் வகித்து இந்துலேகையின் மாடிக்கு வந்தான்.

"என், இங்கே வருவது அவ்வளவு அபூர்வமாய் விட்டதே? என்று கேட்டாள் இந்துலேகை.

"எனக்கு வரப்பிடிக்கவில்லை" என்ருன் மாதவன்.

"இங்கே வருவது உனக்கு அவ்வளவு வருத்தமாயிருக்கிறதா?"

"தடையன்னியில்" என்ருன் மாதவன். "எனக்குச் சாதாரணமாய் எப்போதுமிருக்கிற துக்கம் இங்கே வருவதனல் இன்னும் ஜாஸ்தியாகிறது."

"நான் சேலை கட்டிக்கொள்ளப்போகிறேன்." என்ருள் இந்துலேகை. "அந்த ஸோபாவில் படுத்துக்கொண்டு நியூஸ்பேபர் வாசித்துக்கொண்டிரு. நான் ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்; அப்புறம் எல்லா சங்கதிகளும் நீ என்னுடன் சொல்லலாம்."

மாதவன் ஸோபாவின்மேல் படுத்துக்கொண்டானேயன்றி நியூஸ் பேப்பரைத் தொட்டானில்லை.

"நியூஸ் பேப்பர் என்ன தப்பு செய்தது?" என்று கேட்டுவிட்டுச் சிரித்துக்கொண்டே இறங்கிப்போனுள் மாடியிலிருந்து இந்துலேகை. அவள் இறங்கிக் கீழே போகும்போது ஒரு வேலைக்காரன் மாதவனுக்கு ஒரு தந்திக் கடுதாசியை எடுத்துக்கொண்டு வருவதைக்கண்டாள். இந்தத் தந்தியில் மாதவன் பரீட்சை சங்கதிதான் இருக்க வேண்டுமென்று இந்துலேகை நிச்சயங்கொண்டு சிறிதும் யோசிக்காமல் அந்தக் கடுதாசியைத் திறந்து, அதில் எழுதியிருந்த சமாசாரத்தைப் படித்துப்பார்க்க அவளுக்கு ஆநந்தம் பொங்கிற்று. அவள் உடனே மாதவனிடம் ஓடிவந்து "பீ. எல். தேறிவிட்டது, தேறிவிட்டது" என்று கத்திக்கொண்டே தந்தியை அவன் கையில் நீட்டினுள். மாதவனே அதைத்

தன்கையில் வாங்கக்கூட வாங்காமல் "சரி நல்லது" என்று மாத்திரம் சொன்னான். அவன் தந்திக்கடிதத்தைப் பார்க்கவுமில்லை; மேலே ஒரு அக்ஷரம் பேசவுமில்லை. இருந்த இடத்தை விட்டுக் கொஞ்சமும் அசையாமல் இந்துலேகையின் சந்திரபிம்பம் போன்ற முகத்தைக் காதல் நிறைந்த நோக்குடன் கண்ணுற்ற வண்ணமாயிருந்தான். இதைக்கண்ட போது இந்துலேகைக்கே ஒரு தீவிரமான மன்மதாவஸ்தை உண்டாயிற்றென்றாலும், அதை அவள் தைரியத்தோடு அடக்கிக்கொண்டு "இது என்ன சங்கதி, மாதவா? நீ ஏன் இவ்வளவு விசனமாயிருக்கிறாய்? பீ. எல். பரீட்சையில் முதல் க்ளாஸில் முதலாய்த் தேறினை என்ற சங்கதியைத் தெரிவித்தால் நீ இவ்வளவு விசனப்படுவானேன்? இவ்வளவு கவலையற்றுக்கிடப்பது ஆச்சரியம்! ஆச்சரியம்!!" என்றாள்.

"எனக்கு இதில் ஓர் அக்கறையும் இல்லை. பீ. எல். பாஸானாலும்ஆகாவிட்டாலும் எல்லாம் எனக்கு ஒரு மாதிரிதான்." என்றான் மாதவன்.

"பாஸான சங்கதியை நான் போய் வலியச்சனோடும் நம் இருவருடைய தாய்மார்களோடும் சொல்லுகிறேன். நானே ஓடிப்போய் சொல்லுகிறேன். அவர்களாவது கேட்டு ஸந்தோஷிக்கட்டும்" என்றாள் இந்துலேகை.

"நீ ஏன் அதற்காக இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? அவர்களிடத்தில் நானே சாவதானமாய்ப் போய்ச் சொல்லமாட்டேனா? நீ ஏன் இவ்வளவு அவசரப்படுகிறாய்?" என்றான் மாதவன்.

"கூடாது" என்றாள் இந்துலேகை. "நானே உடனேபோய் அவர்களுடன் சொல்லிவருகிறேன். இந்தத் தந்தியை நீ வாசிக்கத்தான்வேணும். இதோ பார்."

"எனக்கு அதைப்படிக்க மனமில்லை. பாஸானதில் எனக்குக் கொஞ்சமாவது ஸந்தோஷமிருந்தால்தானே" என்றான் மாதவன்.

"ஏன்?" என்று கேட்டாள் இந்துலேகை.

"என் மனதில் உள்ள துயரத்தினால்" என்றான் மாதவன்.

"இப்போது நீ, பீ. எல். ஆயிருந்தும் இன்னும் மனத்துயரமா?" என்று குறும்பாய்க் கேட்டாள் இந்துலேகை.

"உனக்கு இவ்வளவு கல்மனது இருக்குமென்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்" என்று ஆரம்பித்த மாதவன் மேலே சொல்லாமல் சடுக்கென்று நிறுத்திவிட்டான்.

"எனக்கு முன்னமே, தெரிந்திருந்தால்" என்று அவன் சொல்லியதை இந்துலேகையும் பிடித்துக்கொண்டு "நீ சொன்னதைக் குறையும் சொல்லித் தயவுசெய்து முடித்துவிடு" என்றாள்.

"எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்" என்று மீண்டும் மாதவன் சொன்னான்.

"உனக்கு முன்னமே தெரிந்திருந்தால் என்ன?" என்றாள் இந்துலேகை. அப்படிக் கேட்கும்போது அவள் மாதவன் சமீபத்துக்கு வந்துவிட்டாள்.

"எனக்கு முன்னமே தெரிந்திருந்தால், இந்தச் சங்கடமும் நாசமும் வராமலிருக்கும்" என்றான் மாதவன்.

"சங்கடமும் நாசமுமா? நீ என்ன எண்ணிக்கொண்டிருக்கிறாய்?" என்றாள் இந்துலேகை.

"என்னைப்பற்றி உன் நெஞ்சத்தில் கொஞ்சமாவது தயாதாட்சணியம் இல்லையே, இந்துலேகா;" என்றான் மாதவன்.

"அதிருக்கட்டும்" என்றாள் இந்துலேகை. "அதைப்பற்றி நான்வந்து பேசிக்கொள்ளுகிறேன். இப்போது நான் நொடிக்குள் போய் உனக்குப் பாஸானதை வலியச்சனோடும் என் தாயாரோடும் உன் தாயாரோடும் நம் மாமாமாரிடத்திலும் சொல்லிவிட்டுவருகிறேன்; இதோ போய்க்கொண்டிருக்கிறேன்; ஓடிப்போய்ச் சொல்லிவிடுகிறேன். நீ மாத்திரம் இங்கே யிரு. உனக்குப் பரீட்சைதேறிய சங்கதியைவந்து நான் சொன்னதற்காக நீ இவ்வளவு சோர்வடைந்திருக்கக்கூடாது?"

"எனக்காக நீ இந்தச்சிரமமெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டாம், இந்துலேகா" என்றான் மாதவன். "இந்தப் பாஸானதில் எனக்கு ஒரு ஸந்தோஷமில்லை. என் உயிர் இந்தத் தேகத்தைவிட்டுச் சீக்கிரத்தில் பிரிந்து போய்விட வேண்டுமென்று கடவுளை நான் பிரார்த்திக்கொள்ளவேண்டியது மாத்திரமே இப்போது எனக்குள்ள குறை. உயிருள்ள வரைக்கும் வேதனைப்பட்டுக்கொண்டு இந்தப் பாஸ் யாருக்கு வேண்டியிருக்கிறது?" என்று சொல்லி மாதவன் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக அழுதான்.

இந்தப் பரிதாப நிலையைக்கண்டு சகிக்க இனி க்ஷணநேரமும் இந்துலேகையால் முடியவில்லை.

அடக்கமுடியாதகாதலும் தாபமும் அவள் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்க, இனி ஒரு நிமிஷமும் அதைத்தாங்க முடியாமல் அவள் முற்றிலும் அவற்றிற்குப் பரவசமாகி சோபாவில் தானும் உட்கார்ந்து மெய்ம்மறந்து மாதவன்மேல் சாய்ந்த வண்ணமாப் அவனுடைய கோமளமான

முகத்தோடு தன் சந்திரவதனத்தைச் சேர்க்கவே அடக்கமுடியாத ஆநந்தங்களிப்பில் ஒருவரையொருவர் முத்தமிட்டு இதழுடன் இதழ் கலந்தனர். அப்போது இந்துலேகை சொல்லலுற்றாள், "என் உயிரே. என் ஒன்றான உண்மைக்காதற் களஞ்சியமே! என் இப்படி விசனிக்கிறாய்? இரண்டு வருஷத்துக்கு முன் நான் உன்னை என் உள்ளத்தில் குடிகொள்ளச் செய்தேன். அது முதல் என் சரீரத்தையும் மனதையும் உனக்கு சமர்ப்பித்தேன். இனி நாம் ஆநந்த பூர்த்தியான சுகவாழ்வில் இருப்போம் வா. உன்னைத்தவிர எவரிடத்திலும் எப்போதும் என் மனம் சென்றதில்லை. இனி இந்த ஜன்மமுள்ளவரையிலும் வேறொருவரிடத்தும் நான் காதல் கொள்ளேன். உன்னையே என் மன மொழி மெய்களால் காதலிக்கின்றேன்."

என்று சொல்லி ஒரு க்ஷணகாலம் மாதவன் ஆலிங்கனத்துக்குத் தன்னை வசமாக விட்டு, அவன் கண்ணீரைத் துடைத்து, பிறகு எழுந்து அவன் பக்கத்தில் நின்றாள் இந்துலேகை. மாதவனுக்கோ இந்துலேகை சொன்ன சில வார்த்தைகள் மாத்திரமே காதில்பட்டன. உடனே அவன் இன்பக்கடலில் மூழ்கவே தன்னைச் சுற்றிலுமிருந்த எதுவும் அவன் கண்ணுக்குத் தெரியவில்லை, காதுக்குக் கேட்கவுமில்லை. கடைசியாக அவன் எழுந்து நிமிர்ந்து நின்றான்.

"இப்பொழுது நான் பரீட்சையில் தேறியதை உலகத்துக்கெல்லாம் வெளிப்படுத்து. இந்த வாழ்க்கையில் எனக்குக் கிடைக்கும் சகல போக பாக்கியங்களையும் இனி இந்துலேகை என்னுடன் சேர்ந்து அனுபவிக்கப்போகிறபடியால் எனக்கு இப்போதிருப்பதெல்லாம் நான் இவ்வுலகத்தில் ஜீவித்திருக்கவேண்டுமென்ற ஒரே விருப்பந்தான். நான் வாஞ்சித்த மேலான வரம் எனக்குக் கைகூடி விட்டபடியால் நானே மகா பாக்கியவானென்பதற்குச் சந்தேகமில்லை. இனி, இந்துலேகா, நீ போய் எனக்குப் பரீக்ஷை தேறின சங்கதியை அவர்களோடு சொல்லலாம். அந்தச் சந்தோஷசெய்தி உன் வாய்மொழியாய் வருவதே இப்போது உத்தமமாகும்." என்று மொழிந்தான் மாதவன் வெற்றி வீராப்புடன்.

மாதவனுக்கும் இந்துலேகைக்கும் உண்டாயிருந்ததென்று எற்கனவே நாம் சொல்லியிருந்த ஆத்ம சம்பந்தம் இவ்வாறாகத் தான் நிறைவேறியது. இவ்விருவரும் தமக்குள்ளாகவே ஒருவித ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களென்றும், மாதவன் இந்துலேகையை மணக்க உத்தேசித்திருக்கிறானென்றும் பஞ்சு மேனவனுக்குத் தெரியவந்தது. இந்தச் சம்பந்தம் அவ்வளவாய் அவனுக்கு இஷ்டப்படவில்லையென்றாலும் அந்தச்சமயத்தில் அவன் அதற்கு எவ்விதவிரோதமும் காட்டவில்லை.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# சிறுவர்க்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

உண்மையான மனிதன்.—முன்னொரு காலத்தில் க்ரீஸ்தேசத்தில் டையோல்னீஸ் என்றொரு மஹான் இருந்தார். அவர் சிறந்த தபோதனர்: உலக விஷயங்களில் பற்றற்றவராக விருந்தார். இவர் எப்பொழுதும் கந்தல்களை உடுத்திக்கொண்டும், தாடியை வளரவிட்டுக்கொண்டும், கையில் தடி பிடித்துக்கொண்டும், தோளில் ஓர் சிறு மூட்டையைத் தாங்கிக்கொண்டும், வெறுங்காலுடன் தாம் இருந்த பட்டணத்தில் பகற்காலங்களில் உலாவி வருவது வழக்கம். இரவில் அவர் ஓர் தொட்டியில் தூங்கி வந்தார். இவர் பிக்ஷை எடுத்தே உண்டு வந்தார். மழைக்காலங்களில் இவர் வீட்டுக்கூரைகளின் அடியில் உட்கார்ந்து தமது மேல் விழுந்த தண்ணீரைக் கவனியாதிருப்பது வழக்கம். சீதோஷ்ண ஸுகதுக்கங்களை இவர் ஸமமாகப் பாராட்டி வந்தார். இம்மஹான் ஒரு நாள் நடுப்பகலில் கையில் ஓர் ஏற்றிய விளக்கை எடுத்துக்கொண்டு ஏதோ ஓர் வஸ்துவைத் தேடுவதுபோலப் புறப்பட்டார். இவர் வரும் வழியில், இவரைப் பைத்தியக்காரன் என்று எண்ணிய சிலர் இதையும் பைத்தியத்தின் ஓர் அடையாளம் என்றுகொண்டு 'ஏன் அய்யா இந்தப் பட்டப் பகலில் இவ்வாறு விளக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டீரே. உமக்கு இந்தப் பகலில் கண் தெரியாமல் போய்விட்டதா?'' என்று பரிஹாஸம் செய்தனர். அதற்கு அவர் மஹா விநயத்துடன் 'அப்பா இப்பாழுலகில் மனிதன் என்ற கூறத்தக்கவன் யாரேனும் இருக்கிறானா என்று உணர நான் பட்டப்பகலில் விளக்கிட்டுத் தேடுகிறேன்' என்று கூறிவிட்டுத் தமது கருமமே கண்ணாகப் புறப்பட்டு விட்டார். இம்மறுமொழியால் இவர் பைத்தியம் முற்றிவிட்டது என்ற எண்ணம் கேட்போர் மனதில் திடப்பட்டது. பாம்பிற்கன்றோ பாம்பின் கால் தெரியும்; மஹான்கள் நிலை பாமரர்களுக்கு எவ்வாறு தெரியும்? மஹான் ஓர் கோயிலண்டைபோய் அப்பொழுது அங்கிருந்த பூசாரியிடம் அவர் பிச்சை கேட்டார். இவரைக்கண்டதும் பூசாரி மிகுந்த பபரப்புடன் 'நான் உன்னை வாழ்த்துகிறேன் இதுவேபோதும்.' என்று கூறிவிட்டுக் கோயிலுள் மறைந்து விட்டான். மஹான் வேடிக்கை ஸாமான்கள் நிறைந்த ஓர் கடையண்டை வந்துநின்றார். உள்ளே மிகுந்த ஆடம்பரத்துடன் ஓர் பெண் சில ஸாமான்களை வாங்கிக்கொண்டிருந்தாள். அவளை நோக்கி மஹான் 'அம்மணீ! வேடிக்கை ஸாமான்களை வாங்கும் காலத்தில் என்னைக் கவனியாது விட்டுவிடக்கூடாது. நான் பசியால் வருந்துகிறேன்' என்று கூறிப் பிச்சை கேட்டார். உடனே அவள் 'ஐயோ, பாவம், மிகுந்த கஷ்டப்படுகிறாயா' என்று கூறி ஒரு பைஸாவை விட்டெறிந்தாள். அதேஸமயத்தில் அவள் தன் நாய்க்குக் கழுத்துப்பட்டை

வாங்கியதற்காக அந்தக்கடைக்காரனிடம் 12 ரூபாய்களை எடுத்துக் கொடுத்தாள். இதைக் கண்டு தலையைச் சொறிந்துகொண்டே மஹான் போய்விட்டார். போனவர், ஓர் இராஜ குமாரன் அழகிய ரதத்தில் வருவதைக் கண்டு அதன் அருகில் ஓடிப்போய் ரதத்தை நிறுத்திக்கொண்டு, 'மஹாராஜா! என் கஷ்டத்தைச் சற்றுக் காதுகொடுத்துக்கேட்கவேண்டும்' என்று மேல் சொல்ல வாய் எடுத்தார். அப்பொழுது இராஜகுமாரன் கோபத்துடன் 'அடே மடையா! விலகி நில். இல்லாவிடில் உன்னை அடிக்கவாவது செய்வேன், அல்லது ரதத்தை உன் மேல் ஏற்றியாவது விடுவேன்' என்று கதறினான். அப்பொழுது அருகாமையில் போய்க்கொண்டிருந்த அடிமை ஒருவன் மஹான் படும் கஷ்டத்தைக்கண்டு மிகுந்த மனக்கனிவுடன் (தரித்திரத்தின் கொடுமை நன்றாக உணர்ந்தவன் அல்லவா அவன்!) அவரைக் கட்டி அணைத்து விலக்கி ஒரு பைஸாவை அவர் ஓட்டில் போட்டுவிட்டுத் தன் வேலையின்மேல் கவனமாகப் போய்விட்டான் மனக்கனிவுடன் தன்னால் இயன்ற அளவு அன்புடன் அளித்து, அதற்குப்பதிலாக வரும் யாதொரு கைம்மாறையும் ஏற்றுக் கொள்ளப் பின்னடையாத அடிமையைக் கண்டார் மஹான்! ஆனந்த பரவசரானார். 'ஓ தெய்வமே! உன்னருளால் இப்பாழுலகில் ஓர் உண்மையான மனிதனைக் கண்டேன்! அவன் ஓர் அடிமையாகக் காணப்படுகிறான். நான் கிருதார்த்தனானேன்!' என்று கூத்தாடிவிட்டு விளக்கை அணைத்தார். பின்னர் அவர் தமது இருப்பிடம் சென்று அமைதியுடன் இருந்தார். பட்டப்பகலில் தீவட்டியிட்டுத் தேடினபோதிலும் உண்மையான மனிதர் எக்காலத்திலும் குறைவுதான். ஸதா மனக்கனிவுடன் தம்மால் இயன்றமட்டும் கொடுத்து, அவ்வாறு செய்வதால் வரும் சிறப்பை அபேக்ஷிக்காதிருந்தலே அவர்கள் முக்கிய வெளிஇலக்ஷணமாக இருக்கும். இந்தக் கருத்தை உள்ளடக்கியே ஔவை 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' ஆகச் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றாள்.

***

இக்கரைக்கக்கரை பச்சை.—இந்தத் தொடர், ஆடுகள் மேய்வதிலிருந்து எடுக்கப்பட்டது. ஆடு ஓர் கால்வாய்க் கரையில் மேய்ந்துகொண்டு அக்கரையை நோக்குமாம். அங்கு உள்ள பச்சிலைகள் மிகுந்த பச்சையாகக் காணப்படுவதைக்கண்டு இக்கரையில் தின்னுவதை நிறுத்திவிட்டு அக்கரைக்கு ஓடிவிடுமாம். பின்னர் அங்கிருந்து இக்கரையை நோக்க இது அதிகப் பச்சையாக இருப்பதைக் கண்டு இங்கு வருமாம். இவ்வாறு அங்கும் இங்கும் அலைந்துதான் ஆடு தழை மேய்வது வழக்கம். 'தூரத்துப்பச்சை கண்ணிற்குக்குளிமை' ஆதலால் ஆடுகள் இவ்வாறு ஏமாறுவது. இதுபோல, தான் இருக்கும் நிலையைவிட்டு ஒருவன் மற்றொருவன் நிலைக்கு மாற உத்தேசித்தால் அவனை நோக்கி 'இக்கரைக்கு அக்கரை பச்சைதான் அப்பா! வீணாக ஏமாந்து உன் நிலையைவிட்டு மாறி பரிதவியாதே' என்று இந்தத் தொடரைக் கூறி புத்தி கூறுவது வழக்கத்தில் வந்துவிட்டது. இவ்விஷயமாக ஓர் கதை ஒன்றும் உண்டு.

ஓர் ஆட்டிடையன் கடற்கரையில் தனது ஆடுகளை மேய்ப்பது வழக்கம். ஒருநாள் தனது ஆடுகளை மேய விட்டுவிட்டு, அருகிலிருந்த உயர்ந்த பாறையின்மேல் வந்து உட்கார்ந்தான். ஸமுத்திரத்தை நோக்கினான். அது அலையற்ற பாய் விரித்ததுபோல அசைவற்றுச் சாந்தமாக இருந்தது. வேலையற்றிருந்ததால் ஆட்டிடையன் மனோராஜ்யம் செய்யத் தொடங்கினான். 'ஆஹா! என்ன ஸமுத்திரம்! இதில் கப்பல் யாத்திரை செய்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! மேலும் இதில் கப்பல்கள் மூலமாகச் சரக்குகள் கொண்டுபோய் வியாபாரிகள் தமது வியாபாரத்தால் பெரிய பணக்காரராகின்றனர். நாம் மாத்திரம் கரையிலிருந்து வெயிலிலும் மழையிலும் அடிபட்டு ஸுகங்கள் யாதொன்றும் இன்றி வருந்துவானேன்!' என்று எண்ணமிட்டு விட்டுத் தன் ஆட்டு மந்தையை விற்றுவிட்டு வியாபாரியாகி 'திரைகடலோடித்திரவியம் தேட'த் துணிந்தான். மறுநாள் அவன் அவ்வாறே செய்து பின்னர் கப்பல் யாத்திரை செய்யத் தொடங்கிவிட்டான். போகும் வழியில் ஓர் பெரும்புயல் அடிக்கத் தொடங்கிவிட்டது. கப்பல் முழுகிவிடும்போலத் தோற்றியது. இப்படியிருக்கையில் கப்பல் கரைஓரமாக வர ஓர் பாறையில் மோதி தவிடுபொடியாகி விட்டது. மிகுந்த பசியுடன் அருகாமையிலிருந்த கிராமத்துள் போய் அங்கு ஒருவனிடம் ஆட்டிடையனாக அமர்ந்தான். மறுபடியும் முன்போல ஒரு நாள் ஆடுகளை மேய விட்டுவிட்டு ஸமுத்திரக்கரையில் ஓர் பாறையின் மேல் இவன் வந்து உட்கார்ந்தான். முன்போல ஸமுத்திரம் அசைவற்றுச் சாந்தமாக இருந்தது. கண்டான் இடையன்! ஆனால் முன்போல ஏமாறவில்லை. 'என் வேலையில் எவ்வளவு கஷ்டமிருக்கிறதோ, அதுபோல வாணிபத்திலும் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் என் வரையில் நோக்கில் வாணிபம் எனக்குத் தகுந்ததல்ல. மேலும் நான் கடலின் சாந்தத்தைக் கண்டு இனி மோசம் போகேன்.' என்று தீர்மானம் செய்தான். இம்மாதிரி இக்கரைக்கு அக்கரைபச்சை என்பதன் உண்மையை உணர்ந்தவர்கள் பிறர் நிலை தனக்கு வேண்டும் என்று வீண் எண்ணங்களை எண்ணார்கள். தாயுமானவர் கூறியபடி

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப்
போதும் பராபரமே

என்றுகூறி மனம் ஆறி இருப்பர் இத்தகையோர்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADiES' PAGES

## கௌரி அல்லது வேற்றுமை அழிவு

தான் வந்த குலத்தின் நிலைமையை எண்ணாது, கொண்ட கணவனது குலத்தையே யுயர்ந்ததாக எண்ணி, அவர்க்குத் தக்கவாறு நடத்தல்தான் பெண்டிரின் குணத்தை உயர்த்தும் தன்மையது. மனமுழுதும் தன் கணவன் வழிபாட்டின் பொருட்டு ஒடுக்கித் தன்னைப்பற்றிய கவலைகள் சேரவிடாது, கணவர்க்குக் குறை ஒன்றும் வாராதிருக்கும்படிச் செய்வதுதான் குலமங்கையரின் குணம். தான் வந்தவீட்டின் பெருமையையும, அங்கு ஒன்றுமில்லாவிடினும் தான் வளர்ந்த இடத்துக்கொண்ட ஆசையையும், தன்னையும்தாண்டி மேற்செல்லும்படி விடாதுதான் புகுந்தவீடு எத்தகையதாகினும் கீழ்மைப்படுத்தாது கௌரவமுடையதாக வெளியிற் காட்டுவதன்றி, மனத்திலுமவ்வாறே எண்ணி நடப்பதுதான் பெண்ணின் குணமென்று சொல்லப்படும். அத்யந்த விச்வாசமும், தயையும், குணமுங் கலந்து, கணவனை ஆதரித்தலே பெண்டிரது பெருமையை விஸ்தரிக்கச் செய்கிறது. அது மாத்திரமன்று: தான் பிறந்த வீட்டின் பெயரையும் விளங்கச்செய்யும். இத்தகையாரு முண்டென்பதற்கோர் உதாரணம் காட்டுவோம்.

முற்காலத்தில் பாண்டிய நாட்டரசர் மதுரையில் அரசாட்சிசெய்த காலத்தில் அவ்வூரில் ஓர் பிராஹ்மணன் இருந்தனன். ஆழ்ந்த படிப்பும், சிறந்த ஒழுக்கமும்கூடி பெருமையோடு விளங்கிய இவர்க்கு ஓர் பெண் குழந்தைபிறந்தது. சிவபிரானிடம்கொண்ட ஆசையென்னும் கடலிலாழ்ந்து நின்ற தனக்குண்டாகிய பெண் குழந்தைக்குக் கௌரியெனப் பெயரிட்டனன். அவளுக்குச் சிறுவயதிலேயே தனக்கு, வந்த சிறந்த குணங்கள் படிந்து பெருமை எய்துவண்ணம், நற்குண கவிதைகளும, சாஸ்திர விஷயங்களும் கற்பித்துக், கடவுளிடத்தன்பொழுகுமாறு பஞ்சாக்ஷரஉபதேசஞ்செய்து ஒழுக்கத்திற் சிறக்கும்படி வளர்த்து வந்தனர்.

பெண்ணிற்கு வயதாயதும், அவளுக்குத்தக்க கணவன் வேண்டுமெனத் தேட ஆரம்பித்தனர். எவராயினும் சரி, படிப்பிலுழைத்தவனும், குலத்திலுயர்ந்தவனும், குணத்திற் சிறந்தவனுமாகியவற்கே தன் பெண்ணைக் கொடுப்பதாக நிஸ்சயித்துக் கொண்டார்.

அழகின் ஜ்வாலையால் உள்ளம் புகையாதவர் யாவருண்டு? அவ்வூரில் பிச்சைக்கொண்டு வாழும் வைணவ ப்ராஹ்மணனொருவன். மிகப் படித்தவன். இவளைக் கண்டு மோஹங்கொண்டவனாய் எவ்வாறேனும் அவளை மணப்பது என்னும் எண்ணம் கொண்டு அலைந்து வந்தனன். அவன், அவள் தகப்பன் மனத்திலுள்ள எண்ணம் இன்னதென்றும் அறிந்தனன். அறிந்ததும் பிச்சைக்கு வருமுன் ஒருநாள் வைகையாற்றங்கரையில் தானணிந்திருந்த நாமங்களை எல்லாம் அழித்துவிட்டுச் சுத்தமாகிய விபூதியை முறைப்படி அணிந்து அப்பார்ப்பணன் வீட்டிற்குப் பிச்சைகொள்ள வந்தனன்.

வந்ததும் அவன் வேத முதலிய சொல்லும் வகையாலும், நடந்து கொள்ளும் ஒழுக்கத்தாலும் நன்றாகவே தோன்றுகின்றனன். இவனுக்கே நமது குழந்தையை மனைவியாகச் செய்யவேண்டும் என்று எண்ணம் கொண்டவனாய், அப்பொழுதே அவ்விடத்து அவனுக்குக் கௌரியை அளித்து மணஞ்செய்வித்தனன்.

முற்காலத்தில்மணம் ஆகியதும் பெண் கணவன் வீடே சேரவேண்டும். அதன்பின் கணவனது ஆஞ்ஞையின்றித் தந்தைவீடு நோக்கலாகாது. ஆகையால் கௌரி தனது கணவனுடன் வையையாற்றைக் கடந்து வந்தனள். கடக்கும்போழ்தங்குத்தனது தலைவன் விபூதிமுதலியவற்றை ஒழித்துத் திருமண காப்பிட்டுக் கொண்டு தன் வீடுநோக்கலானான். இதை எல்லாம் கௌரி கண்டனள். கொஞ்சமேனும் அருவருப்பென்பதின்றி அவர் பின்னே நடந்தனள். தன் சாதி யில்லாதவனை மணந்ததாக அவள் எண்ணவில்லை. அவளுக்குத் தனது கணவனது சாதியே தனது என்று திடமான சித்தமிருந்ததால்தான் அவள் இவ்வாறிருந்தாளென்பது நாம் சொல்லவேண்டியதில்லை.

தன் வீட்டிற்கு வந்த வைணவன் கௌரியை வீட்டு வாயலில் நிறுத்தித் தன் பெற்றோரது ஆஞ்ஞை பெற்று அவளை ஓர் தனி அறையுள உற்றிருக்கச் செய்து தாமுண்டு எஞ்சியவற்றை அளிப்பது வழக்கம். தனக்கவைப் பிடிக்காவிடினும் கணவன்பாற் கொண்ட அன்பினால் அதைச் சிறந்த அமுதமாக உண்டு வாழ்ந்து வந்தாள்.

இவ்வாறிருக்கும் ஸமயத்தில் வைணவனும் அவன் கூட்டத்தாரும் ஓர் மணத்திற்குப் போகவேண்டி வந்தது. அப்பொழுது அவர் கௌரியை வாசல் அறையுள் வைத்து வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படி போயினார். இதைத் தலைமேற்கொண்டு ஒழுகித் தன்தந்தையூட்டிய பஞ்சாக்ஷரத்தைச் சபித்து வரும் நாளில் ஓர் கூன்கொண்டுவந்த கிழவனொருவன் அவ்வீட்டிற்கு வந்து "யான் மிகப் பசிப்பிணிப்படுகிறேன். அதைத் தணிக்கவேண்டும்" என்று கேட்டனன். "என்னிடம் திறவுகோலில்லை" என்றாள் கௌரி. "நீ சென்றுபார். கதவு திறக்கமுடியும்" என்றார் கிழவர். அவளுமவ்வாறங்குச் சென்று கதவு தொட்டதும் திறந்தது. உடனே மடபள்ளிக்குள் சென்று நல்லுணவை அவர்க்கு அளித்துக் கொண்டிருந்தனள். இதற்குள் வாலிபன்போல் வடிவுகொண்டு பெருமான் கௌரியின் மனம் துடிதுடிக்கச் செய்தனர். இவ்வாறிருக்கும் ஸமயத்தில் வாயிலில் தன் கணவன் முதலியவர் வந்து

கூவுவதைக் கேட்டுத் திக்ப்ரமையுற்று என் செய்வதென்று தெரியாது மயங்கி மெதுவாக கதவைத் திறந்ததும், அங்கு ஓர் குழந்தை குவா குவா என்ற முழக்கத்தைக்கண்டனர். வாலிபனைக் காண முடியவில்லை. இதைக் கண்டவர் "ஹே! சண்டாளி! குலத்தைக் கெடுத்தக் கோடரிக்காம்பே! நடத்தையும் குறைந்த கொடியாய்! தூரச்செல்" என்று கூவுவதைக் கண்டதும் அயர்ந்து மெலிந்து விளங்கினாள் கௌரி. இதனிடையே அக்குழந்தையையும் காண முடியவில்லை. முடியாமையால் கௌரியை ஓர் பேய் என்று அவர் நிஸ்சயித்து பலவாறு துன்பப் படுத்தினர்.

கணவன்பாற் கொண்ட அன்பின் முதிர்ச்சியால் அவர் செய்ததெல்லாமவளுக்குத் துன்பமாகவே படவில்லை. சிவபிரானும் கருணைகூர்ந்து ரிஷபாரூடராகிசேவை தந்து அவளுக்கு மோக்ஷமளிப்பதாகக்கூறினர். அதைக்கேட்ட கௌரி "எனக்கு மோக்ஷம் வேண்டியதில்லை. என் கணவனுர்க்கு மோக்ஷ ஸாதனமளித்து அவர் அதை அடையுமாறு ஊழியஞ் செய்ய ஏழையேற்கு அருளும்" என்று கூறிய மொழிகளைக் கேட்டவர் தம்பதியரிருவருக்கும் மோக்ஷமளித்தார் என்பது ஸ்ரீபரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடற்புராணத்தின் விருத்த குமார பாலரான படலத்தை ஒருவாறு தழுவி எழுதப்பட்டது.

வா. சேஷகிரி.

---

புருஷனைக் காப்பாற்றும் பதிவிரதை.—ஓர் பொல்லாத மனிதன் தன் பெண்சாதியை அடித்து அடித்து அவள் காதைக் கடித்ததற்காகப் போலீஸ் கோர்ட்டில் கொண்டுவரப்பட்டான். பெண்சாதி மிகவும் நல்லவளானபடியால் தன் புருஷனைத் தப்பித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் கோர்ட்டுக்குப் போனாள். அவள் வாக்குமூலத்தை வாங்குகிறதற்காக நியாயாதிபதி அவளைக் கூப்பிட்டு 'உன் புருஷன் உன்னைக் குரூரமாய் நடத்தினனல்லவா? என்று கேட்டார். அதற்கு அவள் "இல்லை துரைகளே" யென்று மறுமொழி கொடுத்தாள். "என்ன? அவன் உன் காதைக் கடித்துக் கொஞ்சம் சதையை எடுத்துப்போடவில்லையா?" வென்று ஆத்திரமாய்க் கேட்டார். அப்போது நிஷ்கபடமுள்ள அந்த நல்ல ஸ்திரீயானவள் "இல்லை துரைகளே, நானே கடித்துக்கொண்டேன்" என்றாள். நியாயாதிபதி பெண்சாதியின் விசுவாசத்துக்காகப் புருஷனை மன்னித்துப் போட்டார்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

---

ஜப்பான் நாட்டின் விரிவு.—பன்னிரண்டு வருடங்களுக்குமுன் ஜப்பானிய ராஜ்யம் 3,20,000-சதுரமைல் விஸ்தாரமுள்ளதாயிருந்தது. சீனாவோடு யுத்தஞ்செய்து ஜயமடைந்த பின்னர் 35,000-சதுரமைல் ஜப்பான் ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டது. ஐரோப்பா கண்டத்திற் பாதி என்று சொல்லக் கூடிய பெரிய நாடாகிய ருஷியாவுடன் யுத்தஞ்செய்து வெற்றியடைந்தபின் 250,000-சதுரமைல் சேர்க்கப்பட்டது. ஆகவே ஜப்பான் ராஜ்யம் இப்போது முன்னிலும் இருமடங்கு விஸ்தாரமுள்ளதாகவிருக்கிறது.

***

மணிலாக்கோட்டை.—புதுச்சேரி துறைமுகத்தில் நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான நிலக்கடலை மூட்டைகள் ஏற்றப்படுகின்றன.

***

காகிதம் செய்வதற்குத் தகுந்த ஏற்பாடு.—காகிதம் செய்யும் தொழிலைப் பலப்படுத்தும் நோக்கத்தோடு இம்பீரியல் பாரஸ்டு ரீஸர்ச்சு இன்ஸ்டிட்யூடார் இந்தியாவில் மரச்சோறு செய்யும் முறையை அனுபவமூலமாய் விளக்கத்தகுந்த ஏற்பாடு செய்ய முயன்று வருகிறார்களாம்.

***

பிரிட்டிஷ் வர்த்தகக் கணக்குகள், லண்டன், ஜனவரி 8.—இவ்வருஷத்திய பிரிட்டிஷ் இறக்குமதி சாமான்களின் விலை 62,47,40,000 பவுன் என்றும், பிரிட்டிஷ் ஏற்றுமதி சாமான்களின் விலை 37,83,79,000 பவுன் என்றும், இவை முறையே முன் வருஷத்தைக் காட்டிலும் 3,959,899 பவுனும், 43,88,321 பவுனும் அதிகப்பட்டிருக்கின்றன வென்றும் அறிவிக்கப்படுகின்றது. ஏற்றுமதியில் அதிகமான சாமான்கள், இரும்பு, உருக்கு, பருத்தி, கம்பளி, கைத்தொழிற் சாமான்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

***

ஜெர்மனியின் பருத்தி வியாபாரம், லண்டன், ஜனவரி 9.—தென் ஜெர்மனிப் பருத்திக் கைத்தொழிற் சங்கத்து அக்கிராசனாதிபதி வெளியிட்டிருக்கும் சென்ற வருஷத்திய ரிபோர்ட்டில், ஜெர்மனி

யின் பருத்தி வியாபாரம் சென்ற வருஷத்தில் மிக க்ஷீணதசை அடைந்திருக்கின்றதென்றும், இவ்வருஷத்திலும் இன்னும் ஆறுமாதகாலத்துக்கு ஜெர்மன் பருத்தி வியாபாரம் தலைதூக்காது என்றும் கூறுகிறார்.

***

அமெரிக்காவில் இந்து தேவாலயம்.—அமெரிக்காவைச் சேர்ந்த ஸான் பிரான்ஸிஸ் கோவில் ஒரு இந்து தேவாலயம் நிர்மாணமாகிச் சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண வர்க்கத்தாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அது தாஜ் மஹால் போன்று இந்து, மகம்மதிய கிரிஸ்தவக் கோயில்களின் சிற்ப லக்ஷணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றுப் பார்க்க வெகு அழகாய் விளங்குகிறதாம் அந்தத் தேவாலயத்தில் வழிபடுவோர் எல்லோரும் அமெரிக்கரே என்று தெரிகிறது.

***

சாதுரீயமான ரணவைத்தியம்.—இங்கிலாண்டிலுள்ள பர்மிங்ஹாம் பட்டணத்தில் ஒருவன் சாராயத்துக்குப் பதிலாய் ஏதோ ஒரு திராவகத்தைக் குடித்துவிட்டான். அதனாலே அவனது நெஞ்சு புண்ணாகிவிட்டது; ஆசுபத்திரியில் சிகிச்சை செய்துகொண்டபோது, டாக்டர்கள் அவனைச் சாராயம் முதலான லாஹிரிவஸ்துக்களை இனி யுபயோகிக்க வேண்டாமென்று எச்சரித்தார்கள். ஆனாலும் அவன் கேட்கவில்லை. ஆசுபத்திரியிலிருந்து வெளிவந்ததும் பழய வழியில் திரும்பித் திராவக மதிகமுள்ள சாராயாதிகளைக் குடித்து முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகத் தொண்டையைப் புண் செய்துகொண்டான். ஆகாரம் உள்ளே செல்வதில்லை. அதனால் மிக்க அவதியடைந்த அந்த வியாதியஸ்தனண்டை ரணவைத்திய ரொருவர் வந்து கழுத்துக்கு இடதுபாகத்தில் பக்கவட்டாய் ஓர் குழாயைவைத்து அதன்வழியாக அன்னயானாதிகளை உள்ளே செலுத்திவர, காலக்கிரமத்தில் இந்த வாயே அவ்வியாதியஸ்தனின் ஜீவாதாரத்திற்குப் போதியதாய் விளங்குவதாகக் கூறப்படுகின்றது. என்னே ரணவைத்தியத்தின் சாமர்த்தியம்.

***

ஒரு நூதன யந்திரம்.—நிலத்திலும் தண்ணீரிலும் போகும் மோடார் வண்டிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துவரும் இக்காலத்தில் மனிதனை ஆகாயத்தில் பறக்கத்தக்க ஒரு புது யந்திரம் வரப்போகிறதாம். இதை லிலிந்தால் என்னும் ஜெர்மன் தேசத்தவர் கண்டுபிடித்திருக்கிறார். சாதாரணயாயோடும் மோடார்வண்டிக்கு எந்த விதமான இயக்கும் விசைவேண்டுமோ அந்த விதமான விசை யெதுவும் இந்தப் புதிய யந்திரத்திற்கு வேண்டுவதில்லையாம். இதை யோட்டுவிக்க சாமான்ய மனிதனாகட்டும் ஸ்திரீயாகட்டும் முன்வந்து முயற்சிக்கலாம். அவர்களுக்கு இருக்கக் கூடியசொற்ப பலத்தைக்கொண்டே இந்த யந்திரத்தைத் தாங்கி மனிதப் பறவைபோல் வானத்தில் பறக்கமுடியுமாம். பைஸிக்கில் வண்டியில் ஏறி வீதி வழியாய் எவ்வளவு சுலபமாய்ச்சவாரி செய்கின்றோமோ அவ்வளவு சுலபமாய் இந்த யந்திரத்தினால் ஆகாயத்தில் பறக்கமுடியும். இது ஒரு பட்சியுருவத்தைப்போலிருக்கிறது. இதைத் தாங்கிக் ககனமார்க்கமாய்ச் செல்லுமொருவன் வேலை செய்ய முடியாமல் சோர்வடைந்து விட்டால் யந்திரம் தானே மெதுவாகக் கீழ்க்கொண்டு வந்து சேர்த்து விடுமாம். என்னையே கலிகால விநோதம். பூர்வம் இந்திரஜித்து முதலான இராக்ஷசர்கள் ஆகாசசஞ்சரிகளாய் மேக மண்டலத்தில் மறைந்துகொள்ளுந் தன்மையராயிருந்தார்களென்று புராணங்களில் படித்திருக்கிறோமே. இந்த நூதன யந்திரம் பலித்துப்போமாகில், பூர்வம் இருந்தது உண்மையாகுமென்று சொல்ல வேண்டியதனாவசியம்

***

தலை ஜோடிப்புக்காகப் பறவைகளைக் கொல்லுதல்.—ஐரோப்பிய துரைசானி மார்களின் தொப்பிகள் பல பறவைகளின் சிறகுகளால் அலங்கரிக்கப்படுகின்றன. இதற்காக வருஷத்தில் எத்தனை கோடி பறவைகள் வீணாய்க் கொல்லப்படுகின்றன. இதற்காக வருஷத்தில் எத்தனை கோடி பறவைகள் வீணாய்க் கொல்லப்படுகின்றனவென்று யோசித்தால் மெய்யாகவே வியசனிக்கத் தக்கதாயிருக்கிறது. 30-வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் 30,00,000-நாரைக் கூட்டங்களிருந்தன. சீனா தேசத்திலும் நாரைகள் ஏதேஷ்டமாயிருந்தன. இப்போது அமெரிக்காவிலும் சீனாவிலும் வெள்ளை நாரையென்பதே கிடையாது. வெஸ்டு இண்டியா தீவுகளில் சர்க்கார் சட்டம் கெடுபிடி பண்ணினபோதிலும் பலவித ரீங்காரப் பக்ஷிகள் அடியோடு தொலைக்கப்பட்டன. ஆஸ்ட்ரேலியா, டாஸ்மேனியா முதலான தீவுகளில் எழு என்ற அழகுள்ள சிறகுகளையுடைய பறவை ஜாதி முழுவதும் அற்றுப்போயிற்று. மனுஷருடைய சிலாக்கியத்துக்காக எத்தனை அருமையானபக்ஷிகள் நாசப்படுகின்றன;